தமிழ் ④

தமிழ்

நான்காம் வகுப்பு

தீண்டாமை ஒரு பாவச் செயல்

தீண்டாமை ஒரு பெருங்குற்றம்

தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதற்பதிப்பு—1982

ஆசிரியர் :

புலவர் சு. கோவிந்தசாமி,
தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
நந்திவரம்,
செங்கை மாவட்டம்

மேலாய்வாளர்கள் :

புலவர் கோ. வில்வபதி,
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்,
ஏஏ-49, அண்ணா நகர்,
சென்னை-600 040

புலவர் கு. சோ. முருகன்,
தமிழாசிரியர்,
சர்வஜன மேல்நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்

விலை : ரூ. 2-20

இந்நூல் இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :

பிரின்ட் ஹவுஸ் (மக்கள் குரல்), சென்னை-600 024

தேசிய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா.
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
    திராவிட உத்கல பங்கா.
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்கா.
தப சுப நாமே ஜாகே
    தப சுப ஆசிஸ மாகே
    காஹே தவ ஜய காதா.
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
    ஜய ஜய ஜய ஜயஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

நாட்டுப்பண்—பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக். கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் - பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.'

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

பொருளடக்கம்

		பக்கம்
1.	தமிழகம்	1
2.	வள்ளுவர் கோட்டம்	5
3.	**முழுமை நிலா** (பாடல்)	8
4.	வாக்குத் தவறாத வாய்மையாளர்	10
5.	நாகன் செய்த நற்செயல்	13
6.	நோயற்ற வாழ்வு	17
7.	பொன்	20
8.	**காகமும் நாகமும்** (பாடல்)	23
9.	இன்பச் செலவு	24
10.	மான்	28
11.	கவிமணி	31
12.	**நேருவின் அறிவியல் ஆர்வம்** (பாடல்)	35
13.	பனைவளம்	37
14.	சென்னைக் கடற்கரை	40
15.	பாதிக்குப் பாதி	43
16.	**வானொலி** (பாடல்)	46
17.	உழவுத் தொழில்	47
18.	அன்பின் சின்னம்	51
19.	கடிதம் எழுதுதல்	54
20.	ஊனமுற்றோர்க்கு உதவல் (உரையாடல்)	57
21.	**படைப்பின் விசித்திரம்** (பாடல்)	60
22.	மின்விளக்கைக் கண்டறிந்தவர்	63
23.	பழமொழிகள்	66
24.	காலம் காட்டும் கருவி	67
25.	**கல்வி கற்றலின் பயன்** (பாடல்)	71
26.	வாழையடி வாழை (நாடகம்)	72

செய்யுள்

(அ)	**நீதிப் பகுதி**	77
(ஆ)	**இயற்கையழகு**	85
	சொற்பட்டியல்	87

மனப்பாடப் பகுதி

		அடிகள்
1.	நல்வழி	40
2.	நீதி வெண்பா	20
3.	நன்னெறி	20
4.	அறப்பளீசுர சதகம்	8
	மொத்தம்	88

கடவுள் வணக்கம்

அன்பைப் பெருக்கிஎன தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே! இறையே! பராபரமே!

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி, இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய், பராபரமே!

— தாயுமானவர்

நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட
நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்பதனை எண்ணிப்பார்.

—கென்னடி

1. தமிழகம்

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் வாழும் நிலப்பகுதி தமிழகம் எனப்படும். இத்தமிழகம், பழைமையும் பெருமையும் வாய்ந்தது. வடக்கில் வேங்கட மலையும் தெற்கில் குமரிமுனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் இதன் எல்லைகளாக முன்பு விளங்கின.

இந்நிலப் பகுதியை முன்பு சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆண்டனர். அதனால் தமிழகம் பழங்காலத்தில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று மூன்று பிரிவுகளாக அமைந்திருந்தது. தொண்டை நாடு, நடு நாடு, கொங்கு நாடு என்னும் பிரிவுகளும் இருந்தன. இவற்றைக் குறுநில மன்னர்கள் ஆண்டுவந்தனர்.

இன்றுள்ள தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்கள் அடங்கிய நிலப்பகுதியே முன்பு சோழ நாடாக விளங்கியது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய பகுதி பாண்டிய நாடு எனப் பட்டது. இப்போது மலையாள மொழி பேசப்படும் கேரளம் முன்பு சேர நாடாக இருந்தது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்கள் அடங்கிய பகுதி தொண்டை நாடு என்று வழங்கப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டமே நடுநாடாகும். சேலம், தருமபுரி, பெரியார், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்கள் அடங்கிய பகுதி கொங்கு நாடு என்று பெயர் பெற்று விளங்கியது.

தமிழகத்தில் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, தாமிரவருணி முதலிய ஆறுகள் பாய்ந்து வளம் செய்கின்றன. அதனால், இங்குச் செந்நெல்லும் கரும்பும் பலவகைத் தானியங்களும் செழிப்பாக விளைகின்றன. காவிரி பாய்ந்து வளஞ்செய்வதால் சோழ நாடு பண்டு முதல் வயல் வளத்தில் சிறந்து விளங்குகிறது. அதனால், தஞ்சை மாவட்டம் இன்றும் 'தமிழகத்தின் நெற்களஞ்சியம்' எனப் போற்றப்படுகின்றது.

தேக்கு, சந்தனம் போன்ற விலையுயர்ந்த மரங்கள் செறிந்த காடுகளும் வானளாவிய மலைகளும் முத்து விளையும் கடல் துறைகளும் தமிழகத்தைச் சூழ்ந்துள்ளன. இத்தகைய வளமான நாட்டில் வாழும் நாம், பெரும் பேறு பெற்றவர் களாவோம்.

நம் தமிழகத்தில் கல்வி சிறந்திருந்தது. ஆண்களும் பெண்களும் கல்வி கற்று அறிவுடையவராய் விளங்கினர். திருவள்ளுவர், ஔவையார், இளங்கோவடிகள், கம்பர் போன்ற புலவர்களும் கவிஞர்களும் வாழ்ந்த பெருமையுடையது நம் தமிழகம். அவர்கள் இயற்றிய நூல்கள் இன்றும் தமிழுக்கு அணி செய்கின்றன.


ஆந்திரம்
கர்நாடகம்
சென்னை
வட ஆர்க்காடு
தருமபுரி
பெரியார்
நீல்கிரி
சேலம்
கடலூர்
தென்னார்க்காடு
கோயம்புத்தூர்
திருச்சிராப்பள்ளி
கேரளம்
மதுரை
புதுக்கோட்டை
இராமநாதபுரம்
திருநெல்வேலி
கன்னியாகுமரி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
தொண்டை நாடு
நடு நாடு
சோழ நாடு
கொங்கு நாடு
பாண்டி நாடு
சேர நாடு

கல்வியில் மட்டுமன்றிக் கைத்தொழிலிலும் வாணிகத்திலும் தமிழகம் உலகப் புகழ் பெற்று விளங்கியது. உழவும் நெசவும் தமிழகத்தின் உயிர்த்தொழில்களாய் விளங்கின. நம் முன்னோர் மேலைநாடுகளுடனும் கீழை நாடுகளுடனும் கப்பல்கள் மூலம் வாணிகம் செய்தனர்; பெரும்பொருள் ஈட்டினர்; பஞ்சமும் பசியும் அறியாமல் இன்பமாக வாழ்ந்தனர்.

பஞ்சமும் பசியும் இல்லாத நாட்டில் உயர்ந்த கலைகள் தோன்றி வளர்வது இயல்பாகும். எனவே, தமிழகத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் வளர்ந்தன; சிற்பம், ஓவியம் போன்ற பல கலைகளும் சிறந்து விளங்கின.

தமிழ் மக்கள் உயர்ந்த நாகரிகமும் சிறந்த பண்பாடும் உடையவர்களாய் விளங்கினர்; அன்பும் அறமும் உடையவர்களாய்த் திகழ்ந்தனர். விருந்து ஓம்புவது தமிழர்களின் தலைசிறந்த பண்பாடாகும்.

தமிழ் மன்னர்கள் மக்கள் நலமே குறிக்கோளாய் நல்லாட்சி நடத்தினர்; நீதியை உயிரினும் மேலாக மதித்துப் போற்றினர். வீரமும் ஈரமும் அவர்களுக்கு இரு கண்களாய் விளங்கின.

இங்ஙனம் பலவகையிலும் பெருமை பெற்று விளங்கிய தமிழகத்தில் தோன்றிய நாமும் நம் முன்னோர்களைப் போலப் புகழுடன் வாழ வேண்டும். தமிழகத்தின் பழம்பெருமைகளைப் பேணிக் காக்கவேண்டும்.

அருஞ்சொற்பொருள்

வாய்ந்தது - பொருந்தியது, வேங்கடம் - திருப்பதி, கொங்கு நாடு - தேன் பொருந்திய நாடு, குறுநில மன்னர் - சிறு நாடுகளுக்கு அரசர் (சிற்றரசர்), நெறகளஞ்சியம் - நெல்லைச் சேகரித்து வைக்கும் இடம், செறிந்த - அடர்ந்த, வான் அளாவிய - வானத்தைத் தொடுகின்ற, பெரும்பேறு - பெருஞ்செல்வம், அணி - அழகு, உயிர்த்தொழில் - இன்றியமையாத தொழில், ஈட்டினர் - சம்பாதித்தனர், குறிக்கோளாய் - இலட்சியமாய், ஈரமும் - கருணையும், பேணிக் காக்கவேண்டும் - விரும்பிக் காப்பாற்ற வேண்டும்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. தமிழகத்தின் எல்லைகளாக முன்பு விளங்கியவை எவை ?
2. பண்டைத் தமிழ்நாட்டின் பெரும் பிரிவுகளையும் சிறு பிரிவுகளையும் எழுதுக.
3. தமிழ்நாட்டை வளப்படுத்தும் ஆறுகள் யாவை ?
4. தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்று எதற்குப் பெயர் ? ஏன்?
5. பழந்தமிழகத்தின் கல்விச் சிறப்பை எழுதுக.
6. தமிழ்நாட்டின் உயிர்த் தொழில்களாய் விளங்கியவை எவை?
7. தமிழ் மக்களின் குண நலன்கள் யாவை?
8. தமிழ் மன்னர்கள் எவற்றை இரு கண்களாகப் போற்றினர் ?

(ஆ) சேர்த்து எழுதுக:

வேங்கடம் + மலை
வளம் + செய்கின்றன
பசியும் + இல்லாத
மதித்து + போற்றினர்

(இ) பிரித்து எழுதுக:

குறுநிலமன்னர், நெற்களஞ்சியம், விலையுயர்ந்த, வானளாவிய, முத்தமிழ், கீழைநாடுகள்

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பழைமையும் பெருமையும், வானளாவிய, பஞ்சமும் பட்டினியும், வீரமும் ஈரமும், அன்பும் அறமும்.

(உ) எதிர்ச்சொல் தருக:

பழைமை	×	கீழைநாடு	×
புகழ்	×	அறம்	×

இலக்கணம்

எண் — ஒருமை, பன்மை

ஆறு, மலை, மரம் — இச்சொற்கள் ஒரு பொருளைக் குறிக்கின்றனவா? ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கின்றனவா? இவை ஒரு பொருளைக் குறிக்கின்றன. எனவே, இவை ஒருமைச் சொற்களாம்.

ஆறுகள், மலைகள், மரங்கள் — இச்சொற்கள் பல பொருள்களைக் குறிக்கின்றன. ஆதலின் இவை பன்மைச் சொற்கள் எனப்படும்.

பெயர்ச்சொல்

கரும்பு, சந்தனம், முத்து, நாடகம்—இச்சொற்கள் எவற்றை உணர்த்துகின்றன? இவை ஒன்றன் பெயரை உணர்த்துகின்றன. இவ்வாறு ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் என்று சொல்லப்படும்.

பயிற்சி

(அ) பின்வரும் சொற்களுள் ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் எழுதுக:

நாடு, கடல், தானியங்கள், வேந்தர், புலவன், வளர்ந்தது, நூல்கள், மாவட்டங்கள்.

(ஆ) கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களை மட்டும் தனியே எடுத்து எழுதுக:

1. சோலையில் கிளிகள் பறந்து திரியும்.
2. தமிழர்கள் தமிழ் மொழியைக் கண்போல் காத்தார்கள்.
3. மலையில் விலங்குகள் பதுங்கி வாழ்கின்றன.
4. குறுநில மன்னர்கள் சிறு நாடுகளை ஆண்டார்கள்.

2. வள்ளுவர் கோட்டம்



அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி. தமிழில் மக்கட்கு வேண்டிய நீதிகளைக் கூறும் நூல்கள் பல உள்ளன. அவற்றுள் தலைசிறந்தது திருக்குறள். அது சாதி சமய வேறுபாடில்லாமல் எல்லார்க்கும் பொதுவான நீதிகளை எடுத்துக் கூறுகிறது. அதனால், அஃது 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது.

குறள் என்பது இரண்டு அடிகளைக் கொண்ட பாட்டு. இந்நூல் முழுதும் அத்தகைய பாடல்களாலேயே பாடப்பட்டுள்ளது. அதனாலேயே இது 'திருக்குறள்' எனப் பெயர் பெற்றது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. அதனால், 'முப்பால்' என்றும் இதற்கு வேறு பெயர் உண்டு.

உலகம் போற்றும் இந்த உயர்ந்த நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்பவ ராவார். அவர் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர். அவரது வரலாறு தெளிவாகத் தெரியவில்லை.

தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெரும்புகழைத் தேடித் தந்த வள்ளுவரைத் தமிழர்கள் தெய்வப்புலவர் எனக் கொண்டாடுகின்றனர்; கோயில் அமைத்து வழிபடு கின்றனர். அவர் வாழ்ந்ததாகக் கூறப்படும் மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயில்

ஒன்றுள்ளது. சென்னை மாநகரில் 1968ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் சென்னைக் கடற்கரையில் வள்ளுவர்க்குச் சிலை வைக்கப் பட்டது. இந்தியப் பேரரசு, அவரது உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டுப் பெருமைப்படுத்தியது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழக அரசு சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர்க்கு ஒரு கோட்டம் அமைத்துள்ளது. அவ்வள்ளுவர் கோட்டம் கலைச் சிறப்பு வாய்ந்த அழகிய கட்டடமாகும். அக்கோட்டத்தில் கல்லால் செய்யப்பட்ட தேரில் வள்ளுவர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அத்தேர், இரு யானைகள் இழுத்துச் செல்வதுபோல் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அத்தேரில் திருக்குறளின் 133 அதிகாரங்களையும் நினைவூட்டும் வகையில் அருமையான சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

தேருக்கு முன்னால் 200 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட ஒரு பெரிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தூண்களே இல்லாத இம்மாமண்டபம் தெற்காசியாவிலேயே மிகப் பெரியதாகும்.

மண்டபத்தைச் சூழ அமைந்துள்ள பெரிய தாழ்வாரங்கள் இரண்டு அடுக்கு களாக உள்ளன. மேலடுக்கு, 'குறள்மணி மாடம்' என வழங்கப்படுகிறது. இந் நினைவாலயத்திற்குப் பெருமை சேர்ப்பது இக்குறள்மணி மாடமேயாகும். இங்குத் திறந்த புத்தகத்தினைப் போல இரண்டிரண்டாகத் தேய்த்து மெருகூட்டிய கற் பலகைகள் வரிசையாகப் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில், திருக்குறளின் 133 அதிகாரங்களும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தின் முன்புறத்தில் கலைச்சிறப்புடன்கூடிய மூன்று வாயில்கள் உள்ளன. அவை அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களையும் குறிக் கின்றன. வாயிலுக்கும் மண்டபத்துக்கும் இடையில் அழகிய பூங்காவுடன்கூடிய நிலப்பரப்பு காணப்படுகிறது.

வள்ளுவர் கோட்டம், வள்ளுவர்க்கு அழியாத நினைவுச் சின்னமாக விளங்குவதோடு தமிழகச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும் உள்ளது. இக் கலைக் கோயில் சென்னைக்கு வருவோர் கண்டு களிக்கத்தக்க அற்புதப் படைப் பாகும்.

அருஞ்சொற்பொருள்

தலைசிறந்தது - மிக உயர்ந்தது, பொதுமறை - எல்லா மதத்தார்க்கும் பொதுவான வேதம், சமூகம் - மக்கள் கூட்டம், பால் - பிரிவு, இயம்புகிறது - சொல்கின்றது, வழிபடுகின்றனர் - வணங்கு கின்றனர், கோட்டம் - கோயில், வாயில் - நுழையுமிடம், எடுத்துக்காட்டு - உதாரணம், கண்டு களிக்கத் தக்க - பார்த்து மகிழக்கூடிய

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. திருவள்ளுவர் இயற்றிய நூலுக்குத் திருக்குறள் என்று ஏன் பெயரிடப்பட்டது ?
2. திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுவது ஏன் ?
3. திருவள்ளுவருக்கு எங்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது ?
4. இந்தியப் பேரரசு வள்ளுவரை எவ்வாறு பெருமைப்படுத்தியது ?
5. வள்ளுவர் கோட்டம் எங்கு யாரால் அமைக்கப்பட்டது ?
6. வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பைத் தொகுத்து எழுதுக.
7. குறள்மணி மாடத்தின் சிறப்பை எழுதுக.

(ஆ) சேர்த்து எழுதுக :

சமயம் + வேறுபாடு — தெய்வம் + புலவர்

சிற்பம் + கலை — அடிகளை + கொண்டது

(இ) பிரித்து எழுதுக :

வேறுபாடில்லாமல், பெரும்புகழ், நினைவாலயம், இரண்டிரண்டு, மூவண்ணம், தெற்காசியா.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

தலைசிறந்தது, தெளிவாக, வரிசையாக, கண்டுகளிக்க.

(உ) எதிர்ச்சொல் தருக :

வேறுபாடு × — பெருமை ×

முன்னால் × — பேரரசு ×

இலக்கணம்

பொருட்பெயரும் இடப்பெயரும்

திருக்குறள், தேர், யானை, சிலை — இவை எவற்றைக் குறிக்கின்றன ? இவை பொருள்களின் பெயர்களைக் குறிக்கின்றன. ஆதலின் இவை பொருட்பெயர் எனப்படும்.

மயிலாப்பூர், கடற்கரை, சென்னை — இவை எவற்றை உணர்த்துகின்றன ? இடங்களின் பெயர்களைக் குறிக்கின்றன. ஆதலின் இச்சொற்கள் இடப்பெயர் எனப்படும்.

பயிற்சி

(அ) கீழ்க்காணும் வாக்கியங்களிலிருந்து பொருட்பெயர்களையும் இடப்பெயர்களையும் தனித்தனியே எடுத்து அவற்றிற்குரிய கட்டங்களில் எழுதுக :

1. தமிழக அரசு வள்ளுவர்க்கு ஒரு கோட்டம் அமைத்துள்ளது.
2. தமிழ் நாட்டில் நெல்லும் கரும்பும் விளையும் வயல்கள் உள்ளன.

பொருட்பெயர்	இடப்பெயர்

(ஆ) உனக்குத் தெரிந்த வேறு பொருட்பெயர்கள் இரண்டும் இடப்பெயர்கள் இரண்டும் எழுதுக.

3. முழுமை நிலா

(பாடல்)

முழுமைநிலா! அழகுநிலா!
முளைத்தது விண்மேலே—அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந் தாற்போலே!

அமுதமுகம் சிரித்ததுபோல்
அல்லிவிரிந் தாற்போல் — மேல்
சுழற்றிஎறிந்த வெள்ளித்தட்டுத்
தொத்திக்கிடந் தாற்போல்! (முழுமை)

குருட்டுவிழியும் திறந்ததுபோல்
இருட்டில்வான விளக்கு — நம்
பொருட்டுவந்தது பாடிஆடிப்
பொழுதுபோக்கத் துவக்கு!

மரத்தின்அடியில் நிலவுவெளிச்சம்
மயிலின்தோகை விழிகள் — பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்ந்துமெழுகும் வழிகள். (முழுமை)

—பாவேந்தர் பாரதிதாசனார்

அருஞ்சொற்பொருள்

முளைத்தது - தோன்றியது, அல்லி - அல்லி மலர், எறிந்த - வீசிய, வானவிளக்கு - விண்ணில் தோன்றும் விளக்கு (நிலா), நம்பொருட்டு - நமக்காக, மயிலின் தோகை விழிகள் - மயில் தோகையிலுள்ள கண்கள்.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. அழகிய முழுநிலா விண்ணில் எவ்வாறு தோன்றியது ?
2. மரத்தின் அடியில் தோன்றிய நிலவு வெளிச்சம் எதைப்போன்று காணப்பட்டது ?

(ஆ) சேர்த்து எழுதுக:

சுழற்றி + எறிந்த, வானம் + விளக்கு, மரத்தின் + அடியில்.

(இ) பிரித்து எழுதுக:

பாய்ந்தெழுந்து, வெள்ளித்தட்டு, புதுநினைவு.

(ஈ) பாய்ந்து என்பதற்குச் சாய்ந்து, காய்ந்து என்பன ஓசையின் இணையான சொற்களாம். அவைபோலப் பின்வருவனவற்றிற்கு இணைச்சொற்களை எழுதுக:

இருட்டு, மயில், முளைத்து, அழகு.

4. வாக்குத் தவறாத வாய்மையாளர்



உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள். அவர், நம் பாரத நாட்டு விடுதலைக்காக அரும்பாடுபட்டார்; அறப்போராட்டங்கள் பல நடத்தினார். அவரது பெருமுயற்சியால் ஆங்கில ஆட்சியின் அடிமைத்தளையிலிருந்து இந்தியா விடுதலை பெற்றது. அதனால், அவரை 'நம் நாட்டின் தந்தை' என நாம் போற்றுகிறோம்.

காந்தியடிகள், குசராத் மாநிலத்தில் உள்ள **போர்பந்தர்** என்னும் சிற்றூரில் கி.பி. 1869ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2ஆம் நாள் பிறந்தார். அவருடைய தந்தையார் **கரம்சந்த் காந்தி**; தாயார் **புத்லிபாய்** அம்மையார். காந்தியடிகளின் பெயர் **மோகனதாசு** என்பதாகும்.

அவர் சிறுவராயிருந்தபோது சிரவணன் என்பவனின் பெற்றோர் பக்தியை விளக்கும் கதையைப் படித்தார்; நாடகத்தையும் பார்த்தார். அன்றிலிருந்து 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் கருத்து அவர் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. மேலும் அவர், வாய்மையைக் காக்கப் பல துன்பங்களை அடைந்த அரிச்சந்திரனின் நாடகத்தையும் பார்த்தார். அதனால், 'பொய் பேசாமை' என்னும் நல்லறத்தைத் தம் வாழ்நாளில் இறுதிவரையிலும் கடைப்பிடித்து வாழ்ந்தார்.

மோகனதாசு, இந்தியாவில் படித்து முடித்ததும் சட்டக் கல்வி பயில இங்கிலாந்துக்குச் செல்ல விரும்பினார். அவருடைய அன்னையார் அதற்கு இசையவில்லை. இங்கிலாந்துக்குச் செல்லும் இளைஞர்கள் ஊன் உண்ணல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களை மேற்கொள்கின்றனர். தம் மைந்தர் அப்பழக்கங்களுக்கு ஆளாகக் கூடாது என்ற எண்ணத்தாலேயே அவர் அதற்கு இசையவில்லை.

இங்கிலாந்து செல்வதில் ஆர்வமுடையவராயிருந்த மோகனதாசு அன்னையாருக்கு மூன்று வாக்குறுதிகளைத் தந்தார். "எக்காரணம் கொண்டும் நான் ஊன் உண்ணமாட்டேன்; மது அருந்த மாட்டேன்; தீய செயல்களில் ஈடுபட மாட்டேன்," என்பனவே அவ்வாக்குறுதிகளாம். தம் மைந்தரின் மன உறுதியை அறிந்த அன்னையார், பின்னர் மோகனதாசு இங்கிலாந்து செல்ல இசைந்தார்.

மோகனதாசு இங்கிலாந்து செல்லும்போது கப்பலில் உள்ள உணவு விடுதியிலும் உண்ணத் தயங்கினார். அவ்வுணவில் ஊன் கலந்திருக்குமோ என்ற அச்சமே அதற்குக் காரணம். அதனால், அவர் தம் வீட்டிலிருந்து கொண்டு சென்ற தின்பண்டங்களையே உண்டு காலங்கழித்தார்.

அவர் இங்கிலாந்து சென்ற பின்னர் ஓர் ஆங்கிலேய நண்பர் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது அவர் அன்னைக்குத் தந்த வாக்குத் தவறாமல் இருக்க ஊன்கலவாத உணவையே பல இடங்களிலும் தேடி அலைந்துபெற்று உண்டுவந்தார்.

அதுகண்ட அந்நண்பர், "இங்கிலாந்து குளிர்மிக்க நாடு; இங்கு ஊன் உண்ணாமலும் மது அருந்தாமலும் வாழ்ந்தால் உடல்நலம் கெடும்," என்று கூறி அவரை ஊன் உண்ணுமாறு வற்புறுத்தினார். மோகனதாசு அதுகேட்டு, "என் அன்னையிடம் நான் ஊன் உண்ணமாட்டேன்; மது அருந்தமாட்டேன் என்று வாக்குறுதி தந்திருக்கிறேன்; அந்த வாக்குறுதிகளை மீறுவதைக் காட்டிலும் கல்வியைக் கைவிட்டு என் நாட்டிற்குத் திரும்புவேன்," என்று உறுதியாகக் கூறிவிட்டார். அவரது உறுதியைக் கண்ட ஆங்கிலேய நண்பர், பின்னர்க் காந்தியாரை வற்புறுத்துவதை விட்டுவிட்டார்.

மோகனதாசு தமக்கு வேண்டிய உணவு வெளியில் கிடைக்காதபோது பட்டினி கிடந்தும், தாமே சமைத்து உண்டும் படித்து வந்தார். எத்தனையோ இடையூறுகளுக்கிடையே அவர் தம் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இங்ஙனம் அவர் நான்காண்டுகள் இங்கிலாந்தில் தங்கிச் சட்டக் கல்வி பயின்று, வழக்கறிஞர் பட்டம் பெற்றுத் தாய்நாடு திரும்பினார். நாமும் காந்தியடிகளைப் போல நல்லொழுக்கங்களை உறுதியாகக் கடைப்பிடித்துப் புகழுடன் வாழ முயல்வோமாக.

அருஞ்சொற்பொருள்

உத்தமர் - மேலானவர், அறப்போராட்டம் - பிறர்க்குத் தீங்கு விளைக்காமல் தன்னை வருத்திக் கொள்ளும் போர்முறை, அடிமைத்தளை - அடிமைப் பிடிப்பு, திங்கள் - மாதம், வாய்மை - உண்மை, ஊன் - இறைச்சி (மாமிசம்), வாக்குறுதி - உறுதிமொழி, இடையூறு - துன்பம், கண்ணும் கருத்துமாக - மிகவும் கவனமாக

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. காந்தியடிகள் சிறுவராய் இருந்தபோது பார்த்த நாடகங்கள் யாவை ? அவற்றால் அவர் அறிந்துகொண்ட கருத்துகள் யாவை ?
2. காந்தியை இங்கிலாந்துக்கு அனுப்ப அவர் தாயார் ஏன் இசையவில்லை ?
3. காந்தி, அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதிகள் யாவை ?
4. காந்தி தம் வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றினார்?

5. ஆங்கிலேய நண்பர் காந்திக்குக் கூறியது யாது?
6. காந்தி அந்நண்பர்க்குக் கூறிய பதில் யாது?

(ஆ) சேர்த்து எழுதுக :

கல்வியை + கைவிட்டு, கதையை + படித்தார்,

அன்னைக்கு + தந்த, இங்கிலாந்துக்கு + செல்ல.

(இ) பிரித்து எழுதுக :

அறப்போர், அந்நண்பர், நான்காண்டுகள், வழக்கறிஞர்.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பெருமுயற்சி, வாக்குறுதி, மேற்கொண்டு, கடைப்பிடித்து, கண்ணும் கருத்துமாக.

இலக்கணம்

காலப்பெயரும் சினைப்பெயரும்

ஆண்டு, நாள், மாலை — இவை எவற்றைக் குறிக்கின்றன? இவை காலத்தைக் குறிக்கின்றன. இவ்வாறு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

கிளை, வேர், பூ — இவை எவற்றைக் குறிக்கின்றன? இவை மரத்தின் உறுப்புகளைக் குறிக்கின்றன.

கால், காது, விரல் — இவை எவற்றைக் குறிக்கின்றன? மனிதனின் உறுப்புகளைக் குறிக்கின்றன. இவ்வாறு பொருள்களின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.
(சினை — உறுப்பு.)

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள காலப்பெயர்களையும் சினைப்பெயர்களையும் தனித்தனியே எடுத்து ஏற்ற கட்டத்தினுள் எழுதுக :

1. ஆண்டுதோறும் நவம்பர்த் திங்கள் 14ஆம் நாளை நாம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம்.
2. பெரியவர்களைக் காணும்போது தலை தாழ்த்திக் கைகூப்பி வணங்கவேண்டும்.
3. கொன்றை மரத்தில் மலர்கள் கொத்துக்கொத்தாய் மலர்ந்துள்ளன.

காலப்பெயர்	சினைப்பெயர்

5. நாகன் செய்த நற்செயல்



தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூரில் கந்தன் என்னும் உழவன் ஒருவன் வாழ்ந்தான். அவனுக்கு ஆற்றங்கரையில் சிறிதளவு நிலம் இருந்தது. ஏழையான கந்தன் அந்நிலத்தை மிகவும் அக்கறையாக உழுது பயிர்செய்து வாழ்ந்தான். ஊருக்கு அப்பால் ஆற்றங்கரையில் அவனது நிலத்திற்குப் பக்கத்திலேயே அவன் வீடு அமைந்து இருந்தது.

கந்தனுக்கு மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நாகன். நாகன் நல்ல குணமுடையவன்; கூர்மையான புத்தி உடையவன். அவனுடைய அறிவைக் கண்டு மகிழ்ந்த கந்தன் அவனைப் படிக்கவைத்து அரசு அலுவலில் அமர்த்த ஆசைப்பட்டான்; அதனால் அவனை அவ்வூரிலிருந்த பள்ளியிலேயே சேர்த்தான்.

நாகன் விடியற்காலையிலேயே எழுந்துவிடுவான்; தந்தைக்கு உதவியாக வயலில் சிறிதுநேரம் வேலை செய்வான்; பிறகு குளித்துவிட்டுப் பள்ளிப் பாடங்களைப் படிப்பான்; பள்ளி செல்லும் நேரம் நெருங்கியவுடன் உணவு உண்டு, அன்னை கொடுக்கும் பகலுணவை எடுத்துக்கொண்டு பள்ளிக்குப் புறப்படுவான்.

பள்ளிக்கூடம் அவன் வீட்டிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவிலிருந்தது. ஆற்றைக் கடந்தே அங்குச் செல்லவேண்டும். ஆற்றைக் கடக்கப்

பாலம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதன்மீது புகைவண்டி செல்லும். நாகன் அப்பாலத்தின் வழியாக ஆற்றைக் கடந்தே பள்ளிக்குப் போவான்.

ஒருநாள் நாகன் பள்ளிக்குச் சென்றிருந்தபோது காற்றுடன்கூடிய பெருமழை பெய்தது. அதனால் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வெள்ளத்தினால் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலம் ஒரு பக்கத்தில் உடைந்துவிட்டது. மழையினால் எவரும் அப்பக்கம் செல்லாமையினால் அதை ஒருவரும் கவனிக்க வில்லை.

பள்ளிக்கூடம் சென்றிருந்த நாகன் மழை சிறிது விட்டதும் விரைவாக வீடு திரும்பினான். அவன் வருவதற்குள் மழை மீண்டும் வலுத்துவிட்டது. மழையில் நனைந்துகொண்டே ஓட்டமும் நடையுமாக விரைந்துவந்த நாகன் புகைவண்டிப் பாதையைக் கடக்கும்போது பாலம் உடைந்திருப்பதைப் பார்த்துவிட்டான்.

அதைக் கண்டவுடன் நாகனுக்கு உடல் நடுங்கியது. புகைவண்டி வேகமாக வந்தால் அந்த இடத்தில் கவிழ்ந்து விழுந்துவிடுமே! அதனால் எவ்வளவோ பேர் இறந்து போவார்களே என்று எண்ணிப் பயந்தான். திரும்பி ஊருக்குள் ஓடிச்சென்று ஊராரை அழைத்துவர எண்ணினான். ஆனால், அதற்குள் தூரத்தில் புகைவண்டி வரும் ஓசை கேட்டது.

புகைவண்டி வருவதை அறிந்த நாகன் பரபரப்படைந்தான். என்ன செய்வ தென்று அவனுக்குத் தெரியவில்லை. வண்டியோ மிகவும் விரைவாய் வந்து கொண்டிருந்தது. அதை நிறுத்துவது எப்படி என்று நாகனுக்குப் புலப்படவில்லை.

அப்போது திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. ஒருநாள் புகைவண்டிப் பாதையைச் செப்பனிட்டுக் கொண்டிருந்த பணியாளர்கள் வண்டி வந்தால் நிறுத்துவதற்காக ஒரு சிவப்புத் துணியைக் கொம்பில் கட்டி நட்டு வைத்திருந்ததை அவன் பார்த்திருந்தான். அதனால், நாகன் தான் அணிந்து இருந்த சிவப்புச் சட்டையைக் கழற்றினான்; அதனை ஒரு கொம்பில் கட்டினான்; புகைவண்டியை ஓட்டுபவர் கண்ணில் படுமாறு அதனை ஆட்டினான்.

வண்டியை ஓட்டி வந்தவர், நாகன் காட்டிய சிவப்புக் கொடியைப் பார்த்து விட்டார். பாதையில் ஏதோ கோளாறு ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிந்து கொண்டார். அதனால் அவர் வண்டியை மெதுவாக நிறுத்தினார்.

வண்டியின் காப்பாளர் இறங்கி வந்து பாலம் உடைந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அதற்குள் வண்டியில் இருந்தவர்களுக்கு எல்லாம் செய்தி தெரிந்துவிட்டது. அவர்கள் இறங்கி ஓடிவந்தார்கள். தங்கட்கு நேர இருந்த பெரிய துன்பத்திலிருந்து காத்த நாகனை அனைவரும் பாராட்டினர்.

வண்டியில் உயர்ந்த அரசு அதிகாரி ஒருவரும் பயணம் செய்தார். அவர் நாகனுடைய தீரச் செயலை அறிந்து அவனை மிகவும் பாராட்டினார்; அரசாங் கத்திற்கு நாகனின் நற்செயலை எடுத்துக் கூறினார்; அந்த இளம் பருவத்திலேயே அவ்வளவு பொறுப்புணர்ச்சி உடையவனாக விளங்கிய நாகன் கல்வி கற்றுப் பெரியவன் ஆனால் நாடு காக்கும் நல்லவனாக விளங்குவான் எனப் பரிந்துரைத்தார். அதனால், அரசாங்கமே அவனுக்குப் பரிசுகள் பல வழங்கியதோடு கல்வி கற்பிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

தம் மைந்தன் செய்த நற்செயலையும் அதனால் அவனுக்கு ஏற்பட்ட உயர்வையும் அறிந்த நாகனின் தாய் தந்தையர் அவனைப் பெற்ற நாளினும் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

அருஞ்சொற்பொருள்

அலுவலில் - பணியில், புரண்டு ஓடியது - பெருக்கெடுத்து ஓடியது, பரபரப்படைந்தான் - சுறுசுறுப்புக் கொண்டான், புலப்படவில்லை - அறிவிற்கு எட்டவில்லை, செப்பனிடுதல் - பழுதுபார்த்தல், பணியாளர்கள் - வேலையாட்கள், கோளாறு - பழுது, தீரச்செயல் - துணிவினால் செய்யும் காரியம், பரிந்துரைத்தார் - சிபாரிசு செய்தார்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1 நாகன் என்பவன் யார்? அவனுடைய தந்தையின் ஆசை யாது?

2. நாகனுடைய குணங்களை எழுதுக.

3. நாகன் எவ்வாறு கல்வி கற்றான்?

4. நாகன் செய்த நற்செயல் யாது?

5. அரசு அதிகாரி நாகனைப்பற்றி அரசாங்கத்துக்குச் செய்த பரிந்துரை யாது?

6. நாகன் செய்த நற்செயலால் விளைந்த பயன்களை எழுதுக.

(ஆ) பிரித்து எழுதுக :

சிற்றூர், விடியற்காலை, தீரச்செயல், இளம்பருவம், பரிந்துரைத்தார்.

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

கூர்மையான புத்தி, விடியற்காலை, ஓட்டமும் நடையுமாக, தீரச்செயல், பொறுப்புணர்ச்சி, பரிந்துரை.

(ஈ) எதிர்ச்சொல் தருக :

ஏழை × விரைவாய் × சிற்றூர் × காலை ×

(உ) வேறுபாட்டைத் தெரிந்துகொள்க :

பள்ளி—பல்லி, வேலை—வேளை, கரை—கறை, இரந்து—இறந்து.

இலக்கணம்

பண்புப்பெயரும் தொழிற்பெயரும்

சிறுமை, பெருமை, வேகம், செம்மை, தூய்மை, கூர்மை, நீளம், வட்டம், குறுக்கு — இவை எவற்றைக் குறிக்கின்றன ? பொருள்களின் தன்மையைக் குறிக்கின்றன. இவ்வாறு பொருள்களின் நிறத்தையோ, குணத்தையோ, வடிவத்தையோ குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

உழுதல், கட்டுதல், பார்வை, காணல், நோக்கம், வருகை, பயிற்சி—இவை எவற்றை உணர்த்துகின்றன. இவை செயல்களை உணர்த்துகின்றன. இவ்வாறு ஒரு செயல் அல்லது தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள பண்புப்பெயர்களையும், தொழிற்பெயர்களையும் தனித்தனியே எடுத்து அவற்றிற்குரிய கட்டங்களில் எழுதுக:

1. வானம் நீலநிறமாகத் தோன்றுகிறது.
2. கோடையில் வெப்பம் மிகுதியாயிருக்கும்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வரவு செலவு அறிந்து வாழ்க்கை நடத்தவேண்டும்.

பண்புப்பெயர்	தொழிற்பெயர்

6. நோயற்ற வாழ்வு



'சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் எழுத வேண்டும்' என்பது பழமொழி. உடலை உறுதியாக வைத்துக்கொண்டால்தான் எச்செயலையும் செய்ய முடியும் என்பது இதன் கருத்து. உடலை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டு மானால் நோய் அணுகாமல் உடலைக் காக்கவேண்டும். நோய் வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே அறிவுடைமையாகும்.

உண்ணும் உணவும், பருகும் நீரும், நுகரும் காற்றும் தூய்மையாக இருத்தலும், உறைவிடமும் சுற்றுப்புறங்களும் தூய்மையாக அமைதலுமே நோய் அணுகாமல் காக்கும் வழிகளாம்.

நாம் உண்ணும் உணவு எளியதாக இருந்தாலும் சத்துள்ளதாகவும் தூய்மை யானதாகவும் இருத்தல் வேண்டும். நீரின்மூலமே பலவிதமான தொற்று நோய்கள் பரவுவதால் எப்போதும் காய்ச்சி வடிகட்டிய நீரையே நாம் பருகவேண்டும்.

உணவுக்கு அடுத்ததாக நாம் வசிக்கும் வீட்டினைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். நல்ல வெளிச்சமும் காற்றும் புகுமாறு சாளரங்களைத் திறந்து வைத்தல் வேண்டும். 'வெளிச்சம் புகாத வீட்டில் வைத்தியன் புகுவான்' என்பது பழமொழி. வீட்டின் சுற்றுப்புறத்தில் குப்பை கூளம் சேராமலும் கழிவுநீர் தேங்காமலும் கவனித்துக்கொள்ளுதல் வேண்டும்.

நாள்தோறும் குளிர்ந்தநீரில் நீராடுதல் நல்ல பழக்கமாகும். துணிகளை அழுக்கு நீங்கத் துவைத்து வெயிலில் உலர்த்தியே உடுத்தல் சிறந்தது. 'கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்னும் பொன்னுரையை நாம் மறத்தல் கூடாது.

உணவு, உடை, உறைவிடம் ஆகியவை மட்டும் தூய்மையாக இருந்தால் போதுமா? பயன்படுத்தப்படாத இரும்பு துருப்பிடித்துப் பாழாகும் அன்றோ? அது போல வேலை செய்து உழைக்காத உடம்பும் நோயுற்றுத் தேய்ந்து அழியும். எனவே, உடலுக்கு உரம் தருகின்ற உழைப்பும் உடற்பயிற்சிகளும் இன்றியமையாதனவாம்.

ஏர் உழுதல், ஏற்றம் இறைத்தல், மரம் வெட்டுதல், கிணறு அகழ்தல், பாரம் சுமத்தல் போன்ற தொழில்களைச் செய்வோர்க்கு அவர்கள் செய்யும் வேலைகளே உடற்பயிற்சிகளாய் அமைந்துவிடுகின்றன. உடல் உழைப்பு இல்லாதவர்கள் காலை எழுந்தவுடன் உடற்பயிற்சி செய்தல் இன்றியமையாததாகும். அங்ஙனம் செய்ய இயலாதவர்கள் காலையிலும் மாலையிலும் சிறிது தொலைவு உலாவி வருதல் நல்லது.

இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். அவர்கள் தத்தம் வயதுக்கும் உடல்நிலைக்கும் ஏற்ற பயிற்சிகளைத் தேர்ந்து மேற்கொள்ள வேண்டும். ஓடுதல், விரைவாக நடத்தல், நீந்துதல், உயரத் தாண்டுதல், நீளத் தாண்டுதல் போன்ற உடற்பயிற்சிகளை இளைஞர்கள் செய்யலாம். பந்தாட்டம், சடுகுடு, சிலம்பம் போன்ற விளையாட்டுகளையும் மேற்கொள்ளலாம்.

இப்பயிற்சிகளால் உடலிலுள்ள அசுத்தங்கள் வியர்வை மூலம் வெளியேறும், உடல் தூய்மையடையும்; நல்ல இரத்தம் பரவும்; இதயம் நன்கு இயங்கும்; மூளை சுறுசுறுப்படையும்; இரவில் நல்ல உறக்கம் வரும்; அதன்மூலம் உடலுக்கு வேண்டிய ஓய்வும் கிடைக்கும். அதனால், நாம் நோயில்லாமல் நீண்டகாலம் வாழலாம்; எந்தச் செயலையும் உற்சாகமுடன் செய்யலாம்; மன நிறைவு பெறலாம்; மகிழ்ச்சியடையலாம்.

பொருட்செல்வத்தால் பெறும் இன்பத்தைவிட, உடல் நலத்தால் அடையும் இன்பமே சிறந்ததாகும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ஆன்றோர் மொழியன்றோ?

அருஞ்சொற்பொருள்

உறுதியாக - வலிமையுடையதாக, அணுகாமல் - நெருங்காமல் (வாராமல்), பருகும் - குடிக்கும், நுகரும் - உள்ளிழுக்கும், உறைவிடம் - வாழும் இடம், துப்புரவு - தூய்மை, சாளரம் - சன்னல், உரம் - வலிமை, இன்றியமையாதனவாம் - அவசியமாம், அனுபவமொழி - வாழ்வில் அனுபவித்துச் சொன்ன சொல்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. உடலை உறுதியாக வைத்துக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும் ?
2. நோய் அணுகாமல் காப்பதற்குரிய வழிகள் யாவை ?
3. வீட்டினை நாம் எவ்வாறு துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும் ?
4. உடற்பயிற்சிகளாக அமையும் தொழில்கள் யாவை ?
5. இளைஞர்கள் மேற்கொள்ளத்தக்க உடற்பயிற்சிகளைக் கூறுக.
6. உடற்பயிற்சிகளால் நாம் பெறும் நன்மைகள் யாவை ?

(ஆ) சேர்த்து எழுதுக :

உடல் + பயிற்சி, கசக்கி + கட்டு, சுற்று + புறம், பொன் + உரை.

(இ) பிரித்து எழுதுக :

நோயுற்று, பொருட்செல்வம், தத்தம், பந்தாட்டம்.

(ஈ) புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்புக:

1. நோய் வந்தபின் காப்பதைவிட .... காப்பதே சிறந்தது.
2. நாம் எப்போதும் .... நீரைப் பருகவேண்டும்.
3. வெளிச்சம் புகாத வீட்டில் .... புகுவான்.

(உ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

துப்புரவு, சுற்றுப்புறம், இன்றியமையாதது, பொன்னுரை, நீண்ட காலம்.

(ஊ) எதிர்ச்சொல் தருக :

எளியது ×

குளிர்ந்த நீர் ×

இளைஞர் ×

அசுத்தம் ×

7. பொன்



இயற்கை அன்னை நமக்கு அளிக்கும் செல்வங்களுள் பொன் மிகச் சிறந்ததாகும். பொன்னே ஒருநாட்டின் செல்வச் சிறப்புக்கு அடிப்படையாக உள்ளது. அதைக் கொண்டு உலக நாடுகளில் உள்ள எப்பொருளையும் வாங்கலாம். அதனால், பொன் உலகப் பொது நாணயமாக விளங்குகிறது.

பொன், மக்கள் மனத்தைக் கவரும் பசுமையான மஞ்சள் நிறமுடையது; என்றும் தன் ஒளியில் குன்றாதது; மென்மைத் தன்மை வாய்ந்தது; ஆனால் உறுதியானது. பொன்னை மெல்லிய தகடுகளாகவும் அடிக்கலாம்; நீண்ட கம்பிகளாகவும் நீட்டலாம். அதனால், பொன் ஏனைய உலோகங்களைக் காட்டிலும் சிறந்ததாக மதிக்கப்படுகிறது. பொன்னாலான அணிகலன்களை விரும்பாதவர் யார் ?

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பொன் பூமிக்கடியில் மிக்க ஆழத்தில் கல், மண் முதலியவற்றோடு கலந்து கிடக்கிறது. பொன்னின் மதிப்பை உணர்ந்த மக்கள் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் அதனை வெட்டி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பொன்னை வெட்டியெடுக்கும் இடத்திற்குச் 'சுரங்கம்' என்பது பெயர். சுரங்கத்தைக் 'கனி' என்றும் வழங்குவர். இச்சுரங்கங்களில் உள்ள பாறைகளில் பொன் தாதுகள் படிந்திருக்கும். சில இடங்களில் பத்தாயிரம் அடி ஆழத்திலும் சென்று பொன் பாறைகளை வெட்டி எடுத்து வருகின்றனர். அறிவியல் வளர்ந்துள்ள இந்

நாளில் சுரங்கங்கள் அமைப்பதற்கும் உள்ளே செல்வதற்கும் பொன்பாறைகளை வெட்டி எடுத்து வெளியே கொணர்வதற்கும் பற்பல வசதிகள் ஏற்பட்டுள்ளன.

சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுத்து வந்த பொன்தாதுகள் படிந்த பாறைகளைப் பொடியாக்கி அவற்றில் உள்ள பொன்னைப் பிரித்து எடுக்கின்றனர். பொன்னைப் பிரித்தெடுக்கப் பாதரசம் மிகவும் பயன்படுகிறது. வேறு சில இரசாயனப் பொருள்களும் உபயோகப்படுகின்றன. ஒரு டன் எடையுள்ள பாறையிலிருந்து ஏறக்குறைய 6 1 கிராம் எடையுள்ள தங்கம் கிடைக்கிறது. அதனாலேயே பொன் மிகவும் அருமையானதாகவும் விலை உயர்ந்ததாகவும் மதிக்கப்படுகிறது.

தூய்மை செய்யப்பட்ட பொன்னுக்குத் 'தங்கம்' என்பது பெயர். அது மிகவும் நெகிழ்ச்சியுடையது. அதனால் அதைக் கொண்டு அணிகலன் முதலியன செய்ய முடியாது. என்வே, அணிகலன்களைச் செய்யும்போதும் பொன் நாணயங்கள் செய்யும்போதும் அதனுடன் ஓரளவு தாமிரத்தைச் சேர்க்கின்றனர். அதனையே பொன் என நாம் வழங்குகிறோம்.

கலப்பில்லாத பொன்னைப் பத்தரை மாற்றுத் தங்கம் எனக் கூறுவர். பொன்னை உரைகல்லில் உரைத்து அதன் மதிப்பை அளவிட்டு அறியலாம். இவ்வாறு செய்வது 'மாற்றறிதல்' எனப்படும்.

பொன்னை உற்பத்தி செய்வதில் தென் ஆப்பிரிக்காவே முதன்மை பெற்று விளங்குகிறது. உலகம் முழுதும் கிடைக்கும் பொன்னில் பாதியளவு அங்குக் கிடைக்கிறது. நம் நாட்டில் கர்நாடக மாநிலத்திலுள்ள கோலார் என்னும் இடத்தில் தங்கம் கிடைக்கிறது.

பொன் அணிகலன்கள் செய்வதற்கு மட்டுமல்லாமல் வேறுபல வழிகளிலும் பயன்படுகிறது. பொன்னை மெல்லிய தகடாக அடித்துப் பட்டு நூலிழையில் சுற்றிச் சரிகை செய்கின்றனர். வெள்ளியால் செய்யப்பட்ட பாத்திரங்கள், பலவகை அணிகலன்கள் முதலியவற்றிற்குப் பொன்னைக்கொண்டு முலாம் பூசுகின்றனர். இவை மட்டுமன்றிப் பொன் மருந்தாகவும் பயன்படுகிறது.

இங்ஙனம் எல்லா வகைகளிலும் சிறந்த பொன்னை முதன்முதலில் அறிந்த நாடு இந்தியாவே. பொன்னின் தரத்தை அறிவதில் இந்தியர் மிகவும் சிறந்து விளங்கினர். பொன்னை நிறுப்பதற்கு மிக நுட்பமான கருவிகளையும் அளவைகளையும் நம்மவர் பயன்படுத்தினர். மஞ்சாடி, கழஞ்சு என்பன பொன்னை நிறுக்கும் அளவைகளின் பெயர்களாக முன்பு வழங்கின. இவற்றால் பொன் மிகப் பழங்காலம்முதல் நம் நாட்டவரால் போற்றப்பட்டு வந்தது என்பது விளங்கும்.

அருஞ்சொற்பொருள்

குன்றாதது - குறையாதது, ஏனைய - பிற, உலோகங்கள் - மண்ணுக்கடியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் போன்ற பொருள்கள், அணிகலன் - ஆபரணம், கனி - சுரங்கம், தாதுகள் - படிவங்கள் (துகள்கள்), உரைகல் - பொன்னைத் தேய்த்துப் பார்க்கும் கல், நுட்பமாக - நுணுக்கமாக.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. ஒரு நாட்டின் செல்வச் சிறப்பை எதனைக் கொண்டு அறியலாம் ?
2. பொன்னின் இயல்பு யாது ?
3. பொன் எங்குக் கிடைக்கிறது? அதனை எவ்வாறு எடுக்கின்றனர் என்பதை விளக்கிக் கூறுக.
4. பொன்னை மண்ணிலிருந்து பிரித்து எடுக்கப் பயன்படும் பொருள் எது?
5. தங்கம் என்று எதற்குப் பெயர்? நாம் எதனைப் பொன் என்று கூறுகிறோம்?
6. பொன்னின் பயன்கள் யாவை ?

(ஆ) பிரித்து எழுதுக:

பொன்னாலானது, பத்தாயிரம், பற்பல, பிரித்தெடுக்க, நால்வகை, பழங்காலம்.

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

செல்வச் சிறப்பு, உயிரையும் பொருட்படுத்தாமல், ஓரளவு, நுட்பமான.

இலக்கணம்

வினைச்சொல் — வினைமுற்று

மக்கள் சுரங்கங்களிலிருந்து பொன்னை எடுக்கின்றனர். — 'எடுக்கின்றனர்' என்பதில் மக்கள் செய்கின்ற செயல் எடுத்தல் ஆகும். செயல் நிகழ்ச்சி என்பதே வினை. இவ்வாறு ஒரு செயல் நிகழ்ச்சியைக் குறிக்கும் சொல் வினைச்சொல் என்று சொல்லப்படும். எடுக்கின்றனர் என்பது பொருள் முடிந்து நிற்பதால் முற்றுவினை அல்லது வினைமுற்று எனப்படும்.

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுகளைத் தனித்தனியே எடுத்து எழுதுக:

1. கோவலன் மதுரைக்குச் சென்றான்.
2. மலர்விழி பாடத்தை நன்றாகப் படித்தாள்.
3. காற்று வேகமாக வீசுகிறது.
4. மக்கள் கூட்டங்கூட்டமாகத் திருவிழாவுக்குச் சென்றனர்.
5. பறவைகள் மாலையில் தம் கூடுகளை நோக்கிப் பறந்தன.

8. காகமும் நாகமும்

(பாடல்)

கோடுறு சினையில் காகம் கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில் வந்தே
ஆடியல் கரும்பாம் பொன்றங்கு அதுபெறும் முட் டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட நலிந்துளம் மெலிந்து வாடி, 1

தன்னுயிர்ப் பாங்க னான சம்புகன் அருகு போ'யிங்கு
என்னசெய் குவன்நான்?' என்ன, இதைக்கொலல் அரிதோ? நீபோய்
மன்னவன் தேவி ஆடும் மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்தில்,' என்ன, 2

காகம் அப்படியே செய்யக் காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை ஈர்ந்தனர்; ஈரும் போதில்
நாகம்அங் கிருந்து சீற நறுக்கினர் இருதுண் டாக;
ஆகையால், உபாயத் தாகா திலையென அறைதல் நன்றே. 3

—வீரமார்த்தாண்ட தேவர்

அருஞ்சொற்பொருள்

கோடுறு சினை-கொம்பில் உள்ள கிளை, பேடொடு-பெண் பறவையோடு, ஆடு இயல் பாம்பு-படம் எடுத்தாடும் பாம்பு, நலிந்து-வருந்தி, பாங்கன்-தோழன், சம்புகன்-நரி, கொலல் அரிதோ-கொல்வது கடினமோ ? (இல்லை) ஆடும்-நீராடும், மஞ்சனச்சாலை-குளிக்கும் இடம், பொன் அணி-பொன்னால் ஆன ஆபரணம், காவலன்-அரசன், ஏவலாளர்-வேலையாட்கள், ஏகி-சென்று, ஈர்ந்தனர்-பிளந்தனர், நறுக்கினர்-வெட்டினர், உபாயம்-தந்திரம், அறைதல்-சொல்லுதல்.

பயிற்சி

விடை எழுதுக :

1. காகத்திற்கு நேர்ந்த துன்பம் யாது ?
2. சம்புகன் காகத்திற்குக் கூறிய உபாயம் யாது ?
3. ஏவலாளர் நாகத்தை எவ்வாறு கொன்றனர் ?
4. இப்பாடத்தால் விளங்கும் உண்மை யாது ?

9. இன்பச் செலவு

(சித்தன்ன வாசல்)

எங்கள் பள்ளியில் அரையாண்டுத் தேர்வு முடிந்து விடுமுறை தொடங்கியது. விடுமுறையில் எங்கள் ஊருக்கு அண்மையில் உள்ள சித்தன்னவாசலுக்கு இன்பச் சுற்றுலாவாகச் சென்று வரலாம் என்று ஆசிரியர் கூறினார். நாங்கள் மகிழ்வுடன் இசைந்தோம். பேருந்து ஒன்றை அமர்த்திக்கொண்டு சித்தன்னவாசலைச் சென்றடைந்தோம்.

சித்தன்னவாசல், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சிற்றூராகும். அது திருச்சிராப்பள்ளியிலிருந்து 32 கிலோமீட்டர்த் தொலைவில் உள்ளது. 'சிற்றண்ணல் வாயில்' என்பதே அதன் பெயரென்றும் பேச்சு வழக்கில் 'சித்தன்ன வாசல்' என வழங்கப்படுகிறது என்றும் எங்கள் ஆசிரியர் கூறினார்.

அவ்வூரில் செங்குத்தான மலை ஒன்று காணப்படுகிறது. இதன்மேல் மலையைக் குடைந்து அமைத்த கோயில் ஒன்று உள்ளது. நாங்கள் மலைமீது ஏறி அக்கோயிலை அடைந்தோம்.

கோயிலுக்கு முன்னர்த் தாழ்வாரமும் முன்மண்டபமும் உள்ளன. அவற்றை அடுத்து நடுமண்டபமும் ஒரு சதுரமான அறையும் இருக்கின்றன. முன் மண்டபமும் தாழ்வாரமும் பிற்காலத்தில் அமைக்கப்பட்டவையாம்.

"இக்குகைக் கோயிலாலேயே இவ்வூருக்குப் பெருமை ஏற்பட்டுள்ளது. இங்குள்ள அழகிய வண்ண ஓவியங்களைக் காண அயல் நாட்டவரும் வருகின்றனர்.

இந்த ஓவியங்கள் ஆயிரத்து நூறு ஆண்டுகட்கு முன் ஆண்ட 'சீவல்லபன்' என்னும் பாண்டியன் காலத்தில் தீட்டப்பட்டன," என்று எங்கள் ஆசிரியர் எடுத்துரைத்தார்.

நாங்கள் தாழ்வாரத்தைக் கடந்து முன் மண்டபத்தினுள் சென்றோம். அம் மண்டபச் சுவர்களிலும் சில ஓவியங்கள் காணப்படுகின்றன. அவை பழுதடைந்துள்ளன. நடுமண்டபத்தின் தூண்களிலும் மேற்கூரையிலுமே புகழ்பெற்ற வண்ண ஓவியங்கள் காட்சி அளிக்கின்றன.

நடுமண்டபத்தின் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரு தூண்கள் உள்ளன. அத்தூண்களில், நடனமாடும் மங்கையர் இருவரின் அழகிய உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. அப்பெண்களின் தலையலங்காரமும் அணிகளும் நடனத்தோற்றமும் காண்பவர் கண்களைக் கவரக்கூடியனவாம்.

வலப்புறத்தூணின் உட்புறத்தில் அரசன், அரசி ஆகியோர் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. பலவித அணிகலன்கள் பூண்டு தலையில் மகுடம் அணிந்த தோற்றத்தோடு காணப்படும் அவ்வுருவங்கள் அற்புதமாக உள்ளன.

நடுமண்டபத்தின் மேற்கூரையில் தீட்டப்பட்டுள்ள தாமரைத் தடாகமே அங்குள்ள ஓவியங்களில் தலைசிறந்தது. அத்தடாகத்தில் தாமரையும் அல்லியும் அழகாக மலர்ந்துள்ளன. மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. அன்னப்பறவைகள் நீந்தித் தவழ்கின்றன. ஒரு புறத்தில் யானைகள் நீரில் இறங்கித் தாமரை இலைகளையும் பூக்களையும் பறித்து வீசுகின்றன. மற்றொரு புறத்தில் எருமைகள் நீரில் மூழ்கித் திளைக்கின்றன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அந்த ஓவியத்தைக் கண்டுகளித்த நாங்கள், "கரடுமுரடான பாறையில் இந்த அழகிய ஓவியங்களை எப்படி வரைந்தனர்?" என்று எங்கள் ஆசிரியரைக் கேட்டோம்.

"அதுதான் அற்புதம். ஓவியர்கள் முதலில் பாறையைச் சமமாகப் பொளிந்து கொண்டனர்; பின்னர்ப் பனஞ்சாறும் வெல்லமும் கலந்த சுண்ணாம்பைப் பூசினர். அப்பூச்சு, பாறையை உறுதியாகப் பற்றிக்கொண்டபின் மீண்டும் மிருதுவான சுண்ணாம்பை அதன்மேல் பூசிக் கூழாங்கல்லால் வழவழப்பாகத் தேய்த்துவிட்டனர். அந்த ஈரம் உலர்வதற்குமுன் தாம் வரைய நினைத்த ஓவியத்தைக் கோடுகளாக வரைந்துகொண்டனர். அதன்பிறகு வண்ணம் தீட்டி அலங்கரித்தனர்," என்று அவ்வோவியங்கள் வரையப்பட்ட முறையை ஆசிரியர் எங்களுக்கு விளக்கிக் கூறினார்.

பின்னர், நாங்கள் நடுமண்டபத்தின் உள்ளே அமைந்திருக்கும் அறையில் இருந்த சமணப் பெரியோர்களின் சிலைகளையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

பலநூறு ஆண்டுகளாகியும் சித்தன்ன வாசல் ஓவியங்கள் இன்றும் நிறம் மங்காமல் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. அவை, தமிழரின் ஓவியக் கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன என்பதில் ஐயம் இல்லை.

அருஞ்சொற்பொருள்

அண்மையில் - அருகில், தீட்டப்பட்டன - வரையப்பட்டன, பழுதடைந்துள்ளன - கெட்டுவிட்டன, மங்கையர் - பெண்கள், அற்புதம் - காண்பவர் கண்ணைக் கவரும் வியப்புடைய அழகு, தடாகம் - குளம், திளைக்கின்றன - மகிழ்ந்து விளையாடுகின்றன, கரடுமுரடான - சொரசொரப்பான, பொளிந்து - உளியால் செதுக்கி, நிறம் மங்காமல் - நிறம் குறையாமல் (நிறம் மாறாமல்).

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. சித்தன்ன வாசல் எங்குள்ளது ? அதன் சிறப்பு யாது ?
2. சித்தன்ன வாசல் குகைக்கோயில் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது ?
3. சித்தன்ன வாசல் ஓவியங்கள் எப்போது வரையப்பட்டன ? அவற்றின் சிறப்பு யாது ?
4. மண்டபத்துத் தூண்களில் உள்ள ஓவியங்களைப்பற்றி எழுதுக.
5. நடுமண்டபத்தின் மேற்கூரையில் தீட்டப்பட்டுள்ள ஓவியம் பற்றி எழுதுக.
6. கரடுமுரடான பாறையில் எவ்வாறு ஓவியம் தீட்டினர் ?

(ஆ) சேர்த்து எழுதுக:

மண்டபம் + சுவர், நடனம் + தோற்றம், அன்னம் + பறவை, வலம் + புறம்.

(இ) பிரித்து எழுதுக:

மேற்கூரை, அவ்வுருவம், பனஞ்சாறு, பிற்காலம்.

(ஈ) புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்புக:

1. சிற்றண்ணல் வாயில் என்பதே............... .... என்று வழங்கப்படுகிறது.
2. தூண்களில் .... இருவரின் அழகிய உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன.
3. எருமைகள் .... திளைக்கின்றன.
4. .... கலந்த சுண்ணாம்பைப் பூசினர்.

(உ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

செங்குத்தான, அணிகலன்கள், திளைக்கின்றன, வழவழப்பாக, கரடுமுரடான.

(எ) எதிர்ச்சொல் தருக:

தொலைவு ×	உட்புறம் ×
மலர்ந்து ×	இன்பம் ×

இலக்கணம்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

தமிழர்கள் ஓவியங்களைப் பாறையில் வரைந்தனர்.— இவ்வாக்கியத்தில் கருத்து எழும் இடம் எது? தமிழர்கள் என்பது அல்லவா? எனவே, தமிழர்கள் என்பது வாக்கியத்தில் எழுவாய் ஆகும்.

தமிழர்கள் என்ன செய்தனர்? வரைந்தனர். இங்ஙனம் எழுவாய் செய்யும் தொழிலை உணர்த்திப் பொருளை முற்றுவிக்கும்சொல் **பயனிலை** எனப்படும்.

வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் வினாச்சொல்லும் எழுவாய்க்குப் பயனிலையாக அமையலாம்.

எடுத்துக்காட்டு:

1. மொட்டு **மலர்ந்தது.**
2. சித்தன்னவாசல் ஒரு **சிற்றூர்.**
3. ஓவியத்தை வரைந்தவர் **யார்?**

தமிழர்கள் ஓவியங்களை வரைந்தனர். — என்பதில் வரையப்பட்ட அதாவது செய்யப்பட்ட பொருள் ஓவியம். அது செயப்படுபொருள் எனப்படும். அது தமிழர்கள் என்னும் எழுவாய் செய்த செயலாகிய வரைதல் என்பதனை ஏற்ற பொருள். இங்ஙனம் எழுவாய் செய்யும் தொழிலின் பயனை ஏற்கும் பொருளே **செயப்படும்பொருள்** ஆகும்.

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக:

1. குருவி மரத்தில் கூட்டைக் கட்டியது.
2. எருமைகள் மலர்களைப் பறித்து வீசின.
3. கனகவல்லி வீட்டை அடைந்தாள்.
4. ஆசிரியர் மாணவனுக்குப் பாடத்தைக் கற்பித்தார்.

10. மான்

விலங்கினங்களுள் மிகவும் அழகானது மான். மானைக் கண்டு மயங்காதவர் எவரும் இலர். மான் மிகவும் சாதுவானது; வேகமாய் ஓடக்கூடியது; மருண்ட பார்வை யுடையது. மானின் பார்வையைப் பெண்களின் கண்களுக்கு உவமை கூறுவது வழக்கம். மான் துள்ளிக் குதித்து விளையாடும் காட்சி கண்களுக்கு விருந்தாகும்.

மானின் உடல் நீளமாகவும் வால் குட்டையாகவும் இருக்கும். கால்கள் மெலிந்து சற்று நீண்டு வளர்ந்திருக்கும். காலின் குளம்புகள் பிளவுபட்டிருக்கும். காதுகள் சற்று நீண்டு நிமிர்ந்து தோன்றும். ஆண் மான்களுக்குத் தலையில் கொம்புண்டு. பெண் மான் களுக்குக் கொம்பு இல்லை. மானின் கொம்பு பல கிளைகளாக நீண்டு வளரும். இக் கொம்புகள் பகை விலங்குகளிடம் இருந்து மான்கள் தம்மைக் காத்துக் கொள்ளப் பயன்படுகின்றன.

குறுங்காடுகளிலும், அவற்றை அடுத்துள்ள புல்வெளிகளிலும், விளை நிலங்கட்கு அருகிலுமே மானினங்கள் வாழும். அவை புல்லையும் தழையையும், விளையும் பயிரையும், கனிகளையும் விரும்பி உண்ணும்; தூய நீரைப் பருகும்.

கத்தூரி மான், புள்ளி மான், இரலை மான், நவ்வி மான், கடமை மான் என மானினத்தில் பலவகை உண்டு. இம்மானினங்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்றன. எனினும், இந்தியாவில்மட்டுமே எல்லாவகையான மான் இனங்களும் காணப்படுகின்றன.

கத்தூரி மான் உயர்ந்த மலைப்பகுதிகளிலேயே வாழ்கின்றன. இவ்வகை மான்கள் காச்மீர், சிக்கிம், நேப்பாளம் ஆகிய இடங்களில் பெரும்பான்மையாக உள்ளன. இம்மான்களுக்குக் கொம்புகள் இல்லை. அவற்றிற்குப் பதிலாகக் கோரப்பற்கள் உள்ளன. இவற்றின் வயிற்றில் ஒரு சுரப்பி உள்ளது. அந்தச் சுரப்பியில் ஊறும் ஒருவகை நீர்ப்பொருளே கத்தூரியாக மாறுகிறது. கத்தூரி மிக்க மணமுடையது. அது மருந்துக்கு மிகவும் பயன்படுகிறது.



கத்தூரி மான்

புள்ளி மான், இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே காணப்படுகிறது. தமிழ் நாட்டில் நீலகிரிப் பகுதியில் இம்மான் இனம் கூட்டம் கூட்டமாக வாழ் கின்றது. இதன் வால், சற்று நீளமாகவும் கூர்மையாகவும் இருக்கும். தோளின் மேல் உள்ள மயிர் வழவழப்பாக இருக்கும். இம்மானின் உடல், பளபளப்பான செம்பழுப்பு நிறமுடையது. உடலின்மேல் வெண்ணிறமான புள்ளிகள் காணப்படும். அதனாலேயே இதனைப் 'புள்ளி மான்' எனக் கூறுகின்றனர்.

புள்ளி மான்



நவ்வி மான்

நவ்வி என்னும் மான் இனம், இந்தியாவில் வட மேற்குப் பகுதியிலும், மத்தியப் பிரதேசத்திலும், கிருட்டிணா ஆறு பாயும் இடங்களிலும் மிகுதியாக வாழ்கின்றது. இது மிக்க அழகுடையது. இதன் உடலின் மேற்புறம் வெண்மை கலந்த செம்பழுப்பு நிறமாக இருக்கும். வயிற்றுப்புறம் வெண்மையாகக் காணப்படும். ஆண் மானின் கொம்பு களில் வளையங்கள் பல உள்ளன. பெண் மான்களுக்கும் கொம்புகள் உண்டு. ஆனால், அவற்றில் வளையங்கள் இருப்பதில்லை.

இரலை என்னும் மானினம், மலையாளக்கரை தவிர இந்தியாவில் ஏனைய இடங்களில் காணப்படுகிறது. இதன் கொம்புகளில் திருகலான முறுக்குகள் உள்ளன. அதனால், இதனைத் 'திரிமருப்பு இரலை' என்று தமிழிலக்கியங்கள் புகழ்கின்றன.

இரலை மான்



கடமை மான்

கடமை என்னும் மானினமே மான் வகைகளுள் மிகப் பெரியதாகும். இவ்வகை மான்கள் பெரும்பாலும் காடு களிலேயே வாழும். இம்மானின் இறைச்சியை வேட்டையாடி உண் பதில் புலிக்கு மிக்க விருப்பம் உண்டு.

மான், பார்த்து மகிழக் கூடிய உயிரினமாக விளங்குவதோடு அதன் தோலும் கொம்பும் மக்களுக்குப் பயன் படுகின்றன. துறவியர் மான் தோலை இருக்கையின்மேல் இட்டு அமர்கின் றனர். இக்காலத்தில் மான் தோலினால்

பலவகையான அழகுப் பொருள்கள் செய்யப்படுகின்றன. மான் கொம்பு வீட்டை அலங்கரிக்கவும் பல வகையான மருந்துகளுக்கும் பயன்படுகிறது. மான்குளம்பு களிலிருந்து 'வச்சிரம்' என்னும் ஒருவகைப் பசை தயாரிக்கின்றனர்.

இங்ஙனம் பலவகையிலும் பயன்படும் மானினத்தை அழியாமல் பேணிக் காப்பது நம் கடமையாகும்.

அருஞ்சொற்பொருள்

உருவம் - வடிவம், ஈடுபட்ட - மனத்தைப் பறிகொடுத்த, மருண்ட - பயந்த, உவமை - ஒப்பு, பெரும்பான்மையாக - அதிகமாக, தூய - சுத்தமான, மணம் - வாசனை, மருப்பு - கொம்பு, இறைச்சி - மாமிசம், துறவியர் - உலக ஆசையை விட்டவர்கள், இருக்கை - உட்காரும் இடம், பேணிக் காப்பது - விரும்பிக் காப்பாற்றுவது.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. மானின் உருவத்தையும் தோற்றத்தையும் பற்றி எழுதுக.
2. மானின் கொம்புகள், அவற்றுக்கு எவ்வாறு பயன்படுகின்றன ?
3. மான்கள் எங்கு வாழும் ? அவற்றின் உணவுகள் யாவை ?
4. மான் இனத்தின் பலவகைகளை எழுதுக.
5. கத்தூரி மான் எங்கெங்குக் காணப்படுகின்றது ? அதைப் பற்றி நீ அறிந்த செய்திகள் யாவை ?
6. புள்ளி மானைப் பற்றி உனக்குத் தெரிந்தவற்றை எழுதுக.
7. 'திரி மருப்பு இரலை' என்று புகழப்படும் மான் எது ? அதனை ஏன் அவ்வாறு புகழ்கின்றனர் ?
8. மான் மக்களுக்குப் பயன்படும் முறையை எழுதுக.

(ஆ) சேர்த்து எழுதுக :

நீர் + பொருள், அந்த + பார்வை, வெண்மையாக + காணப்படும், நீரை + பருகும்.

(இ) பிரித்து எழுதுக :

மானினம், வெண்ணிறம், வயிற்றுப்புறம், குறுங்காடு, வடமேற்கு.

(ஈ) புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்புக:

1. உடலின்மேல் வெண்ணிறமான புள்ளிகள் காணப்படும் மானைப் .... என்று கூறுவர்.
2. கத்தூரி மான்களுக்குக் .... இல்லை.
3. மானின் தோலினால் ...., ..., ... செய்யப்படுகின்றன.

(உ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

துள்ளிக்குதித்து, பளபளப்பாக, கூட்டம் கூட்டமாக, பெரும்பாலும்.

(ஊ) வேறுபாட்டைத் தெரிந்துகொள்க :

மாரி — மாறி, நீளம் — நீலம், தோல் — தோள், வளை — வலை, புலி — புளி.

11. கவிமணி



தமிழகத்தில் தென் கோடியிலுள்ளது குமரி மாவட்டம். அங்கிருந்த பள்ளி ஒன்றில் ஒருநாள் ஆசிரியர் வரவை எதிர்பார்த்து மாணவர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். ஆசிரியர் வந்தவுடன் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர். இருக்கையில் அமர்ந்த ஆசிரியர் தம் எதிரில் எழுதிவைக்கப்பட்டிருந்த ஒரு தாளைக் கண்டார்; அதனை எடுத்துப் படித்தார். அவர் புருவங்கள் வியப்பால் விரிந்தன. முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

அவர் மாணவர்களைப் பார்த்து, "இந்தத் தாளில் ஒரு பாடல் எழுதப்பட்டுள்ளது. இப்பாடலை எழுதியவர் யார்?" என்று கேட்டார்.

மாணவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனரே ஒழிய, எவரும் வாய் திறக்கவில்லை. அது கண்ட ஆசிரியர், "இச்செய்யுள் மிகவும் அழகாக உள்ளது; இதன் சொல்லழகும் பொருளழகும் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன; இதனை எழுதியவர் யாராயிருந்தாலும் அவரை நான் மனமாரப் பாராட்டுகிறேன்," என்றார்.

அப்பாராட்டைக் கேட்டு ஓர் உள்ளம் மட்டும் மகிழ்ச்சியால் துள்ளியது. எனினும், அந்த மாணவர், "நான்தான் எழுதினேன்" என்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. இயற்கையாக அவரிடம் அமைந்திருந்த நாணமே அதற்குக் காரணமாகும். அந்த மாணவர் யார் தெரியுமா? அவர்தாம் பிற்காலத்தில் 'கவிமணி' என்று போற்றப்பட்ட தேசிக விநாயகர்.

பிற்காலத்தில் சிறந்த கவிஞராக விளங்கிய தேசிக விநாயகரிடம் இளமையிலேயே கவிபாடும் திறமை இயற்கையாக அமைந்திருந்தது. விளையும் பயிர் முளையிலேயே தெரியுமன்றோ?

தேசிக விநாயகர் குமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் என்னும் சிற்றூரில் தாது வருடம் (கி. பி. 1876ஆம் ஆண்டு) ஆடித் திங்கள் 14ஆம் நாள் (27-7-1876) பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் சிவதாணுப் பிள்ளை, ஆதிலக்குமி அம்மையார் என்பவராவர்.

அவர் இளமையில் தேரூரில் உள்ள தொடக்கப்பள்ளியிலும் கோட்டாறு உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார். நாகர்கோயிலில் இருந்த கல்லூரி ஒன்றில் இடைநிலைக் கல்வி பயின்றார். வாணன்திட்டு என்னும் ஊரில் இருந்த மடத்தின் தலைவரான சாந்தலிங்கத் தம்பிரான் என்பவரிடம் தனியாகத் தமிழ் பயின்று பெரும் புலமை பெற்றார்.

தமிழில் பெரும்புலமை பெற்ற தேசிக விநாயகர் முதலில் நடுநிலைப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் தமிழாசிரியராக விளங்கி, 'நல்லாசிரியர்' என அனைவராலும் பாராட்டப் பட்டார்.

தேசிக விநாயகர் அன்பும் அடக்கமும் வாய்ந்தவர்; எளிமையில் விருப்பமுடையவர்; நன்றி மறவாத நல்லியல்பு உடையவர்; ஒழுக்கத்தை உயிரெனப் போற்றியவர்; இவையனைத்துக்கும் மேலாகக் குழந்தைகளிடம் பேரன்பு கொண்டவர். அதனால், அவர் குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தபோது பல குழந்தைப் பாடல்களைத் தாமே இயற்றினார்; அவற்றைப் பாடிக் காட்டிக் குழந்தைகளை மகிழ்வித்தார்.

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி;
அம்மா என்குது வெள்ளைப்பசு—உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி.'

கவிமணி இயற்றிய இந்தக் குழந்தைப் பாடல் எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள்!

இங்ஙனமே பாடுங்குயில், ஆடும்மயில், பேசும்கிளி, மக்களுக்கு உதவும் ஆடு மாடுகள், அழகு நிலா, பாய்ந்தோடும் ஆறு, உயரமான மலை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் தேசிக விநாயகர் அழகாகப் பாடியுள்ளார். அவையே பின்னர் 'குழந்தைச் செல்வம்' என்னும் நூலாக உருப்பெற்றன.

குழந்தைகளுக்கே யன்றிப் பெரியோர்களுக்கும் பாடியுள்ளார் தேசிக விநாயகர். அவர் பாடிய பாடல்களையெல்லாம் தொகுத்து, 'மலரும் மாலையும்' என்னும் நூலாக வெளியிட்டுள்ளனர். அதுமட்டும் அல்லாமல் 'ஆசிய ஜோதி', 'உமர் கய்யாம்', 'இளந்தென்றல்' முதலிய கவிதை நூல்களையும் அவர் இயற்றியுள்ளார்.

தேசிக விநாயகரின் பாடல்கள் இனிமையானவை; எளிமையானவை; கற்பனை நயம் வாய்ந்தவை. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பூட்டுபவை. இத்தகைய எளிய இனிய கவிதைகளைப் பாடியமையாலேயே அவர் கவிமணி எனப் போற்றப்பட்டார். அவர் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் மறையாது.

அருஞ்சொற்பொருள்

ஆவல் - ஆசை, இருக்கை - ஆசனம், பாராட்டு - புகழ், வாய் திறக்கவில்லை - பேசவில்லை, மனமார - மனநிறைவுடன், நாணம் - வெட்கம், கவிமணி - கவிஞர்களில் மணிபோல் சிறந்தவர், புலமை - அறிவு, நல்லியல்பு - நற்குணம், அண்டை - அருகில், உருப்பெற்றது - உருவாயிற்று, நயம் - இனிமை, தொகுத்து - ஒன்றுசேர்த்து.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. தாளில் எழுதி வைக்கப்பட்டிருந்த பாட்டினை ஆசிரியர் எவ்வாறு புகழ்ந்தார் ?
2. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்'என்னும் பழமொழி தேசிக விநாயகருக்கு எங்ஙனம் பொருந்தும் ?
3. கவிமணி எங்கு, எப்போது பிறந்தார் ? பெற்றோர் யாவர் ?
4. தேசிக விநாயகர் யாரிடம் தமிழ் பயின்றார் ?
5. தேசிக விநாயகரின் குணங்களைப் பற்றி எழுதுக.
6. கவிமணி மாணவர்கட்காக எவ்வெப்பொருள்களைப்பற்றிப் பாடல்களை எழுதினார் ?
7. கவிமணி இயற்றிய நூல்கள் யாவை ?
8. கவிமணியின் பாடல்கள் எத்தகையவை ?

(ஆ) பிரித்தெழுதுக :

சொல்லழகு, இப்பாடலை, தமிழாசிரியர், இளந்தென்றல்.

(இ) புள்ளி இட்ட இடங்களில் அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்து எடுத்து நிரப்புக :

1. 'இப்பாடலின் .... என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன.'
(எழுத்தும் சொல்லும், சொல்லழகும் பொருளழகும்)
2. தேசிக விநாயகர் .... என்பவரிடம் தமிழ் பயின்றார்.
(அம்பலவாணத் தேசிகர், சாந்தலிங்கத் தம்பிரான்)
3. தேசிக விநாயகர் .... பேரன்பு கொண்டவர்.
(உயிர்களிடம், குழந்தைகளிடம்)

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

சொல்லழகும் பொருளழகும், மனமார, இனிய, பேரன்பு.

இலக்கணம்

முக்காலம்

தேசிக விநாயகர் இளமையில் கல்வி கற்றார். — இவ்வாக்கியத்தில் அமைந்துள்ள கற்றார் என்னும் வினைச்சொல், செயல்முடிந்த காலத்தைக் காட்டுகிறது. செயல் முடிந்ததைத் தெரிவிப்பது **இறந்த காலம்** எனப்படும்.

நான் அவரை மனமாரப் பாராட்டுகிறேன். — இந்த வாக்கியத்தில் அமைந்துள்ள பாராட்டுகிறேன் என்னும் வினைச்சொல் செயல் நிகழ்கின்ற காலத்தை உணர்த்துகிறது. செயல் நிகழ்வதைத் தெரி விப்பது **நிகழ் காலம்** எனப்படும்.

மாணவர்கள் பாடல்களை விரும்பிப் பாடுவார்கள். — இவ்வாக்கியத்தில் உள்ள பாடுவார்கள் என்னும் வினைச்சொல் செயல் நிகழ இருக்கும் காலத்தைக் காட்டுகின்றது. செயல் நிகழப்போவதை உணர்த்துவது **எதிர் காலம்** எனப்படும். எனவே இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனக் காலம் மூவகைப்படும்.

பயிற்சி

(அ) தொடுக்கின்றாள், உண்ணுவான், எழுதினேன். — இவற்றைப் பின்வரும் புள்ளியிட்ட வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

1. நான் நேற்றுக் கடிதம் ....
2. மலர்விழி மலர் ....
3. முருகன் நாளை ....

(ஆ) மூன்று காலத்திலும் பொருத்தமான வேறு மூன்று வாக்கியங்களை அமைத்து எழுதுக.

12. நேருவின் அறிவியல் ஆர்வம்

(பாடல்)

குழந்தையை நேசிக்கும் பண்டிதராம்—பிள்ளைக்
குணங்களைப் பின்பற்றும் பண்டிதராம்.
விழுந்த மழைத்துளி போன்றவராம்—புது
விஞ்ஞான ஏக்கம் நிறைந்தவராம்! 1

சாதி மதங்கள் கடந்தவராம்—அவர்
சத்திய கீர்த்தியைப் போன்றவராம்.
நீதியும் நேர்மையும் கொண்டவராம்—பகை
நெஞ்சிலும் நட்பாய் நுழைந்தவராம்! 2

'ஆலையும் நற்கல்விச் சாலையுமே—நமக்
காலய மாகு'மென் றேயுரைத்தார்.
'மேலை நிலத்தவர் விந்தையைக் கண்டும்—நாம்
வேடிக்கை பார்ப்பதோ?' என்றுரைத்தார். 3

கூம்பலும் சோம்பலும் கூடாதென்றார்—வெறும்
கூச்சலில் வண்டியும் ஓடாதென்றார்.
சாம்பல் எரியுமோ மீண்டுமென்றார்—புதுச்
சாதனை அல்லவோ வேண்டுமென்றார்! 4

—கவிஞர் சுரதா

அருஞ்சொற்பொருள்

நேசிக்கும் - விரும்பும், மழைத்துளி போன்றவர் - மழைத்துளிபோல் தூயமனம் உடையவர், பகை நெஞ்சிலும் - பகைவர் உள்ளங்களிலும், ஆலயம் - கோயில், கூம்பல் - வாடுதல் (மனத் தளர்ச்சி), சோம்பல் - செயலில்லாமலிருத்தல், புதுச் சாதனை - புதிய கண்டுபிடிப்பு.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. பண்டித நேருவின் சிறந்த குணங்கள் யாவை ?
2. இந்தியர்க்கு ஆலயம் என்று நேரு எவற்றைச் சொன்னார் ?
3. நமக்கு வேண்டாதவை எவை ? வேண்டுவது யாது ?

(ஆ) இணைச்சொற்களை எழுதுக :

விழுந்த, மழை, ஆலை, குணம், வண்டி.

13. பனைவளம்

மக்களுக்குப் பயன்படும் மரங்களுள் மிகச் சிறந்தது பனைமரமாகும். பனை, தன் எல்லா உறுப்புகளாலும் பயன் தருகின்றது ; பல தொழில்களுக்கு மூலப்பொருள் களையும் கொடுத்து உதவுகிறது. அதனால் நம் நாட்டின் செல்வம் செழிக்கிறது.

பனைமரம் வெப்பம் மிகுந்த நிலப்பகுதிகளில் செழித்து வளரும். இதனை நீர் பாய்ச்சிப் பாதுகாத்து வளர்க்கத் தேவையில்லை. மணற்பாங்கான இடங்களில் பனை தானே வளரும். பனை மரங்கள் கூட்டம் கூட்டமாக வளர்ந்துள்ள இடத்தைப் பனந்தோப்பு எனக் கூறுவர்.

பனைமரம், தென்னை போலவே உயரமாக வளரும். இம்மரம் அடிப்பாகம் பருத்தும் உயர்ந்து செல்லச்செல்லச் சிறுத்தும் காணப்படும். இதற்குக் கிளைகள் இல்லை. மட்டையோடுகூடிய ஓலைகள் உச்சியில் குடைபோல அடர்ந்திருக்கும். பனையின் மேற்புறம் உறுதியானது. அது கருமையாய்ச் சுரசுரப்பாக இருக்கும். அதன் உட்புறம் செறிவில்லாமல் காணப்படும். பனையோலைகள் பசுமை நிறமாக இருக்கும். அதன் மட்டைகள் பசுமை கலந்த மஞ்சள் நிறமுடையனவாம்.

பனை ஓலைகளை மட்டையுடன் வெட்டிப் பக்குவப்படுத்தி வீடுகட்குக் கூரை வேயலாம் ; வேலியமைக்கலாம் ; குருத்தோலைகளைக் கொண்டு தடுக்குகள்,

பொம்மைகள், கிலுகிலுப்பைகள், கூடைகள், தட்டுகள், பெட்டிகள், தொப்பிகள் முதலியன செய்யலாம்; பாய் முடையலாம். பனையோலையால் விசிறிகளும் செய்யலாம்.

காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன் நம் நாட்டவர் பனை ஓலைகளிலேயே எழுத்தாணி கொண்டு எழுதி வந்தனர். நம் பழந்தமிழ் நூல்கள் யாவும் இங்ஙனமே எழுதப்பட்டன. அவற்றை 'ஓலைச்சுவடிகள்' என்று வழங்கி வந்தனர்.

பனங்காயில் உள்ள நுங்கு, கோடை காலத்தில் குளிர்ச்சிதரும் உணவாகப் பயன்படுகின்றது. பனம்பழம் இனிய சுவையுடையது. பனங்கொட்டையின் உள்ளே தேங்காய் போன்ற இனிய பருப்பிருக்கும். இதனைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கலாம். இந்த எண்ணெய் உணவுப்பொருள்களைச் சமைக்கப் பயன்படுகிறது. பனங்கிழங்கும் சத்தான உணவுப்பொருளாகும்.

இம்மரத்தின் பாளையைச் சீவினால் ஒருவகை நீர்ப்பொருள் வடியும். அதனைச் சுண்ணாம்பு தடவிய மட்குடுவையில் வடியச்செய்தால் இன்சுவை யுடையதாக இருக்கும். அதனைப் 'பதநீர்' என வழங்குவர். அஃது உடலுக்கு வலிமைதரும் உணவுப்பொருளாகும்.

பதநீரைப் பக்குவமாகக் காய்ச்சிப் பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலியன செய்யலாம். அவை உடலின் வெப்பத்தைத் தணித்து நலம் பயக்கும். பனம்பழச் சாற்றிலிருந்து 'பனைவெட்டு' என்னும் இன்சுவைப் பண்டம் தயாரிக்கப்படுகின்றது.

நன்கு முற்றிய பனைமரத்தை வேண்டிய அளவுகளில் அறுத்து எடுத்து வீடு கட்டத் தூண்களாகவும், குறுக்கு மரங்களாகவும் பயன்படுத்துகின்றனர். பனை மரம் வாய்க்கால்களைக் கடக்கக் குறுக்குப் பாலமாகவும், ஏற்றம் இறைக்கத் தூண் களாகவும் உதவுகிறது. பனைமட்டைகளிலிருந்து நார் உரித்துப் பலவகையான கயிறுகளைத் தயாரிக்கின்றனர். அக்கயிறுகள் மிகவும் உறுதி வாய்ந்தவையாம். இங்ஙனம் பயன்பட்டவை போக எஞ்சிய பாகங்கள் அனைத்தும் அடுப்பெரிக்க விறகாகப் பயன்படுகின்றன.

பனை ஓலைகளைக் கொண்டு பல பொருள்களைச் செய்வதும் பனை நாரைக் கொண்டு கயிறு தயாரிப்பதும் பனைவெல்லம் காய்ச்சுவதும் தமிழகத்தில் சிறந்த குடிசைத் தொழில்களாகவே வளர்ந்துள்ளன.

இங்ஙனம் பலவகையிலும் பயன்படுவதோடு நல்ல வருவாயையும் அளிப்ப தனால் பனை மரத்தை 'மண்ணுலகக் கற்பகத்தரு' என்று கூறுவது பொருத்தமான தன்றோ ?

அருஞ்சொற்பொருள்

மூலப்பொருள் - அடிப்படைத் தேவையாயிருக்கும் பொருள், வெப்பம் - சூடு, செறிவில்லாமல் - அடர்த்தியில்லாமல், எழுத்தாணி - ஆணிபோல் கூர்மையாக அமைந்த எழுதுகோல் ஓலைச்சுவடி - ஓலையில் எழுதப்பட்ட நூல், மண்குடுவை - மண்ணால் செய்யப்பட்ட பாத்திரம், குடிசைத் தொழில் - வீட்டிலிருந்தே செய்யும் சிறு கைத்தொழில், கற்பகத்தரு - கேட்கும் பொருளையெல்லாம் தரும் தேவலோக மரம்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. பனை எங்கு எவ்வாறு வளரும் ?
2. பனைமரத்தின் தோற்றத்தைப் பற்றி எழுதுக.
3. பனை ஓலையினால் என்னென்ன பொருள்களைச் செய்யலாம் ?
4. பனைமரத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் பொருள்கள் யாவை ?
5. பதநீர் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ? அதன் பயன் யாது ?
6. முற்றிய பனைமரம் எவ்வெவற்றிற்குப் பயன்படும் ?
7. பனையை 'மண்ணுலகக் கற்பகத்தரு' என்று கூறக் காரணம் யாது ?

(ஆ) பிரித்தெழுதுக :

நிலப்பகுதி, குருத்தோலை, பனங்கிழங்கு, மண்ணுலகம்.

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

மூலப்பொருள், மணற்பாங்கான, அறிவை மயக்கி, வெப்பத்தைத் தணித்து, எஞ்சிய.

இலக்கணம்

உயர்திணை, அஃறிணை

மாணவர்கள், மன்னன், வள்ளி — இப்பெயர்கள் யாரைக் குறிக்கின்றன ? அறிவுடைய மக்களைக் குறிக்கின்றன. இவ்வாறு மக்களைக் குறிக்கும் சொற்கள் **உயர்திணை** எனப்படும்.

பனை, தவளை, சுவடி, வீடு — இவை எவற்றைக் குறிக்கின்றன ? இவை மக்களல்லாத உயிருள்ள பொருள்களையும், உயிரில்லாத பொருள்களையும் குறிக்கின்றன. இவ்வாறு உயர்திணை அல்லாதவற்றைக் குறிக்கும் சொற்கள் (அல்+திணை) **அஃறிணை** எனப்படும்.

எனவே திணை உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

பயிற்சி

கீழ்க்காணும் சொற்களுள் உயர்திணை, அஃறிணைச் சொற்களைத் தனித் தனியே எடுத்து எழுதுக:

அண்ணன், மரம், ஔவையார், பூனை, அரசன், நாற்காலி, தம்பி, குமரன், எலி, பறவை, விளக்கு, குழந்தை, குடுவை, இறைவன்.

14. சென்னைக் கடற்கரை

தமிழ்நாட்டின் தலைநகராக விளங்குவது சென்னை மாநகரம். இயற்கையழகும் செயற்கை நலமும் வாய்ந்த இப்பெரிய நகரத்துக்குப் பெருமை தருவன பல. அவற்றுள் முதன்மையானது இதன் அழகிய கடற்கரையாகும். சென்னைக் கடற்கரை உலகிலேயே இரண்டாவது அழகிய கடற்கரை எனப் புகழ்பெற்றதாகும். முதலாவது கடற்கரை அமெரிக்காவில் இரியோடிஜெனிரோவில் உள்ளது.

சென்னைக் கடற்கரையின் சிறப்புக்குக் காரணம் அதன் பரந்த மணற்பரப்பேயாகும். இக்கடற்கரை நகரின் கீழ்த்திசையில் ஏறக்குறைய 12 கிலோ மீட்டர்த் தொலைவு தெற்கு வடக்காக அமைந்துள்ளது. கடலுக்கும் நகரத்துக்கும் இடையே வெண்ணிற மெத்தையை விரித்துப் பரப்பியதுபோலப் பரந்த வெண்மணல் வெளி காணப்படுகிறது.

இக் கடற்கரை, ஒரே சமயத்தில் பல இலட்சக் கணக்கான மக்கள் ஒருங்குகூடி இன்பப் பொழுதுபோக்குவதற்கு ஏற்ற வசதியுடையது. அதனாலேயே இக்கடற்கரை உலகப் புகழ்பெற்று விளங்குகிறது.

காலை நேரத்தில் கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களை வீசித் தோன்றும்போது கடற்பரப்பு, தங்கத்தை உருக்கி வார்த்ததுபோல் காட்சியளிக்கும். முழுநிலாக் காலத்தில் தண்ணிலவு காண்பவரை மயக்கும். ஒன்றன்பின் ஒன்றாக எழும்பி வந்து கரையை மோதும் அலைகளின் அழகும் ஆரவாரமும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

சென்னைத் துறைமுகம் உலகறிந்த பெருந்துறைமுகமாகும். பலநாட்டுக் கப்பல்களும் சென்னைத் துறைமுகத்தைத் தேடிவரும். அங்ஙனம் வரும் கப்பல்கள் கடலில் ஆங்காங்கே நின்று கொண்டிருக்கும். அவை கடல்மேல் அமைந்த மாளிகைகளோ என எண்ணத் தோன்றும். மாலை நேரங்களில் மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டு படகுகளில் திரும்பி வருவர். படகுகளில் மினுக்மினுக்கென்று எரியும் கை விளக்குகள் கடல் மங்கை கண் இமைப்பதுபோலக் காட்சியளிக்கும்.

இங்ஙனம் இயற்கை அழகுடன் விளங்கும் இக்கடற்கரையில் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடமும், பல கல்வி நிலையங்களும், அரசியல் அலுவலகங்களும், வானொலி நிலையமும், கலங்கரை விளக்கமும், தொலைக்காட்சி நிலையமும் அமைந்துள்ளன. வடக்கே பல்கலைக் கழகக் கட்டடம் தொடங்கித் தெற்கே மயிலாப்பூர்வரையுள்ள கடற்கரைப் பகுதி 'மெரினா' என வழங்கப்படுகிறது.

சென்னைக் கடற்கரையில் மிகவும் அழகான பகுதி இம்மெரினாக் கடற்கரையேயாகும். இயற்கைக்கு மேலும் எழிலூட்டும் வகையில் இங்கு வண்ண

விளக்குகள், அழகிய பூங்காக்கள், நடைபாதைகள், வானொலி முதலியன அமைக்கப்பட்டுள்ளன. கடற்கரைச் சாலையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது நிறுவிய தமிழ்ச் சான்றோர்களின் சிலைகள் அழகுக்கு மேலும் அழகு செய்கின்றன. பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு எதிரிலே உள்ள அண்ணாவின் கல்லறை அனைவர் மனத்தையும் கவரக்கூடியதாகும்.

மாலை நேரங்களில் இம்மெரினாக் கடற்கரை கோலாகலமாய் விளங்கும். இன்பப் பொழுது போக்கை விரும்பும் ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் கூட்டம் கூட்டமாய் இங்குக் கூடுவர். அவர்களில் சிலர் கடற்காற்றை நுகர்ந்து வானொலி கேட்டு மகிழ்வர். சிலர் கரைநோக்கி வரும் அலைகளில் தம் கால்களை நனைத்து ஆரவாரிப்பர். குழந்தைகள் மணல் வீடுகட்டி விளையாடி இன்புறுவர். இளைஞர்கள் வீர விளையாட்டுகளில் ஈடுபடுவர். அறிஞர்கள் பலபொருள் பற்றி வாதிடுவர். குடும்பக் கவலையை மறக்கச் சிலர் கடற்கரையை நாடி வருவர்.

சென்னைக் கடற்கரை இங்ஙனம் இன்பப் பொழுதுபோக்குக்கு உதவுவதுடன் அறிவு பெறும் அரங்கமாகவும் பயன்படுகிறது. இலட்சக்கணக்கான மக்கள் கூடும் பெருங் கூட்டங்கள் இங்கு நடத்தப்படுகின்றன. அதற்கு வசதியாகச் 'சீரணி அரங்கம்' ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் பலவகையிலும் பயன்படும் சென்னைக் கடற்கரை இயற்கை நமக்களித்த செல்வமாகும். அதனைத் தக்கமுறையில் பாதுகாத்துப் பயன்பெறுவது நமது கடமையாகும்.

அருஞ்சொற்பொருள்

செயற்கை நலம் - செய்யப்பட்டமையால் உண்டான அழகு, தண்ணிலவு - குளிர்ந்த சந்திரன், கடல்மங்கை - கடலாகிய பெண், எழிலூட்டும் - அழகைச் சேர்க்கும், பூங்கா - பூஞ்சோலை, நிறுவிய - அமைக்கப்பட்ட, கல்லறை - இறந்தோரைப் புதைக்கும் இடம், கோலாகலமாய் - மகிழ்ச்சி ஆரவாரம் மிக்கதாய், ஆடவர் - ஆண்கள், நுகர்ந்து - அனுபவித்து, வாதிப்பர் - சொற்போர் செய்வர், அரங்கம் - மேடை.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. சென்னைக் கடற்கரையின் சிறப்புக்குக் காரணம் யாது ?
2. சென்னைக் கடற்கரை உலகப் புகழ்பெற்று விளங்குவது எதனால் ?
3. கடற்கரையின் அழகிய தோற்றத்தினைப் பற்றி எழுதுக .
4. சென்னைத் துறைமுகமும், கடற்கரையிலமைந்த கட்டடங்களும் பற்றி எழுதுக.
5. 'மெரினா' என்று எதற்குப் பெயர் ? அதன் அழகினையும் பெருமையையும் விளக்குக.
6. சென்னைக் கடற்கரையில் மாலை நேரங்களில் யார் யார் வந்து கூடுவர் ?

(ஆ) சேர்த்து எழுதுக :

கடல்+கரை, விரித்து+பரப்பி, அங்கு+அங்கு, தமிழ்+சான்றோர்.

(இ) பிரித்து எழுதுக :

கீழ்த்திசை, வெண்மணல், உலகறிந்த, கடற்காற்று, நமக்களித்த.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

ஏறக்குறைய, உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும், உலகப்புகழ், கோலாகலமாய்.

(உ) எதிர்ச்சொல் தருக :

பெரிய ×	வருவீர் ×
பரந்த ×	மறக்க ×

இலக்கணம்

ஆண்பால், பெண்பால்

கண்ணன் கடற்கரைக்குச் சென்றான். — இவ்வாக்கியத்தில் கண்ணன் என்னும் பெயர் ஓர் ஆணைக் குறிக்கிறது. இங்ஙனம் உயர்திணையில் ஓர் ஆணைக் குறிக்கும் சொல் **ஆண்பால்** எனப்படும்.

சுந்தரி பள்ளிப் பாடங்களைப் படித்தாள். — இதில் சுந்தரி என்னும் பெயர் ஒரு பெண்ணைக் குறிக்கிறது. இங்ஙனம் உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறிக்கும் சொல் **பெண்பால்** எனப்படும். (பால் — பிரிவு)

பயிற்சி

(அ) கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள ஆண்பால், பெண்பால் பெயர்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக :

1. அழகன் தன் தமக்கையிடம் மிகுந்த அன்புடையவன்.
2. எங்கள் வீட்டில் முருகன், இளங்கோ, மங்கையர்க்கரசி, வாசுகி ஆகியோர் நன்றாகப் பாடுவார்கள்.
3. என் அன்னையும் தம்பியும் நாளை ஊருக்குச் செல்வார்கள்.

(ஆ) கீழ்க்காணும் சொற்களுள் ஆண்பாலுக்குப் பெண்பால் சொல்லும், பெண்பாலுக்கு ஆண்பால் சொல்லுமாக மாற்றி எழுதுக :

அரசன், பாட்டி, சிறுமி, ஆசிரியை, மாமன், தம்பி.

15. பாதிக்குப் பாதி

ஓர் ஊரில் கண்ணன் என்னும் பால் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் பால் பாதி, தண்ணீர் பாதியாகக் கலந்து விற்றுப் பணம் சம்பாதித்தான். பணம் சேரச்சேரக் கண்ணனுக்கு ஆசை அதிகரித்தது. மேலும் மாடுகள் வாங்க வேண்டும்; மக்களை ஏமாற்றிப் பணம் சேர்த்துப் பெரும் பணக்காரனாக வேண்டும் என்று அவன் மனக்கோட்டை கட்டினான்.

கண்ணனின் மனைவி சுந்தரி. அவள் மிகவும் நல்லவள். அவளுக்குத் தன் கணவனது செயல் வருத்தத்தைத் தந்தது. அச்செயலால் என்ன துன்பம் நேருமோ என்று அவள் அஞ்சினாள். "பிறரை வஞ்சித்துப் பணம் சேர்ப்பது பாவம்; அப்படிச் சேர்த்த பொருள் நிலைக்காது," என்று தன் கணவனுக்கு அறிவுரை கூறினாள்.

பேராசைப் பேயனாகிய கண்ணன், மனைவி கூறியதைக் கேட்கவில்லை. மக்களை ஏய்த்துப் பணம் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். அவன் எதிர்பார்த்த அளவு பணம் சேர்ந்தவுடன் அதை மூட்டை கட்டி எடுத்துக் கொண்டான்; மாடு வாங்க அயலூரில் நடந்த சந்தைக்குப் புறப்பட்டான்.

கால்கடுக்க நடந்துசென்ற கண்ணன் நண்பகலில் வழியிலிருந்த ஒரு மாந்தோப்பை அடைந்தான். அங்குக் குளிர்ந்த நீரையுடைய குளம் ஒன்று இருந்தது.

அங்குக் கண்ணன் தான் கொண்டுவந்திருந்த கட்டுச்சோற்றை உண்டு களைப்பாற எண்ணினான். குளக்கரையில் இருந்த மாமரத்தில் கைக்கெட்டும் வகையில் மாம்பழங்கள் பழுத்துத் தொங்கின. அவற்றைக் கண்டவுடன் கண்ணன் நாவில் நீர் சுரந்தது. அவன் தான் கொண்டு சென்ற பணமூட்டையையும் கட்டுச் சோற்றையும் கரையில் வைத்துவிட்டுப் பழம் பறிக்கச் சென்றான்.

மாந்தோப்பில் இருந்த குரங்குகளில் ஒன்று அந்த மூட்டைகளைப் பார்த்தது. கண்ணன் கவனிக்காத சமயத்தில் மெதுவாக வந்து பணமூட்டையைத் தூக்கிச் சென்றுவிட்டது.

கண்ணன் திரும்பிவந்து பார்த்தபோது பணமூட்டையைக் காணாமல் அலறினான்; நாற்புறமும் தேடினான்; ஒருவரையும் காணாமையால், "ஆசையாய்ச் சம்பாதித்த பணம் அநியாயமாய்ப் போய்விட்டதே!" என்று அழுது புலம்பினான்.

அவன் அழுவதைக் கண்ட குரங்குகள் 'கீச் கீச்' என்று கத்தின. கண்ணன் அக்குரங்குகளில் ஒன்றன் கையில் தன் பணமூட்டை இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டான்; அக்குரங்கை நோக்கி ஓடினான். அது கண்ட குரங்கு, கிளைக்குக் கிளை தாவிக் குளத்தின் நடுப்பகுதிவரை நீண்டிருந்த ஒரு கிளையில் போய் உட்கார்ந்துகொண்டது. கண்ணன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான்; குரங்கு பணமூட்டையைக் குளத்தில் போட்டுவிடுமோ என்று பயந்தான்; அதனால், அதைத் துரத்தாமல் பணமூட்டையைத் தன்னிடம் கொடுக்குமாறு சாடை காட்டிக் கேட்டான்.

குரங்கோ, மூட்டையிலிருந்த ஒரு நாணயத்தை எடுத்துத் தின்பண்டம் என்று நினைத்துக் கடித்துப் பார்த்தது. அது கடிபடாமல் போகவே வெறுப்புடன் குளத்தில் வீசியது. அது கண்டு கண்ணன் 'ஐயோ' என்று அலறினான். குரங்கு மற்றொரு நாணயத்தை எடுத்துக் கடித்துப் பார்த்தது. அதுவும் கடிபடாமற் போகவே வெறுப் படைந்து மூட்டையிலிருந்த நாணயங்களைப் பிடிப்பிடியாக எடுத்துக் குளத்தில் வீசி எறிந்தது. கண்ணன் அதைப் பார்த்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதான்; தன்னை நோக்கி வீசுமாறு குரங்கினிடம் கெஞ்சினான். குரங்கு மூட்டை யில் எஞ்சியிருந்த பணத்தைக் கண்ணனிடம் வீசி எறிந்துவிட்டு ஓடிவிட்டது.

குரங்கு வீசியெறிந்த நாணயங்களை எல்லாம் கண்ணன் ஆவலோடு பொறுக்கிச் சேர்த்தான். தான் கொண்டு சென்றதில் பாதிப் பணமே அவனுக்குக் கிடைத்தது. அவன் அழுதுகொண்டே வீடு திரும்பினான்.

வெறுங்கையோடு வந்த கண்ணனைக் கண்ட அவன் மனைவி திடுக்கிட் டாள். "என்ன நேர்ந்தது?" என்று பரிவுடன் கேட்டாள். கண்ணன் நடந்ததைக்

கூறினான்; "பாடுபட்டுத் தேடிய பணத்தில் பாதி தண்ணீரில் போய்விட்டதே!" என்று புலம்பினான்.

அதுகேட்ட சுந்தரி, "பாடுபட்டுத் தேடிய பணம் பாழாகவில்லை. அஃது உங்களுக்குக் கிடைத்துவிட்டது. தண்ணீரில் வந்த பணந்தான் தண்ணீரோடு போய்விட்டது. இனிமேலாவது பிறரை ஏமாற்றாமல் உழைத்துப் பொருள் தேடுங்கள். உழைப்பு என்றும் வீணாகாது," என்று ஆறுதல் கூறினாள்.

மனைவி கூறியதைக் கேட்டுக் கண்ணன் மனந்திருந்தினான். அன்றிலிருந்து அவன் பாலில் நீர் கலந்து விற்கும் பழக்கத்தைக் கைவிட்டு நல்ல வணிகனாக மாறிவிட்டான்.

அருஞ்சொற்பொருள்

அஞ்சினாள் - பயந்தாள், ஏய்த்து - ஏமாற்றி, கால்கடுக்க - கால்நோக, பரிவுடன் - இரக்கத்தோடு.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. கண்ணன் என்பவன் எவ்வாறு பால் விற்றுப் பொருள் சேர்த்தான்?
2. சுந்தரி, தன் கணவனுக்குக் கூறிய அறிவுரை யாது?
3. கண்ணன் தான் கொண்டு சென்ற பணமூட்டையை எவ்வாறு இழந்தான்?
4. குரங்கு கண்ணனது பணமூட்டையை எடுத்துச்சென்று என்ன செய்தது?
5. சுந்தரி கண்ணனுக்குக் கூறிய ஆறுதல் மொழிகள் யாவை?
6. இக்கதையினால் நீ அறியும் நீதி யாது?

(ஆ) சேர்த்து எழுதுக:

பேராசை+பேயன், பழுத்து+தொங்கின, தூக்கி+சென்றது, கிளைக்கு+கிளை.

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

சேரச்சேர, மனக்கோட்டை, எஞ்சியிருந்த, பிடிப்பிடியாக,

இலக்கணம்

ஆடவர், பெண்டிர், மக்கள்—இச்சொற்கள் ஆண்களில் பலரையும், பெண்களில் பலரையும், ஆண் பெண் சேர்ந்த பலரையும் குறிக்கின்றன அல்லவா? இங்ஙனம் உயர்திணையில் பலரைக் குறிக்கும் சொற்கள் **பலர்பால்** எனப்படும்.

வள்ளுவர், ஔவையார் என ஒருவரையே பலர்பாலாகக் கூறுவதும் உண்டு. அது **மரியாதைப் பன்மை** எனப்படும்.

பயிற்சி

(அ) கீழ்க்காணும் சொற்களில் பலர்பால் சொற்களை மட்டும் எடுத்து எழுதுக:

அரசன், பெற்றோர், மகள், மங்கையர், தொழிலாளர், மனைவி, வணிகன், நண்பர்,

(ஆ) பின்வரும் சொற்களைப் பலர்பாலாக மாற்றி எழுதுக:

சிறுமி, சிறுவன், தோழி, வேலைக்காரன், தம்பி, தங்கை.

16. வானொலி

(பாடல்)



வானொலியாம் வானொலி ;
    வகைவகையாம் வானொலி !
வேண்டும்போது வைக்கலாம் ;
    விரும்பியதைக் கேட்கலாம் ! 1

உலகிலுள்ள செய்தியை
    ஒலிபரப்பும் வானொலி !
பலரும் நன்மை அடையவே
    பக்கத்துணை வானொலி ! 2

பாட்டுக்கேட்டு மகிழலாம் ;
    பாடங்கூடக் கேட்கலாம்.
நாட்டிலுள்ள நிலைமையை
    நமக்குச்சொல்லும் நண்பனாம். 3

ஒலியின்மூலம் உணர்ச்சியை
    ஊட்டுகின்ற வானொலி !
கலைகள் பலவும் படைக்குமாம்;
    கதைகள்கூறும் வானொலி ! 4

—பி. வி. கிரி

அருஞ்சொற்பொருள்

வகைவகை - பலவகை, விரும்பியது - நாம் ஆசைப்பட்டது, பக்கத்துணை - நீங்காமலிருக்கும் துணை, படைக்கும் - உண்டாக்கும்.

பயிற்சி

வானொலியினால் நாம் அடையும் நன்மைகள் யாவை ?

17. உழவுத் தொழில்

பாரதநாடு உலகிலேயே நீர்வளமும் நிலவளமும் சிறந்த நல்ல நாடாகும். வடக்கே இமயம்முதல் தெற்கே குமரிவரை பல ஆறுகள் பாய்ந்து பாரதத்தை வளம் செய்கின்றன. அதனால் எங்கு நோக்கிலும் பச்சைப் பசேலெனத் தோன்றும் வயல்களும் சோலைகளும் நம் கண்களைக் கவரும் கவின்மிகு காட்சிகளாய் விளங்குகின்றன.

வயல் வளம் சிறந்துள்ளமையால் நம் நாட்டில் பெரும்பாலானவர் உழவுத் தொழிலையே மேற்கொண்டு வாழ்கின்றனர். அவர்கள் நிலத்தை உழுது உணவுத் தானியங்களையும் பிறவற்றையும் பயிர் செய்வதனால் 'உழவர்' எனப்பட்டனர். அவர்கள் செய்யும் தொழில் 'உழவுத் தொழில்' எனப்பட்டது.

உழவர்களே உலகத்தில் உள்ள அனைவர்க்கும் உணவு அளிக்கின்றார்கள். உழவர்கள் நிலத்தை உழுது பயிர் விளைவிக்காவிட்டால் நமக்கு உணவு கிடைக்காது. எல்லாரும் பட்டினியால் இறக்க நேரிடும். அதனால் உழவர்களே உலகமாகிய தேருக்கு அச்சாணி போன்றவர்கள் என்று திருவள்ளுவர் பாராட்டுகிறார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த உழவுத் தொழில் செய்யும் முறையைச் சிறிது தெரிந்து கொள்வோம். உழவுத் தொழில் செய்வதற்கு நல்ல நிலம் வேண்டும்;

தண்ணீர் வேண்டும்; கலப்பை முதலிய கருவிகள் தேவை. நிலத்தை உழுவதற்குக் கால்நடைகள் வேண்டும். இவையெல்லாம் நம் நாட்டில் மிகுதியாக இருக்கின்றன.

பயிர் விளையும் நிலம் நன்செய், புன்செய் என இரு வகைப்படும். நன்செய் நிலத்தில் நெல் விளையும்; கரும்பும் பயிராகும். அதற்கு எப்போதும் தண்ணீர் வேண்டும். அதனால் வளமான ஆற்றங்கரைகளிலும், ஏரி, குளம், கிணறு இவற்றை அடுத்தும் நன்செய் நிலங்கள் அமைந்திருக்கும்.

புன்செய் நிலத்தில் கேழ்வரகு, கம்பு, சோளம், தினை, உழுந்து, எள் முதலான தானியங்கள் விளையும். இதற்குச் சிறிதளவு தண்ணீர் போதும். இரண்டு மூன்று முறை மழை பெய்தாலும் புன்செய்த் தானியங்கள் நன்கு விளையும். இதனால் இந்நிலத்தை 'வானம் பார்த்த பூமி' என்பர்.

உழவர்கள் நன்செய் நிலத்தைக் கலப்பையால் ஆழமாகப் பல முறை உழுவார்கள். 'அகல உழுவதிலும் ஆழ உழு' என்பது பழமொழி. அங்ஙனம் ஆழ உழுவதால் கீழ்மண் மேல்மண்ணாக மாறிப் பயிருக்கு நல்ல சத்துக் கிடைக்கும். பிறகு நிலத்திற்கு நீர் பாய்ச்சிச் சேறாக்குவர். சேறாக்கப்பட்ட நிலத்தின் ஒரு மூலையில் நெல்விதைகளை விதைப்பர். அவ்விதைகள் முளைத்து வளரும். அவை 'நாற்றுகள்' எனப் பெயர் பெறும். நாற்றுகள் பயிராகும் அச்சிறிய நிலப்பகுதிக்கு 'நாற்றங்கால்' என்பது பெயர்.

நாற்று வளர்வதற்குள் உழுது சேறாக்கிய நிலத்தைச் சமப்படுத்தி வைத்திருப்பர். நாற்றுகள் சிறிது உயரம் வளர்ந்தவுடன் அவற்றை வேரோடு பறித்துச் சமப்படுத்திய சேற்று நிலத்தில் ஒன்றுக்கொன்று இடம்விட்டு நடுவார்கள். அதனை 'நாற்று நடுதல்' என்று கூறுவர்.

நாற்றுகள் வேர் ஊன்றிச் செழித்து வளரும். அப்போது பயிருடன் புல் பூண்டுகளும் முளைக்கும். அவை 'களை' எனப்படும். களை, பயிருக்குரிய நீரையும் சத்தையும் கவர்ந்துகொண்டு பயிர் செழித்துவளர முடியாமல் கெடுக்கும். அதனால் உழவர்கள் விழிப்போடு கவனித்து அக்களைகளைப் பிடுங்கி எறிந்துவிடுவர்.

இவ்வாறு அடிக்கடி கவனித்து எருவிட்டுத் தண்ணீர் பாய்ச்சி வந்தால் பயிர்கள் நன்றாக வளர்ந்து கதிர்விடும். கதிர் முற்றியவுடன் பயிர்கள் தலை சாய்ந்துவிடும். முற்றிய நெற்கதிர்கள் பொன் நிறமாக இருக்கும். அப்போது அப்பயிர்களை அறுத்துவிடுவர். அதனை 'அறுவடை செய்தல்' என்பர்.

அங்ஙனம் அறுவடை செய்த அரிதாள்களைக் களத்துமேட்டிற்குக் கொண்டு சென்று நிலத்தில் அடித்து நெல்மணிகளை உதிர்ப்பர். பின்னர், அந்த அரிதாள்களை நிலத்தில் பரப்பி மாடுகளைப் பிணைத்து மிதிக்கச் செய்வர். அதனால்

எஞ்சியுள்ள நெல் மணிகளும் உதிர்ந்துவிடும். உதிர்ந்த நெல் மணிகளைக் காற்றில் தூற்றித் தும்பு தூசுகளை அகற்றித் தூய்மை செய்து வீட்டிற்குக் கொண்டு செல்வர். அதனாலேயே 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்னும் பழமொழி ஏற்பட்டது.

புன்செய்ப் பயிர்கட்கு இவ்வளவு உழைப்பு வேண்டா. நிலத்தை உழுது புழுதியாக்கி விதைத்துவிட்டால் போதும். அவ்வப்போது பெய்யும் மழையினால் அவை செழித்து வளர்ந்துவிடும்.

அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் பல புதிய உழவு முறைகள் தோன்றியுள்ளன. உழுதல், சமப்படுத்தல், விதைத்தல், களைபறித்தல், அறுவடை செய்தல், தானியங்களைப் பிரித்தெடுத்தல் போன்ற பல வேலைகளுக்கும் புதிய கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்கருவிகளின் உதவியால் பெரிய நிலப்பரப்பில் ஏராளமாகப் பயிர் செய்யலாம். நிலத்துக்கு ஊட்டம் அளிக்கும் பலவகை இரசாயன உரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றால் பலர் ஒன்று சேர்ந்து கூட்டுப் பண்ணை முறையில் உழவுத் தொழிலைச் செய்தால் நம் நாட்டில் உணவுப் பஞ்சமே உண்டாகாது.

நம் அரசு கூட்டுறவு முறையில் உழவு செய்ய ஊக்கம் அளித்துவருகிறது. அதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் பல தோன்றியுள்ளன. அவற்றின்மூலம் உழவர்களுக்கு வேண்டிய விதை, உரம் முதலியன தரப்படுகின்றன. குறைந்த வட்டியில் கடனும் தரப்படுகிறது. இம்முயற்சிகளால் நம் நாடு உழவுத் தொழிலில் பெருமளவு முன்னேற்றம் பெற்று வருகிறது.

அருஞ்சொற்பொருள்

கவின்மிகு - அழகு வாய்ந்த, அச்சாணி - கடையாணி, புன்செய் - குறைந்த நீரினால் பயிர் விளையும் நிலம், வேர் ஊன்றி - வேர் பூமியில் பற்றிக்கொண்டு, கவர்ந்து கொண்டு - இழுத்துக் கொண்டு, அரிதாள் - அரியப்பட்ட தாள், ஊட்டம் - சத்து.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. நம் நாட்டில் பெரும்பாலோர் உழவுத் தொழிலை மேற்கொள்ளக் காரணம் யாது ?
2. உழவர்களை உலகத்தின் அச்சாணி என்று சொல்லக் காரணம் என்ன ?
3. நன்செய், புன்செய் என்றால் என்ன ?
4. நன்செய், புன்செய் நிலங்களில் விளையும் பயிர்கள் யாவை ?
5. 'நாற்றங்கால்' என்று எதற்குப் பெயர் ?
6. 'களை பறித்தல்' என்றால் என்ன ?
7. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' — இப்பழமொழி எதனால் ஏற்பட்டது ?
8. உழவுத் தொழில் வளர நம் தமிழக அரசு செய்துள்ள உதவிகள் யாவை ?

(ஆ) சேர்த்து எழுதுக :

பயிர் + தொழில், நெல் + கதிர், நெல் + மணி, நிலம் + பரப்பு.

(இ) பிரித்து எழுதுக :

அச்சாணி புன்செய், ஆற்றங்கரை, சேற்றுநிலம், நன்செய்.

(ஈ) புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை இட்டு நிரப்புக :

1. உழுது பயிர் செய்வதனால் .... எனப்பட்டனர்.
2. உழவர்கள் உலகமாகிய தேருக்கு .... போன்றவர்கள்.
3. புன்செய் நிலத்தை .... என்பர்.
4. நாற்றைச் சேற்று நிலத்தில் .... இடம்விட்டு நடுவார்கள்.
5. அரிதாள்களைப் பரப்பி .... மிதிக்கச் செய்வர்.

(உ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பச்சைப்பசேல் என, கவின்மிகு, கவர்ந்துகொண்டு, எஞ்சியுள்ள.

இலக்கணம்

ஒன்றன்பால், பலவின்பால்

எருது வயலை உழுதது. — இவ்வாக்கியத்தில் 'எருது' என்னும் சொல் ஒன்றைக் குறிக்கின்றதா? பலவற்றைக் குறிக்கின்றதா ? ஒன்றையே குறிக்கின்றது அன்றோ ? இங்ஙனம் அஃறிணையில் ஒன்றைக் குறிக்கும் சொல் **ஒன்றன்பால்** எனப்படும்.

உதிர்ந்த நெல்மணிகளைக் காற்றில் தூற்றுவர். இவ்வாக்கியத்தில் உள்ள 'நெல்மணிகள்' — என்னும் சொல் பலவற்றை உணர்த்துகிறதா ? ஒன்றையே உணர்த்துகிறதா ? பலவற்றை உணர்த்து கிறது அன்றோ ? இவ்வாறு அஃறிணையில் பலவற்றைக் குறிக்கும் சொல் **பலவின்பால்** எனப்படும்.

பயிற்சி

(அ) கீழ்க்காணும் சொற்களை ஒன்றன்பால், பலவின்பால் என வகைப்படுத்தி எழுதுக :

மரம், கிளைகள், மான், பாறை, மலர்கள், அவை, புத்தகம், கல், குரங்குகள்.

(ஆ) கீழ்க்காண்பனவற்றுக்கு ஒன்றன்பால் பெயர்களை எழுதுக :

மயில்கள், ஆறுகள், தாள்கள், மாலைகள், கிளிகள்.

(இ) கீழுள்ளவற்றுக்குப் பலவின்பால் பெயர்களை எழுதுக :

நூல், நாற்காலி, வீடு, பலகை, குன்று.

18. அன்பின் சின்னம்



இந்தியாவில் உள்ள அழகிய கட்டடங்களுள் தாஜ்மகால் தலை சிறந்ததாகும். இஃது, ஆக்ரா நகரில் யமுனை ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. **ஷாஜஹான்** என்னும் மொகலாய மன்னர் தம் மனைவி மும்தாஜ் மகாலின்மீது கொண்டிருந்த அன்புக்கு அடையாளமாக இந்த அற்புதமான கட்டடத்தைக் கட்டினார்.

மும்தாஜ் மகால் என்பதற்கு ‘அரண்மனையின் அணிகலன்’ என்பது பொருள். ஷாஜஹானின் அன்பு மனைவியாகிய அவள், பெயருக்கு ஏற்ப அரண் மனைக்கு மட்டுமன்றி நாட்டுக்கே அணிகலமாக விளங்கினாள்; ஏழை எளியவர் களிடம் இரக்கம் உடையவளாய் அவர்களுக்குப் பலவித நன்மைகளைச் செய்தாள். அதனால் குடிமக்கள் அவளைத் தாயைப் போல நேசித்தனர். அரசரும் அவள்மீது உயிரையே வைத்திருந்தார்.

ஒருசமயம் அரசர் பர்காம்பூரில் நடந்த போருக்குச் சென்றிருந்தார். மும்தாஜ் மகாலும் உடன் சென்றிருந்தாள். அங்கு எதிர்பாராத வகையில் அவள் இறந்து விட்டாள். அதனால் வேந்தர் மிகவும் வேதனைப்பட்டார். ஆற்றமுடியாத துக்கம் கொண்டார். அரசியின் பிரிவால் நாடே துயரத்தில் மூழ்கியது.

மன்னர் தம் மனைவியின் உடலை ஆக்ராவுக்குக் கொண்டுவந்து யமுனைக் கரையிலிருந்த அரண்மனைத் தோட்டத்தில் அடக்கம் செய்தார்; அந்த இடத்தில் என்றும் அழியாத ஓர் அழகிய நினைவுச் சின்னம் அமைக்க அவர் ஆசைப்பட்டார். அந்த ஆசையின் விளைவாக எழுந்ததே தாஜ்மகால். இருபதினாயிரம் பேர் இருபத் தோராண்டுகள் பாடுபட்டு இக்கட்டடத்தைக் கட்டி முடித்தனர். இதற்கு ஆறு கோடி ரூபாய் செலவாயிற்று.

'தாஜ்மகால்' என்னும் அக்கட்டடம் ஒரு பெரிய தோட்டத்திற்கு நடுவே உயரமான சலவைக்கல் மேடைமேல் அமைந்துள்ளது. இக்கட்டடம் 55·8 மீட்டர் அளவுள்ள நாற்சதுரமாய் அமைந்துள்ளது. நான்கு மூலைகளிலும் இரண்டடுக்காக அமைந்த மேன் மாடங்கள் உள்ளன. அதன் ஒவ்வொரு மூலையும் கூர்மையாக இல்லாமல் ஒரே அளவாக வெட்டப்பட்டுள்ளது. நடுவே உள்ள கூடத்தின்மேல் பெரிய கவிகை மாடம் அமைந்துள்ளது. அதன் உச்சியில் பொன்னிறமான பிறை ஒளிவீசுகிறது. மேடையின் நான்கு பக்கங்களிலும் உயரமான பள்ளிவாசல் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டடத்தின் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் உயரமான வாயிலிலும் சாளரங்களிலும் நுண்ணிய வேலைப்பாடமைந்த பல சிற்பங்கள் செதுக்கப்பட் டுள்ளன. கட்டடத்தின் உட்புறம் பூங்கொடிகளைப் போன்ற வேலைப்பாடு அமைந்த சிற்பங்களில், பழங்காலத்தில் விலையுயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பட் டிருந்தனவாம். இப்போது அவ்விடங்களில் பலவண்ணக் கண்ணாடிக் கற்கள் ஒளி வீசுகின்றன.

கட்டடத்தின் நடுவேயுள்ள கூடத்தின்கீழ் அமைந்த அறையில் மும்தாஜ் மகாலின் உடலும் ஷாஜஹானின் உடலும் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகள் அடுத்தடுத்து அமைந்துள்ளன. அவ்விடம் மிகவும் அமைதியாகக் காணப்படுகிறது.

தாஜ்மகால் கட்டடத்திற்கு எதிரே நீளமான செய்குளம் ஒன்று உள்ளது. அக்குளத்தின் நீர்ப்பரப்பில் தாஜ்மகாலின் உருவம் நிழலாகப் படிந்து காணப்படும் தோற்றம் பேரெழில் வாய்ந்ததாகும். முழுவதும் சலவைக்கல்லாலேயே கட்டப்பட் டுள்ள அக்கட்டடம் முழுநிலா நாளில் மோகனக் காட்சி வழங்கும். வெள்ளிய நில வொளியில் தாஜ்மகாலின் கவின்மிகு காட்சியைக் காண மக்கள் ஏராளமாய்க் கூடுவர்.

ஷாஜஹான் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு கட்டிய கட்டடம் இது. எனினும், இன்றும் பொலிவு குன்றாமல் அம்மன்னன் மும்தாஜின்மேல் கொண்டிருந்த அழிவற்ற அன்பின் சின்னமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

அருஞ்சொற்பொருள்

தலைசிறந்தது - மிக உயர்ந்தது, அணிகலன் - ஆபரணம், சாளரம் - சன்னல், வேந்தர் - மன்னர், ஆற்றமுடியாத - தணிக்க இயலாத, சின்னம் - அடையாளம், செய்குளம் - செய்யப்பட்ட (செயற்கை) குளம், பேரெழில் - பேரழகு, மோகனக் காட்சி - காண்பாரை மயக்கும் அழகிய தோற்றம், பொலிவு - அழகு.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. தாஜ்மகால் கட்டடம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது ?
2. தாஜ்மகால் யாரால் எதற்காகக் கட்டப்பட்டது ?
3. மும்தாஜின் குணங்களைப் பற்றி எழுதுக.
4. தாஜ்மகால் கட்டடம் எவ்வாறு கட்டப்பட்டது ?
5. தாஜ்மகாலின் கட்டட அமைப்பைப்பற்றி எழுதுக.
6. தாஜ்மகாலின் மோகனக் காட்சியை விளக்குக.

(ஆ) சேர்த்து எழுதுக :

தாயை + போல, அரண்மனை + தோட்டம், மோகனம் + காட்சி, நினைவு + சின்னம்.

(இ) பிரித்து எழுதுக :

இருபதினாயிரம், பொன்னிறமான, உட்புறம், பழங்காலம்.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைக்க :

ஏழை எளியவர், அடுத்தடுத்து, பேரெழில், பொலிவு குன்றாமல்.

இலக்கணம்

தன்மை இடம்

நான் படித்தேன், **நாங்கள்** படித்தோம்.—இவ்வாக்கியங்களில் வந்துள்ள நான், நாங்கள் என்னும் பெயர்கள் யாரைக் குறிக்கின்றன? நான் என்பது பேசுபவன் தன்னையும், நாங்கள் என்பது பேசுபவன் தன்னோடு தன்னைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் சொற்கள் அல்லவா ? இங்ஙனம் பேசுபவன் தன்னையும் தன்னோடு தன்னைச் சார்ந்தவர்களையும் குறிப்பது **தன்மை இடம்** எனப்படும்.

நான், யான் — தன்மை ஒருமைப் பெயர்கள்
நாம், யாம், நாங்கள், யாங்கள்—தன்மைப் பன்மைப் பெயர்கள்.

பயிற்சி

தன்மை ஒருமைப் பெயர், தன்மைப் பன்மைப் பெயர்களை அமைத்துச் சில வாக்கியங்கள் எழுதுக.

19. கடிதம் எழுதுதல்

(1) மகன் தந்தைக்கு எழுதிய கடிதம்

12, சிதம்பரனார் தெரு,
சென்னை - 600 017,
15—9—1982

அன்பு மிக்க தந்தைக்கு,

வணக்கம். இங்கு நானும் சிறிய தந்தை, சிற்றன்னை, தம்பிகள் அனைவரும் நலமாக இருக்கின்றோம். தங்கள் நலத்தையும் தாயார், தமையன், தமக்கை, பாட்டி ஆகியோர் நலன்களையும் அறிய ஆவலாக இருக்கின்றேன்.

நான் சிறிய தந்தையாரின் வீட்டில் எவ்விதக் குறையும் இன்றி நன்கு படித்து வருகின்றேன். வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாகத் திகழ்கின்றேன்.

வரும் அரையாண்டு விடுமுறையில் எங்கள் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் சுற்றுலாச் செல்லவிருக்கின்றனர். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நகரங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று காண்பிப்பதென ஆசிரியர்கள் முடிவு செய்துள்ளார்கள். நானும் அச்சுற்றுலாவில் கலந்து கொள்ள விரும்புகின்றேன். அதற்கு ஐம்பது ரூபாய் கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

எனவே, அதற்குத் தங்கள் இசைவை அளிப்பதுடன் கட்டணத் தொகையையும் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மகன்,
பொ. இளங்கோ

முகவரி :

திரு. க. பொன்னடியான் அவர்கள்,
139, திருவள்ளுவர் தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்

(2) தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்

139, திருவள்ளுவர் தெரு,
காஞ்சிபுரம்.
19—9—'82

அன்புள்ள மகன் இளங்கோவுக்கு,

உளம் நிறைந்த நல்வாழ்த்து. சிறிய தந்தையாருக்கும் சிற்றன்னையாருக்கும் தம்பிகளுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவிப்பாயாக. இங்கு அனைவரும் நலம். உன் நலத்துக்கு அடிக்கடி கடிதம் எழுதுக.

நீ நன்றாகப் படித்து முதல் மாணவனாக விளங்குவது அறிந்து அம்மாவும் நானும் மிக்க மகிழ்ச்சியடைந்தோம். இந்நிலையை நீ என்றும் காக்கவேண்டும்.

உன் பள்ளியிலிருந்து செல்லவிருக்கும் சுற்றுலாவில் நீ கலந்து கொள்ள விரும்புவதை அறிந்து மகிழ்கிறேன். பள்ளிப் பருவத்தில் பல இடங்களையும் பார்ப்பது நல்லது. அஃது உன் பொது அறிவு வளர்ச்சிக்கு மிகவும் உதவும்.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகியவை வரலாற்றுப் புகழ்படைத்த பழமையான பெரு நகரங்களாம். முக்கியமான அவ்விடங்களைப் பார்க்கும்போது ஆசிரியர்கள் அவை பற்றிய செய்திகளை உங்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். அவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக் குறித்துவைத்துக் கொண்டால் பிறகு உன் கல்விக்கு உதவும்.

நீ விரும்பியவாறே, சுற்றுலாச் செல்ல இசைவு அளிப்பதோடு கேட்டிருந்த தொகையையும் பணவிடைமூலம் அனுப்பியுள்ளேன். உன் கைச் செலவுக்குப் பின்னர்ப் பணம் அனுப்புவேன். சுற்றுலாவுக்குச் சென்று வந்தபின் நீ கண்ட காட்சிகளைப்பற்றி எனக்கு எழுதுவாயாக.

இங்ஙனம்,
உன் அன்புள்ள அப்பா,
க. பொன்னடியான்

முகவரி :

செல்வன் பொ. இளங்கோ,
12, சிதம்பரனார் தெரு,
சென்னை-600 017

அருஞ்சொற்பொருள்

1. சிற்றன்னை - சிறிய தாயார், தமையன் - அண்ணன், தமக்கை - அக்காள், ஆவல்-ஆசை, திகழ்கிறேன் - விளங்குகிறேன், சுற்றுலா - இன்பப் பயணம், இசைவு - ஒப்புதல்.

2. இந்நிலை - இந்தத் தகுதி, பணவிடை - 'மணியார்டர்.'

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. இளங்கோ தந்தைக்கு எழுதிய செய்தி யாது ?
2. சுற்றுலாச் செல்ல விரும்பிய மகனுக்குத் தந்தை கூறிய அறிவுரை யாது ?
3. கடிதத்தை எவ்வாறு தொடங்க வேண்டும் ? எவ்வாறு முடிக்க வேண்டும் ?
4. நீ உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

(ஆ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பள்ளிப்பருவத்தில், பொது அறிவு, கவனமாகக்கேட்டு, கண்ட காட்சி, சுற்றுலா.

இலக்கணம்

முன்னிலை இடம்

நீ படித்தாய், நீங்கள் படித்தீர்கள்—இவ்வாக்கியங்களில் வந்துள்ள நீ, நீங்கள் என்னும் பெயர்கள் யாரைக் குறிக்கின்றன என்பது பேசுபவன் முன் நின்று கேட்பவனையும், நீங்கள் என்பது முன் நின்று பேசுபவர்களையும் குறிக்கின்றன அல்லவா? இங்ஙனம் பேசுபவன் முன் நிற்பவனையும், அவனைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் இடம் **முன்னிலை இடம்** எனப்படும்.

நீ — முன்னிலை ஒருமைப்பெயர்.

நீர், நீவிர், நீங்கள் — முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

பயிற்சி

முன்னிலை ஒருமைப் பெயர், பன்மைப் பெயர்களை அமைத்துச் சில வாக்கியங்கள் எழுதுக.

20. ஊனமுற்றோர்க்கு உதவல்



தந்தை : வளவா! நீ பள்ளி விட்டதும் வீட்டுக்கு வருவாயே. இன்று ஏன் இவ்வளவு நேரம் கழித்து வருகிறாய்? விளையாடப் போய்விட்டாயா?

வளவன் : இல்லை அப்பா! மருத்துவ மனைக்குச் சென்றிருந்தேன். அதனால் சிறிது நேரமாகிவிட்டது.

தந்தை : மருத்துவமனைக்கா? அங்கு உனக்கென்ன வேலை?

வளவன் : என் நண்பன் செழியனின் அண்ணன் சாலையைக் கடக்கும்போது அவர்மேல் ஒரு பேருந்து மோதிவிட்டது. அவரை மருத்துவ மனையில் சேர்த்துள்ளனர். அவரைப் பார்க்கவே நான் சென்றேன்.

தந்தை : அவருக்கு உடல்நலம் எப்படி உள்ளது? அடி பலமாகப் பட்டுவிட்டதா?

வளவன் : அடி பலம்தான் அப்பா! அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. அவருடைய ஒரு கால் துண்டாகிவிட்டது. மற்றொரு கால் எலும்பு முறிந்து விட்டது. இனி அவரால் நடக்க முடியாதப்பா.

தந்தை : ஐயோ பாவம்! சாலையைக் கடக்கும்போது எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். அவசரப்பட்டுச் சென்றால் இவ்வாறுதான் துன்பத்தில்

சிக்கிக்கொள்ள நேரிடும். இங்ஙனம் விபத்துக்குள்ளாகி உடல் ஊனமுற்றோர் நம் நாட்டில் ஏராளமாக இருக்கின்றனர்.

வளவன் : ஆமாம் அப்பா ! கைகால் இழந்தவர்கள், கண் இல்லாதவர்கள், காது கேளாதவர்கள், பேச முடியாத ஊமைகள் என உடல் ஊனமுற்றவர்கள் பலரை நானும் நாள்தோறும் பார்க்கின்றேன். அவர்கள் எல்லாரும் இப்படி விபத்துக்கு ஆளானவர்கள்தாமா ?

தந்தை : அப்படிச் சொல்லிவிட முடியாது. சிலர் பிறவியிலேயே ஊனம் உள்ளவர் களாகப் பிறந்திருக்கலாம். நோய்வாய்ப்பட்டும் சிலர் அந்நிலையை அடைந்திருக்கலாம். அவர்களுக்கெல்லாம் நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும். அதனால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார் கள் தெரியுமா ?

வளவன் : நீங்கள் சொன்னது மிகவும் சரியப்பா. நான் நேற்றுப் பள்ளிக்கூடம் செல்லும்போது பார்வை இழந்த பெரியவர் ஒருவர் சாலையைக் கடக்க முயன்றார். அப்போது ஒரு பேருந்து வருவதை அறிந்த நான் அவரைத் தடுத்து நிறுத்தினேன். பிறகு அவர் கையைப் பற்றி அழைத்துச் சென்று மறுபுறம் விட்டேன். அப்பெரியவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, 'நீ நன்றாயிருக்க வேண்டும்' என்று என்னை வாழ்த்திச் சென்றார் அப்பா.

தந்தை : நல்ல செயல் செய்தாய்! அப்படித்தான் ஊனம் உற்றவர்கட்கு உதவி செய்ய வேண்டும். உன்னைப் போன்ற சிறுவர்கள் சிலர் உடல் ஊனமுற்றவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றனர். அதனால் அவர்கள் மனம் எவ்வளவு புண்படும் தெரியுமா?

வளவன் : நான் அப்படிச் செய்யமாட்டேன் அப்பா! உடல் ஊனமுற்றவர்கட்கு வேறு எப்படியெல்லாம் உதவி செய்யலாமென்று கூறினால், என்னால் முடிந்தவரை நான் அவர்களுக்கு உதவி செய்வேன்.

தந்தை : அதுதான் நல்ல குணம். பேருந்துகளில் பயணம் செய்யும்போது உடல் ஊனமுற்றவர் வந்தால் நீ எழுந்து அவர் அமர இடங்கொடுத்து உதவ லாம்; பார்வை இழந்தோர்க்கு அன்றாடம் செய்தித்தாள்களையும் கதை களையும் படித்துக் காட்டிக் களிப்பூட்டலாம். சிறுவர்கள் பலர் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்து ஊனம் உற்றவர்களின் நிலையை மக்களுக்கு எடுத்துக்கூறி உதவி புரியத் தூண்டலாம்; பொருள் திரட்டி அவர்களுக்கு வேண்டிய கருவிகளை வாங்கிக் கொடுக்கலாம். இப்படி எத்தனையோ வகைகளில் சிறுவர்களாகிய நீங்களும் ஊனம் உற்றவர்க்கு உதவலாம். இவை நீங்கள் செய்யக்கூடிய சமூக சேவையாம்.

வளவன் : அப்பா! நீங்கள் சொன்னது போலச் சிறுவர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து ஊனம் உற்றவர்களுக்கு உதவப் பாடுபடுவோம். நாளையே என் நண்பர்களுடன் கலந்து பேசி அதற்கான முயற்சியில் ஈடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன், அப்பா.

தந்தை : வளவா! உன் முயற்சி வெற்றி பெற உன்னை வாழ்த்துகிறேன்.

வளவன் : நன்றி அப்பா.

அருஞ்சொற்பொருள்

மருத்துவ மனை-வைத்தியம் செய்யும் இடம், பேருந்து- 'பஸ்', பரிதாபமாக - இரங்கத்தக்க விதமாக, விழிப்பாக - எச்சரிக்கையாக, விபத்து - எதிர்பாராமல் உண்டாகும் ஆபத்து, ஊனம் - குறை, ஏளனம் - பரிகாசம், மனம் புண்படல் - மனம் துன்பமடைதல், அமர - உட்கார, களிப்பு ஊட்டலாம் - மகிழ்விக்கலாம்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. வளவன் ஏன் மருத்துவமனைக்குப் போனான்?
2. சாலையைக் கடக்கும்போது நாம் ஏன் விழிப்பாய் இருக்கவேண்டும்?
3. உடல் ஊனத்துக்குக் காரணம் என்ன?
4. வளவன் பார்வை இழந்த பெரியவர்க்கு என்ன உதவி செய்தான்?
5. உடல் ஊனமுற்றவர்களுக்கு இளைஞர்கள் எவ்வாறெல்லாம் உதவி செய்யலாம்?

(ஆ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

விழிப்பாக, சமூகசேவை, முடிந்த அளவு, அலுவலகம்.

இலக்கணம்

படர்க்கை இடம்

செழியன் பாடம் படித்தான், மாணவர்கள் விளையாடுகின்றனர். — இவ்வாக்கியங்களிலுள்ள செழியன், மாணவர்கள் என்னும் பெயர்கள் யாரைக் குறிக்கின்றன? இவை பேசுபவனையும் குறிக்காமல் முன் நின்று கேட்பவனையும் குறிக்காமல் அயலாரைக் குறிக்கின்றன அல்லவா? இங்ஙனம் தன்மையும் முன்னிலையும் அல்லாமல் அயற்பொருளிடத்துப் படரும் சொல் படர்க்கை இடம் எனப்படும்.

படர்க்கைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

அவன், அவள், அது — படர்க்கை ஒருமைப் பெயர்கள்.
அவர்கள், அவை — படர்க்கைப் பன்மைப் பெயர்கள்.

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள படர்க்கை இடப்பெயர்களைத் தனியே எடுத்து எழுதுக:

1. கண்ணனின் மனைவி சுந்தரி மிகவும் நல்லவள்.
2. தேனீக்கள் ஓயாமல் உழைக்கின்றன.
3. உழவர்கள் உழுது பயிரிடுகின்றார்கள்.
4. கால் எலும்பு முறிந்துவிட்டது.
5. செழியனின் தமையன் மருத்துவமனையில் இருந்தான்.

21. படைப்பின் விசித்திரம்

(பாடல்)

முன்னொரு நாளில் மதுரைஎனும்
மூதூர் தனிலே ஒருவணிகன்
பொன்னன் என்பது அவன்பெயராம்
பொருள்மிகச் சேர்த்தே வாழ்ந்திருந்தான். 1

வாணிகம் புரிய வேற்றூர்க்கு
வழியே சென்றான் ஓரிடத்தில்
நீணிலம் அதனில் மிகப்படர்ந்தே
நிறைந்த பூசனிக் கொடிகண்டான். 2

இத்தனை சிறிய கொடியதனில்
எத்தனை பெரிய காய் என்றே
சித்தத் தினிலே தான்நினைந்தே
சிரித்தே அவனும் சென்றனனே. 3

நண்பகற் பொழுதில் வாணிகத்தை
நலமாய் முடித்துத் திரும்புகையில்
உண்பதற் கினிய நன்னீரும்
ஓங்கிய ஆல மரநிழலும் 4

கண்டே அவனும் களிப்புடனே
கட்டமு துண்டு பசியாறிக்
கொண்ட தாகம் தணிந்தவனும்
குளிர்ந்த நிழலில் படுத்தனனே. 5

செழித்தே வளர்ந்த ஆலமரச்
சிறிய பெரிய கிளைகளிலே
பழுத்தே தொங்கிய பழமதனைப்
பார்த்தே அவனும் சிந்தித்தான்: 6

"சின்னஞ் சிறிய கொடிதாங்கா
வண்ணம் பெரிய காய்படைத்தான்.
மன்னர் படைக்கு நிழல்தருமிம்
மரத்தில் சிறிய பழம்படைத்தான். 7

என்னே இறைவன் மதி!" என்றே
எண்ணி அவனும் உறங்குகையில்
அந்நே ரத்தில் காற்றடிக்க
ஆலம் பழங்கள் உதிர்ந்தனவே. 8

உதிர்ந்த ஆலம் பழமொன்று
உறங்கும் வணிகன் முகத்தினிலே
அதிரும் படியாய் விழுந்ததனால்
அலறி எழுந்தான் வணிகனுமே. 9

"ஆ! ஆ! என்ன அறிவீனம்
ஐயோ என்றன் சிறுமதியால்
யாவும் அறிந்த இறைவன்தன்
எண்ணத் தினைநான் பழித்தேனே! 10

இந்தப் பெரிய மரத்தினிலே
அந்தப் பெரிய பழமிருந்தால்
இந்த நேரம் என்தலைதான்
இரத்தம் வழியப் பிளந்திருக்கும். 11

ஆண்டவன் படைப்பின் விசித்திரத்தை
அறியக் கூடுமோ சிறுமனிதர்
வேண்டா தீய எண்ணங்கள்"
என்றே வியந்து சென்றனனே. 12

—புலவர் கோ. வில்வபதி

அருஞ்சொற்பொருள்

மூதூர் - பழமையான ஊர், வேற்றூர் - அயலூர், நீள்நிலம் - பரந்த உலகம், சித்தம் - மனம் நன்னீர் - சுவையுடைய இனிய தண்ணீர், பசியாறி - பசி தணிந்து, தாகம் - நீர் வேட்கை, செழித்து வளர்ந்து - வளமாக வளர்ந்து, சிந்தித்தான் - நினைத்துப் பார்த்தான், மன்னர் - அரசர், அறிவீனம் - மடமை, சிறுமதி - சிற்றறிவு, உறங்கும் - தூங்கும், பழித்தேன் - இழிவாகப் பேசினேன், விசித்திரம் - அற்புதம்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. பொன்னன் என்பவன் யார்? அவன் வழியில் கண்ட காட்சி யாது?
2. பொன்னன் பூசனிக் கொடியைக் கண்டு என்ன நினைத்தான் ?
3. நண்பகற்பொழுதில் பொன்னன் என்ன செய்தான்?
4. ஆலமர நிழலில் படுத்திருந்த பொன்னன் சிந்தித்தது யாது?
5. அவன் உறங்கும்போது என்ன நிகழ்ந்தது ?
6. படைப்பின் பெருமையைப் பொன்னன் எவ்வாறு உணர்ந்து போற்றினான் ?

(ஆ) பிரித்து எழுதுக :

வேற்றூர், நன்னீர், பழமதனை, சிறுமதி, மூதூர்.

(இ) எதிர்ச்சொல் தருக :

வேற்றூர் × ...., சிறிய × ...., உறங்குதல் × ...., பழித்தேன் × ....

22. மின்விளக்கைக் கண்டறிந்தவர்

ஒளியே நாம் பொருள்களைக் காண உதவுகிறது. பகலில் கதிரவனிடமிருந்தும் இரவில் விளக்குகள் மூலமாகவும் நாம் ஒளியைப் பெறுகிறோம். இருளை விலக்கிப் பொருள்களை நம் கண்களுக்கு விளங்கச் செய்வதாலேயே விளக்கு என்னும் பெயர் ஏற்பட்டது.



பண்டைக் காலத்தில் இத்தகைய விளக்குகள் மண்ணாலும் மாக்கல்லாலும் செய்யப்பட்டன. அவற்றில் எண்ணெய் ஊற்றித் திரியிட்டு விளக்கு எரியச் செய்தனர். நாகரிகம் வளர வளர இரும்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி முதலிய உலோகங்களாலும் கண்ணாடியினாலும் பலவிதமான அழகிய விளக்குகள் உருவாக்கப்பட்டன. மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டபின் பேரொளியைத் தரும் ஆவி விளக்குகள் பல ஏற்பட்டன.

இன்றோ சின்னஞ்சிறு கிராமங்களிலும்கூட மின்விளக்குகள் ஒளி வீசுகின்றன. எண்ணெய் இல்லை; திரியும் இல்லை. ஒரு பொத்தானை அழுத்தினாலே போதும். பேரொளியைத் தரும் வெண்சுடர் விளக்குகள் எரிகின்றன. இத்தகைய வியப்புமிக்க விளக்கினைக் கண்டறிந்தவர் **தாமசு ஆல்வா எடிசன்** என்பவராவார்.

தாமசு ஆல்வா எடிசன், வட அமெரிக்காவில் உள்ள **மிலான்** என்னும் சிற்றூரில் ஓர் எளிய குடும்பத்தில் 1847ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தையார் **சாமுவேல் எடிசன்**. தாயார் **நான்சி எடிசன்**. எடிசன் இளம்பருவத்திலேயே எதையும் கூர்ந்து நோக்குவார்; ஆழ்ந்து சிந்திப்பார். அவர் தம் வீட்டிலேயே ஒரு சோதனைச்சாலை அமைத்துப் பல ஆராய்ச்சிகள் செய்து வந்தார்.

ஊக்கமும் உழைப்பும் எடிசனின் பிறவிக் குணங்கள். அதனால் எடிசன் இளமையில் தாமே உழைத்துப் பொருள்தேட விரும்பினார். புகை வண்டியில் செய்தித்தாள் விற்கும் சிறுவனாகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் நாளடைவில் தம் கூரிய அறிவினால் தாமே செய்தித் தாள்களை அச்சிட்டு விற்கலானார்.

ஒருசமயம் அவர் தந்தி அலுவலர் ஒருவரின் குழந்தையைப் புகைவண்டி விபத்திலிருந்து காப்பாற்றினார்; அத்தந்தி அலுவர் அவரைப் பாராட்டித் தந்தி அனுப்பும் முறையை அவருக்குக் கற்பித்தார். அதனால் எடிசன் தந்தி அலுவலராகப் பணிசெய்யத் தொடங்கினார். தந்தி அனுப்பும் முறையில் அவர் பல புதுமைகளைக்

கண்டறிந்தார். அதன்மூலம் அவர் புகழ் எங்கும் பரவியது. பல ஊர்களுக்குத் தந்திக் கருவிகளை அமைக்கும் பணி அவருக்குக் கிட்டியது. அதனால் அவருக்குச் செல்வமும் செல்வாக்கும் பெருகின.

தாம் பெற்ற செல்வத்தை அவர் ஆராய்ச்சிக்கே பயன்படுத்தினார். மக்களுக்கு அன்றாட வாழ்வில் பயன்படும் அறிவியல் சாதனங்கள் பலவற்றை அவர் கண்டு பிடித்தார். அவரிடம் நூற்றுக் கணக்கானவர் பணி புரிந்தனர்.

அக்காலத்தில் அமெரிக்காவில் தெருக்களில் ஒருவகையான மின் விளக்குகள் எரிந்தன. அவை கண்களைச் கூசச்செய்தன; விரைவில் பழுதடைந்தன. எடிசன் அவ்விளக்குகளைச் சீர்திருத்த விரும்பினார். இரவும் பகலுமாகப் பல திங்கள் ஆராய்ச்சி செய்தார். அதன் பயனாகக் கண்டறியப்பட்டதே இப்போது ஒளிவீசும் மின்விளக்கு.

அவர், தாம் ஆராய்ந்து கண்டவாறே காற்றில்லாத கண்ணாடிக் குமிழில் ஒருவகைக் கரி இழையைச் செலுத்தி மின் ஆற்றலால் அக்கரியிழையை எரியச்செய்ய அரும்பாடுபட்டார்; உணவை மறந்தார்; உறக்கத்தைத் துறந்தார். இருபத்தொரு நாள்கள் வருந்தி உழைத்துத் தம் முயற்சியில் வெற்றி பெற்றார்.

இங்ஙனம் எடிசன் கண்டறிந்த மின்விளக்கே பின்னர்ப் பலவகைகளில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அவர் பயன்படுத்திய கரியிழைக்குப் பதில் இப்போது 'டங்ஸ்டன்' என்னும் ஒருவகை உலோக இழை பயன்படுத்தப்படுகிறது. மற்றும் இரவைப் பகலாக்கும் மின்சார விளக்குகள், குழல் விளக்குகள், பல வண்ண அலங் கார விளக்குகள் எல்லாம் இப்போது தோன்றியுள்ளன.

எடிசன் கண்டறிந்த அறிவியல் சாதனங்கள் ஆயிரக் கணக்கானவையாம். அவற்றில் இசைத்தட்டு, பேசும்படம், பேசும்பொறி, மின்தொடர் வண்டி, சேமிப்பு மின்கலம் முதலியன குறிப்பிடத்தக்கவையாம். இன்று நாம் வாழ்விற்கு வேண்டிய பற்பல வசதிகளையும் பெற்று இன்ப வாழ்வு வாழ்வதற்கு அவருடைய உழைப்பும் ஆராய்ச்சியுமே காரணமாகும். அவர் புகழ் உலகம் உள்ளளவும் என்றும் நின்று நிலவும்.

அருஞ்சொற்பொருள்

உருவாக்கப்பட்டன - செய்யப்பட்டன, வெண்சுடர் - வெண்மையான ஒளி, கூர்ந்து நோக்குவார் - கவனித்துப் பார்ப்பார், ஆழ்ந்து சிந்திப்பார் - நுணுக்கமாக எண்ணிப்பார்ப்பார், அன்றாட வாழ்வு - நாள் தோறும் வாழும் வாழ்க்கை, சாதனம் - கருவி, திங்கள் - மாதம், நிலவும் - விளங்கும்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. விளக்கு என்று பெயர் உண்டாகக் காரணம் யாது?
2. பண்டைக் காலத்தில் என்னென்ன விளக்குகள் உபயோகத்தில் இருந்தன?

3. தாமசு ஆல்வா எடிசன் எங்கு எப்போது பிறந்தார் ? பெற்றோர் யாவர் ?
4. எடிசனின் செல்வமும் செல்வாக்கும் பெருகக் காரணம் என்ன ?
5. மின்சார விளக்கினை எடிசன் எவ்வாறு சீர்திருத்தி அமைத்தார் ?
6. எடிசன் கண்டுபிடித்த பொருள்கள் சிலவற்றைக் கூறுக.

(ஆ) சேர்த்து எழுதுக :

ஒலியை+பெறுகிறோம், எரிய+செய்தனர், அவருக்கு+கிட்டியது, கண்ணாடி+குமிழ்,

(இ) பிரித்து எழுதுக :

எண்ணெய், வெண்சுடர், கண்டறிந்தார், அவ்விளக்கு, பேரறிவு.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

ஊக்கமும் உழைப்பும், செல்வமும் செல்வாக்கும், அல்லும் பகலும், சிறுகுழந்தைபோல.

இலக்கணம்

பெயரெச்சம்

படித்த, உண்ட — இச்சொற்கள் பொருள் முடிந்துள்ளனவா ? இல்லையல்லவா ? இங்ஙனம் பொருள் முடியாத வினைச்சொற்கள் 'எச்சவினை' எனப்படும். இவை **படித்த** பையன், **உண்ட** சோறு எனப் பெயர்ச்சொற்களைச் சேர்த்தால் பொருள் முடிகின்றன. இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் குறை வினைச்சொல் **பெயரெச்சம்** எனப்படும்.

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள பெயரெச்சங்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக :

1. எடிசன் கண்ட மின்விளக்கு ஒளி வீசுகிறது.
2. மலர்பறித்த மங்கை மாலை தொடுத்தாள்.
3. திருவிழாவுக்குப் போன மக்கள் கடவுளை வணங்கினர்.
4. புல் மேய்ந்த மாடு அசை போடுகிறது.
5. பறந்த பறவைகள் மாலையில் கூடுகளுக்குத் திரும்பின.

23. பழமொழிகள்

1. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2. ஆபத்தில் அறியலாம் அருமை நண்பனை.
3. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
4. உடையவர் பாராத வேலை ஒருமுழம் கட்டை.
5. ஊர்வாயை மூட உலைமூடி இல்லை.
6. எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா ?
7. ஏவா மக்கள் மூவா மருந்து.
8. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
9. ஒருகாசு பேணின் இருகாசு தேரும்.
10. குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா ?
11. சிறுகக் கட்டிப் பெருக வாழ்.
12. சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
13. தவளை தன் வாயால் கெடும்.
14. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
15. நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும்.
16. நிறைகுடம் தளும்பாது ; குறைகுடம் கூத்தாடும்.
17. பருவத்தே பயிர்செய்.
18. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ?
19. மாரியல்லது காரியம் இல்லை.
20. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

அருஞ்சொற்பொருள்

முச்சாண் - மூன்று சாண் (சாண் - நீட்டலளவைப் பெயர்), இமை-கண் இமை, உடையவர் - சொந்தக்காரர், ஏவா மக்கள் - சொல்லா முன்பே குறிப்பறிந்து பணி செய்யும் மக்கள், மூவா மருந்து - மூப்பு அடையாமல் இருப்பதற்குரிய மருந்தாகும், ஐந்தில்-ஐந்து வயதில், பேணின்-காப்பாற்றினால், சுடர் விளக்கு-ஒளிவிட்டு எரியும் விளக்கு, திரை-அலை, திரவியம்-செல்வம், மாரி-மழை.

பயிற்சி

விடை எழுதுக :

1. எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா ? — இப்பழமொழியால் நீ அறிந்துகொள்ளும் கருத்து யாது ?
2. நத்தை வயிற்றிலும் முத்துப் பிறக்கும்; பருவத்தே பயிர்செய். — இப்பழமொழிகளின் கருத்தை விளக்கி எழுதுக.
3. உனக்குத் தெரிந்த வேறு நான்கு பழமொழிகளை எழுதுக.

24. காலம் காட்டும் கருவி

காலம் பொன்னினும் சிறந்ததாகும். பொன்னை இழந்தால் மீண்டும் தேடிக் கொள்ளலாம். ஆனால், இழந்த காலத்தைத் திரும்பப் பெறுதல் இயலாது. இத்தகைய அரிய காலத்தை நாம் வீணாக்கக்கூடாது. காலையில் உறக்கத்திலிருந்து எழுந்தது முதல் இரவு உறங்கச் செல்லும் வரை ஒவ்வொரு செயலையும் நாம் காலமறிந்து செய்ய வேண்டும். அதற்குக் கடிகாரம் என்னும் காலம் காட்டும் கருவி நமக்குப் பயன்படுகிறது.



கடிகை ஆரம் என்பதே கடிகாரம் என்றாயிற்று. கடிகை என்பதற்கு நாழிகை என்பது பொருள். நம் முன்னோர்கள் ஒரு நாளை அறுபது நாழிகையாகப் பகுத்திருந்தனர். இரண்டரை நாழிகை கொண்டது இப் போது ஒரு மணி நேரமாகும்.

இப்போதுள்ள கடிகாரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் நம் முன்னோர் இயற்கைப் பொருள்கள் மூலமே காலத்தை அறிந்து வந்தனர். அறிவு வளர வளரச் சில செயற்கைக் கருவிகளையும் பயன்படுத்தினர்.

அவர்கள் கோழி கூவுவதையும் காகம் கரைவதையும் கொண்டு, பொழுது விடிவதைத் தெரிந்துகொண்டனர்; பகலில் தம் நிழல் பூமியில் விழும் அளவைக் கணக்கிட்டும், இரவில் விண்மீன்களின் நிலையைக் கொண்டும் காலத்தை அறிந் தனர். மற்றும் தாமரை, அல்லி முதலிய மலர்களும் காலத்தை அறியப் பயன்பட்டன.

தாமரை சூரியன் உதிக்கும் காலை நேரத்தில் மலரும். அல்லி, முல்லை முதலிய மலர்கள் மாலையில் மலரும். அந்தியில் மலரும் ஒருவகைப் பூ 'அந்தி மல்லி' என்றே பெயர் பெற்றுள்ளது. இருவாட்சி (இருள் வாசி) என்னும் மலர் நள்ளிரவில் மலரும். அதனால், அதற்கு 'நள்ளிருள் நாறி' என்றும் பெயர் உண்டு. இங்ஙனம் ஒவ்வொரு நேரத்தில் மலரும் மலர் வகைகளை அறிந்து அவற்றைக் கொண்டு நம் முன்னோர் காலத்தைக் கணக்கிட்டு வந்தனர்.

இவற்றால் நேரத்தின் கூறுகளைச் சரியாகக் கணிக்கமுடியாமையால் நாழிகை அறிய உதவும் 'நாழிகை வட்டில்' என்னும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. மண் அல்லது கண்ணாடியால் செய்யப்பட்ட குடுவையின் அடிப்புறத்தில் சிறு துளை ஒன்று அமைத்தனர். பின்னர் அக்குடுவையில் மணலை நிரப்பினர். அம்மணல் சிறிது சிறிதாகச் சரிந்து அடியில் உள்ள மற்றொரு குடுவையில் விழும். அவ்வாறு மணல் விழும் நேரத்தைக் கணக்கிட்டு நாழிகை அறிந்து வந்தனர். இதற்கு 'மணல் கடிகாரம்' என்பது பெயர்.



மணல் கடிகாரம்



நீர்க் கடிகாரம்

மற்றொரு வகைக் கடிகாரமும் இருந்தது. மணலுக்குப் பதில் குடுவையில் நீரை நிரப்பி அந்நீர் சிறுதுளை வழியே துளித் துளியாக விழுவதைக் கொண்டு நேரத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டனர். இக்கருவிக்கு 'நீர்க் கடிகாரம்' என்பது பெயர். இதனைக் 'குறுநீர்க் கன்னல்' என நம் பழந்தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது.



இப்போதுள்ள கடிகாரம் முந்நூறு ஆண்டுகட்கு முன் கண்டறியப்பட்டது. இதனைக் கண்டறிய வழிசெய்தவர் இத்தாலி நாட்டில் பைசா என்னும் நகரில் வாழ்ந்த **கலிலியோ** என்பவராவார்.

அவர் இளைஞராக இருந்தபோது ஒருநாள் மாதாகோயிலுக்குச் சென்றிருந் தார். அக்கோயிலில் மேல்கூரையி லிருந்து சங்கிலியில் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த கண்ணாடி விளக்குகள் அவர் கவனத்தைக் கவர்ந்தன. அவ் விளக்குகள் காற்றில் அசைந்தாடின. விளக்கு, தான் அசைந்தாடும் தூரம் அதிகமாயினும் குறையினும் இருபுறமும் சென்றுவர ஒரே அளவான நேரத்தையே எடுத்துக்கொண்டது. அவர் அதைத் தம் நாடித்துடிப்பைக்கொண்டு கணக்கிட்டுத்

தெரிந்துகொண்டார். கலிலியோ கண்டுபிடித்த இந்த உண்மையின் அடிப்படையிலேயே பின்னர் 'ஊசலி' அமைத்துக் காலத்தைக் கணக்கிடும் கடிகாரம் செய்யப்பட்டது. இன்று பல்வேறு வகையான கடிகாரங்கள் உள்ளன. அவையெல்லாம் மணியையும் நிமிடத்தையும் விநாடியையும் சரியாக நமக்குத் தெரிவிக்கின்றன.

மக்களுக்கு மிகவும் பயன்படும் இக்கடிகாரங்கள் ஐரோப்பாவில் சுவிட்சர்லாந்து நாட்டில் மிக அதிகமாகச் செய்யப்படுகின்றன. அதற்கடுத்து சப்பானும் அமெரிக்காவும் கடிகாரத் தொழிலில் சிறந்து விளங்குகின்றன.

நம் பாரத நாட்டில் பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் இயந்திரக் கருவித் தொழிற்சாலையில் உயர்ந்த கடிகாரங்கள் செய்யப்படுகின்றன. நாம் நம் நாட்டுக் கடிகாரங்களை வாங்கி ஆதரித்தால் நம் நாடு கடிகாரத் தொழிலில் விரைந்து மேலும் சிறந்த முன்னேற்றம் அடையும் என்பது உறுதியாகும்.

அருஞ்சொற்பொருள்

இயலாது-முடியாது, கடிகை-நாழிகை, ஆரம்-வட்டம், விண்மீன்-நட்சத்திரம், அந்தி-மாலைப் பொழுது, கணிக்க-கணக்கிட, துல்லியமாக-சிறிதும் பிழையில்லாமல், நாழிகை வட்டில்-நாழிகை அறிய உதவும் கருவி, குடுவை-வாய் குறுகிய பாத்திரம், கன்னல்-நாழிகை, நாடித்துடிப்பு-நரம்பின் துடிப்பு, ஊசலி-'பெண்டுலம்.'

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. கடிகாரம் என்னும் பெயர் ஏன் ஏற்பட்டது ?
2. நம் முன்னோர் பண்டைக் காலத்தில் எவ்வெவற்றைக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டு வந்தனர் ?
3. காலத்தை அறிய உதவும் இயற்கைப் பொருள்கள் யாவை ?
4. மணல் கடிகாரம், குறுநீர்க் கன்னல் — இவற்றைப் பற்றி எழுதுக.
5. இன்றுள்ள கடிகாரத்தின் அடிப்படையைக் கண்டுபிடித்தவர் யார் ? எவ்வாறு கண்டு பிடித்தார் ?
6. கடிகாரங்கள் எங்கெங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன? நம் நாட்டில் அஃது எங்குச் செய்யப் படுகிறது ?

(ஆ) சேர்த்து எழுதுக :

நமக்கு + பயன்படும், சரியாக + கணிக்க, துளி + துளியாக, பழமை + தமிழ்.

(இ) புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களையிட்டு நிரப்புக :

1. பொன்னை இழந்தால் .... பெறலாம்; இழந்த காலத்தை .... பெற இயலாது.

2. இரவில் .... கொண்டு காலத்தை அறிந்தனர்.
3. நீர்க்கடிகாரத்தைப் பழந்தமிழ் இலக்கியம் .... என்று குறிப்பிடுகிறது.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

கணக்கிட்டு, சிறிதுசிறிதாக, துளித்துளியாக, துல்லியமாக.

இலக்கணம்

வினையெச்சம்

படித்து, உண்டு — இச்சொற்கள் பொருள் முடிந்துள்ளனவா? இவை எச்ச வினைச் சொற்கள். இவை படித்துச் **சென்றான்**, உண்டு **எழுந்தான்** என வினை முற்றுகளைச் சேர்த்தால் பொருள் முடிகின்றன. இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் குறை வினைச்சொற்கள் **வினையெச்சம்** எனப்படும்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினையெச்சங்களை எடுத்து எழுதுக:

1. காலத்தைக் கணித்து அறிந்தான்.
2. குடுவையில் நீரை நிரப்பி வைத்தனர்.
3. மணல் சரிந்து விழுந்தது.

25. கல்வி கற்றலின் பயன்

(பாடல்)

ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே—நீ
ஏன்படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே.
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே—நம்
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்துவிடாதே. 1

மூத்தோர்சொல் வார்த்தைகளை மீறக்கூடாது—பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக்கூடாது.
மாற்றார்கைப் பொருளை நம்பி வாழக்கூடாது—தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக்கூடாது. 2

துன்பத்தை வெல்லும்கல்வி கற்றிடவேணும்—கெட்ட
சோம்பலைக் கொல்லுந்திறன் பெற்றிடவேணும்.
வம்புசெய்யும் குணமிருந்தால் விட்டிடவேணும்—அறிவு
வளர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிடவேணும். 3

—'மக்கள் கவிஞர்' **பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்**

அருஞ்சொற்பொருள்

நெறிதவறி - அறநெறியிலிருந்து விலகி, **மூத்தோர்** - அறிவிலும் வயதிலும் முதிர்ந்தவர்கள், **தன்மானம்** - சுயமரியாதை, **திறன்** - வலிமை, **வான்முகடு** - விண்ணின் உச்சி.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. கற்றறிந்த நாம் எவற்றை மீறக்கூடாது? எவற்றிலிருந்து மாறக்கூடாது?
2. இளைஞர்கள் எவ்வாறு வாழக்கூடாது? யாருடன் சேரக்கூடாது?
3. கல்வி கற்ற இளைஞர்கள் எவ்வெவற்றைப் பெறவேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்?

(ஆ) கீழ்க்காண்பனவற்றுக்கு இணைச்சொற்களை எழுதுக:

ஏட்டில், மானம், மாற்றார், கொல்லும், குணம்.

26. வாழையடி வாழை

(நாடகம்)



இடம்: பல்லவராயர் அரண்மனை

காலம்: காலை நேரம்

உறுப்பினர்கள்: புலவர், பல்லவராயரின் மகன், பல்லவராயர், அவர் மனைவியார்

(பல்லவராயர் ஒரு சிற்றரசர்; பெருவீரர்; புலவர்களை ஆதரிக்கும் ஈகைக் குணம் உடையவர். ஒரு சமயம் வறுமையால் வாடிய புலவர் ஒருவர் பல்லவராயரின் வள்ளன்மையைக் கேள்வியுற்று அவரைக் காண வந்தார். அப்போது பல்லவராயர் ஊரில் இல்லை. அவர்தம் சிறுமகன் தெருவில் பொன்தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தான்.)

புலவர்: அப்பா! நீ யார்? இதுதானே பல்லவராயரின் அரண்மனை?

சிறுவன்: வணக்கம் ஐயா! நான் பல்லவராயரின் மகன். இதுதான் எங்கள் இல்லம். தாங்கள் யாரெனத் தெரியவில்லையே?

புலவர்: குழந்தாய், நான் ஒரு தமிழ்ப் புலவன். பல்லவராயரைப் புகழ்ந்துபாடிப் பரிசு பெற்றுச் செல்லலாம் என்று வந்துள்ளேன்.

சிறுவன்: ஐயா! தாங்கள் தமிழ்ப் புலவரா? வரவேண்டும், வரவேண்டும். தங்கள் வருகைக்கு இந்த வீடு பெரும்புண்ணியம் செய்திருக்க வேண்டும். என் தந்தையார் வெளியூர் சென்றிருக்கிறார். உள்ளே வாருங்கள்.

புலவர்: (திடுக்கிட்டு) பல்லவராயர் ஊரில் இல்லையா? அவரைக் காண வேண்டும் என்ற ஆவலால் காடும் மலையும் கடந்து வந்தேனே!

சிறுவன்: என் தந்தையார் இல்லாவிட்டால் என்ன? என் அன்னையார் இருக்கிறார். நான் இருக்கிறேன். உள்ளே வந்து அமருங்கள் ஐயா.

(புலவர் உள்ளே சென்று சிறுவன் காட்டிய இருக்கையில் அமர்கிறார்.)

புலவர்: குழந்தாய்! தந்தைக்கேற்ற நல்ல மைந்தன் நீ. உன்னைப் பெற அவர் பெருந்தவம் செய்திருக்க வேண்டும். உன் தந்தையாரின் ஈகைக் குணத்தை அறிந்து அவரைக் கண்டு பரிசு பெற்று என் வறுமையைப் போக்கிக்கொள்ள வந்தேன். என் வீட்டில் அடுப்புப் புகைந்தே பல நாள்கள் ஆகிவிட்டன. குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றனர். ஆனால், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே! நான் என்ன செய்வேன்! என் தீவினை எனக்கு முன் செல்கிறதே!

சிறுவன்: புலவர் பெருமானே! தங்கள் வறுமையறிந்து மிகவும் வருந்துகிறேன். என் தந்தையார் இல்லாவிட்டால் என்ன? நான் பரிசு தருகிறேன். இதோ இப் பொன்தேரையே பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(அவனுடைய அரிய கொடைக் குணத்தைக் கண்டு வியந்து புலவர் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறார்.)

புலவர்: நற்குணச் செல்வனே! உன் அன்பைப் பாராட்டுகின்றேன். நீ கூறிய இந்த இன்மொழியே போதும். என் மனம் குளிர்ந்துவிட்டது. இந்தத் தேரை நீயே வைத்து விளையாடு.

சிறுவன்: பெரியீர், கொடுத்ததை வாங்கும் குணம் எங்கள் குலத்துக்கு இல்லை. இனி, அது தங்களுக்கே சொந்தமாகும். அதோ, என் தந்தையார் வருகிறார். அவரிடமே கேட்போம்.

(பல்லவராயர் வருகிறார்.)

புலவர்: (அகமும் முகமும் மலர) வள்ளலே! தங்களைக் கண்டு வறியவன் பொற்குவியலைப் பெற்றதைப்போலப் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நான் ஒரு தமிழ்ப் புலவன். தங்களைக் கண்டு பரிசு பெற்றுச் செல்லலாம் என்று வந்துள்ளேன்.

பல்லவராயர்: செந்தமிழ்ப் புலவரே! தங்கள் வரவு நல்வரவாகுக! தங்களை வரவேற்று உபசரிக்க நான் இல்லாமல் போனது குறித்து வருந்துகிறேன்.

புலவர்: தாங்கள் இல்லாவிட்டால் என்ன? தங்கள் அருந்தவச் செல்வன் என்னை அன்புடன் வரவேற்றுப் பரிசும் வழங்கிவிட்டான், பார்த்தீர்களா? (பொன்தேரைக் காட்டுகிறார்)

(கணவர் வரவறிந்து அவரை வரவேற்க வந்த மனைவியாரும் பல்லவராயரும் தம் மகனை ஆவலுடன் பார்க்கின்றனர்.)

சிறுவன்: ஆம் அப்பா! பாவம், புலவர் குடும்பம் பட்டினியால் வருந்துகிறதாம். அதனால் தங்களிடம் பரிசு பெற்றுச் செல்ல வந்தாராம். நான் இந்தத் தேரைப் பரிசாக வழங்கினேன். சிறுவனாகிய நான் கொடுப்பதால் புலவர் பெற்றுக்கொள்ள மறுக்கிறார் அப்பா!

புலவர்: பாவம், குழந்தைதானே? அவனுக்குத் தங்கத்தின் மதிப்புத் தெரியுமா? விளையாட்டுப் பொருளாக எண்ணிக் கொடுத்துவிட்டான். நான் திரும்பக் கொடுத்தால் வாங்க மறுக்கிறான். அரசே! என்னை மன்னித்து இதனைத் தாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பல்லவராயர்: புலவர் பெருமானே! எங்கள் செல்வன் மதிப்பறிந்துதான் பரிசு வழங்கியிருக்கிறான். தங்கத்தைக் காட்டிலும் தங்கள் தமிழ்ப் புலமை பெரிதன்றோ? அவன் கொடுத்த பரிசு தங்களுக்கே உரியதாகும். அதனை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

புலவர்: வள்ளலே! தங்கள் வள்ளன்மையை என்னென்று புகழ்வேன்! இப்படியும் கொடுப்பாருண்டோ? மாரியனைய ஈகையாளனாகிய பாரிக்குப் பின் புலவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாகிய தாங்கள் வாழ்க! வாழ்க! 'நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம்' என்பர். தங்கள் பிறவிக் குணமாகிய இந்த ஈகைக் குணம் வாழையடி வாழையாகத் தங்கள் மைந்தனாகிய இச்சிறுவனிடமும் அமைந் திருப்பது கண்டு இறும்பூது எய்துகிறேன். இச் செல்வன் எதிர் காலத்தில் தலைசிறந்த ஈகையாளனாக விளங்கிப் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்; சென்று வருகிறேன்.

பல்லவராயர்: செந்தமிழ்ப் புலவரே! சென்று வாருங்கள். தாங்கள் விரும்பிய போதெல்லாம் இங்கு வரவேண்டுகிறேன். வணக்கம்.

அருஞ்சொற்பொருள்

ஈகைக் குணம் - கொடுக்கும் குணம், அரண்மனை - அரசர் வசிக்குமிடம், மைந்தன் - மகன், ஆனந்தக் கண்ணீர் - மகிழ்ச்சியினால் பெருகும் கண்ணீர், வறியவன் - ஏழை, பொற்குவியல் - பொன் முடிப்பு, மாரி அனைய - மழை போன்ற, தயை - இரக்கம், இறும்பூது - ஆச்சரியம்.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. பல்லவராயரின் மகன் புலவரை எவ்வாறு வரவேற்றான்?
2. புலவர் சிறுவனிடம் தமது வறுமையை எங்ஙனம் எடுத்துக் கூறினார்?
3. சிறுவன் புலவரின் வறுமையறிந்து வருந்திக் கூறியது யாது? அவன் கொடுத்த பரிசு யாது?
4. தான் கொடுத்த பரிசைப் புலவர் வாங்க மறுத்தமைபற்றித் தன் தந்தையாரிடம் மகன் கூறியதென்ன?
5. மகன் கூறியது கேட்ட பல்லவராயர் புலவரிடம் யாது கூறினார்?
6. சிறுவன் அளித்த பரிசைப் பெற்ற புலவர் அவன் கொடைக்குணத்தை எவ்வாறு வாழ்த்தி விடை பெற்றார்?
7. 'வாழையடி வாழை' என்ற தலைப்பு இந்நாடகத்துக்கு எவ்வாறு பொருந்தும்?

(ஆ) சேர்த்து எழுதுக :

மாரி + அனைய, வறுமை + அறிந்து, வெளி + ஊர், பலா + இலை, பூ + அழகு

(இ) பிரித்து எழுதுக :

தமிழ்ப் புலவன், தந்தைக்கேற்ற, அருந்தவம், மதிப்பறிந்து, பொற்குவியல்.

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பேரும் புகழும், இறும்பூது, வாழையடி வாழை, வள்ளன்மை.

இலக்கணம்

நிறுத்தற்குறிகள்

, — இஃது என்ன குறி? இது **காற்புள்ளி** எனப்படும். நட்பு, தயை, கொடை என்பன பிறவிக் குணங்கள். — இவ்வாறு பொருள்களை மொத்தமாகக் கூறும்போது ஒவ்வொன்றையும் பிரித்துக் காட்ட அதன் பக்கத்தில் இக்குறியிடவேண்டும்.

; — இஃது **அரைப் புள்ளி**. நான் வாழ்த்துகிறேன்; சென்று வருகிறேன். — இவ்வாறு ஓர் எழுவாய்க்குப் பல பயனிலைகள் வரும்போது ஒவ்வொன்றன் பின்னும் இக்குறியிடவேண்டும். ஈற்றில் முற்றுப்புள்ளியிடவேண்டும்.

: — இது **முக்காற் புள்ளி**. முக்கனிகளாவன : மா, பலா, வாழை என்பனவாம். — இவ்வாறு முதலில் தொகுத்துக் கூறியபின் அதையே விரித்துக் கூறும்போது தொகுத்துக் கூறிய தொடருக்குப் பின் இக்குறியிடவேண்டும்.

. — இது **முற்றுப் புள்ளி.** நான் ஒரு தமிழ்ப் புலவன். — இவ்வாறு பொருள் முடியும் வாக்கியத்தின் இறுதியில் இக்குறியிடவேண்டும்.

? — இது **வினாக் குறி.** பல்லவராயர் ஊரில் இல்லையா? — இவ்வாறு கேள்வி வாக்கியத்தின் இறுதியில் இக்குறியிடவேண்டும்.

! — இஃது **உணர்ச்சிக் குறி.** உங்கள் வள்ளன்மையை என்னென்று புகழ்வேன்! ஐயோ! பாவம்! — இவ்வாறு வியப்பு, இரக்கம், அச்சம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களை அடுத்து இக்குறியிடவேண்டும்.

குழந்தாய்! என்று ஒருவரை அழைக்கும் சொல்லை அடுத்தும் இக்குறியிடலாம். அப்போது இது **விளிக்குறி** எனப்படும்.

" ... " — இது **மேற்கோள் குறி.** மகன், "தாயே! நான் தங்கள் சொல்லைத் தட்டமாட்டேன்" என்று கூறினான். இது மகன் கூறியதை அவன் வாய்மொழியாகவே எடுத்துக் கூறுதலாகும். இங்ஙனம் மற்றொருவர் சொல்லையோ பாட்டையோ எடுத்து எழுதும்போது இக்குறியிடவேண்டும்.

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் உரிய இடங்களில் தகுந்த நிறுத்தற் குறிகளையிட்டு எழுதுக :

1. முத்தமிழாவன இயல் இசை நாடகம் என்பனவாம்
2. கபிலர் பாரியைப் புகழ்ந்து பாடினார் பரிசு பெற்றார்
3. நண்பா இதனைப் பார்த்தாயா ஆ எவ்வளவு அழகாக இருக்கிறது
4. மகனே நீ திருக்குறளைப் படித்தால் வாழ்வில் உயரலாம் என்று என் தந்தை கூறினார்

செய்யுள்

(அ) நீதிப் பகுதி

(1) நல்வழி

துன்பம் கண்டு துவளற்க.

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன போமினென்றால் போகா; — இருந்தேங்கி,
நெஞ்சம்புண் ஆக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 1

வறுமையில் செம்மை

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்; — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து. 2

உலகில் அற்புதமானவை

தண்ணீர் நிலநலத்தால், தக்கோர் குணங்கொடையால்,
கண்ணீர்மை மாறாக் கருணையால், — பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றால், கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. 3

தீவினையே வறுமைக்கு வித்து

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்,
எய்த வருமோ இருநிதியம்? — வையத்து
அறும்பாவம் என்னஅறிந் தன்றிடார்க்(கு) இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்? 4

வயிற்றின் கொடுமை

சேவித்தும் சென்றிரந்தும் தெள்நீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 5

வஞ்சம் இல்லார் எய்தும் நலங்கள்

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெல்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
வரும்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். 6

பொய்ச்சான்று கூறியவர் அடையும் துன்பம்

வேதாளம் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே;
பாதாள மூலி படருமே; — மூதேவி
சென்றிருந்து வாழ்வளோ; சேடன் குடிபுகுமே;
மன்றோரம் சொன்னார் மனை. 7

வீணான எண்ணங்கள் வேதனை தரும்

உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம்,
எண்பது கோடிநினைந் தெண்ணுவன, — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். 8

செல்வத்தின் சிறப்பு

கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றுஅங் கெதிர்கொள்வர்; — இல்லானை
இல்லாளும் வேண்டாள்;மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்;
செல்லா தவன்வாயில் சொல். 9

செல்வம் பெற்றதன் பயன்

ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆம்செல்வம்;
மாறிடும்; ஏறிடும்; மாநிலத்தீர்! — சோறிடும்;
தண்ணீரும் வாரும்; தருமமே சார்வாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 10

—ஔவையார்

அருஞ்சொற்பொருள்

1. வருந்தி - பாடுபட்டு, வாராத - வரக்கூடாதவை, பொருந்துவன - நமக்கு வரக்கூடியவை போமின் - போய்விடுங்கள், இருந்து ஏங்கி - இந்த உண்மை அறியாமல் ஏக்கம்கொண்டு, நெஞ்சம் புண் ஆக - மனம் வருந்தும்படி, துஞ்சுவது - இறப்பது, மாந்தர் – மக்கள்.

2. பெருக்கு அற்று - தண்ணீர் ஓட்டம் வற்றி, அடி - கால், உலகு ஊட்டும் - உலக மக்களை உண்ணச் செய்யும், ஏற்றவர்க்கு - பிச்சையெடுப்பவர்க்கு, நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர்கள், இசைந்து - மனம் பொருந்தி.

3. நிலம் நலம் - நிலத்தினது நன்மை, கொடை - வறியவர்க்குக் கொடுத்தல், மாறா - நீங்காத, நீர்மை - குணம், கற்பு - கணவன் கூறும் அறநெறிகளைப் பின்பற்றி வாழ்தல், வையகம் - உலகம், அற்புதம் ஆம் - வியக்கத்தக்க தன்மையுடையனவாம்.

4. தீவினை - பாவம், நொந்தக்கால் - வெறுத்தால், இருநிதியம் – பெருஞ்செல்வம், எய்தவருமோ - பெறலாமோ (பெறமுடியாது), வையம் - உலகம், அறும் என்ன - நீங்கும் என்று நினைத்து, அன்று - முன்பு (முற்பிறவியில்), இடார்க்கு - ஒரு பொருளைக் கொடாதவர்க்கு.
(முற்பிறவியில் புண்ணியம் செய்யாதவர் வெறும் பானைக்கு ஒப்பாவார் என்பது கருத்து.)

5. சேவித்தும் - பிறரைப் பணிந்தும், இரந்தும் - யாசித்தும், பாவித்தும் - தம்மைப் பெரியவராக எண்ணியும், பார் ஆண்டும் - இவ்வுலகை ஆட்சி புரிந்தும், பாட்டு இசைத்தும் - செல்வரைப் புகழ்ந்து பாடியும், வயிற்றின் கொடுமை - பசித்துன்பம், நாழி - ஒரு படி (முகத்தல் அளவை-எட்டு ஆழாக்கு ஒரு நாழி), பாழின் - வீணாக, போவிப்பம் - கழிக்கின்றோம்.

6. நீர் - நீர்வளம், நிழல் - தங்குவதற்கு நிழல் (வீடு), பொதியும் - மூடிமறைக்கும், பேர் - உயிரோடு வாழுங்காலத்தில் உண்டாகும் நற்பெயர், புகழ் - இறந்தபின் நிலைக்கும் பெருஞ்சிறப்பு, வரும் - மேன்மேல் வளரும், திரு - செல்வம், வாழ்நாள் - நிறைந்த ஆயுள், சிவந்த தாமரையாள் - செந்தாமரை மலரில் வாழும் திருமகள்.

7. வேதாளம் - பேய், பாதாள மூலி - ஒருவகை முட்செடி, சேடன் - பாம்பு, ஓரம் - பொய்ச் சான்று, மன்று - நீதிமன்றம், மனை - வீடு.

8. உடுப்பது - இடுப்பில் கட்டும் ஆடை, நாழி - முகத்தல் அளவைப் பெயர் (இங்கு அவ்வளவுள்ள உணவைக் குறிக்கும்), கண் புதைந்த - அறிவுக்கண் இல்லாத, மண்ணின் கலம் - மண்ணால் செய்யப் பட்ட பாத்திரம், சாந்துணையும் - இறக்கும் வரையிலும், சஞ்சலம் - துன்பம்.

9. கைப்பொருள் - செல்வம், எதிர்கொள்வர் - வரவேற்று உபசரிப்பர், இல்லானை - வறிய வனை, இல்லாள் - மனைவி, ஈன்று எடுத்த - பெற்று வளர்த்த, செல்லாது – மதிப்பு இழந்துபோகும்.

10. மடு - பள்ளம், மாறிடும் - தாழும், ஏறிடும் - உயரும், சோறு இடும் - பசித்து வந்தவர்க்கு உணவு இடுங்கள், தண்ணீரும் வாரும் - குடிப்பதற்கு நீரை ஊற்றுங்கள், சார்வாக - துணையாக, உள் நீர்மை - மனத்தூய்மை, உயர்ந்து வீறும் - ஓங்கி வளரும்.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. மாந்தர் தொழிலாகக் கூறப்படுவது யாது ?
2. குடிப்பிறந்தார் இயல்பு யாது ? அதற்குக் கூறப்பட்ட எடுத்துக்காட்டு யாது ?
3. வையத்துள் எவை, எவற்றால் அற்புதமாம் என ஔவையார் கூறுகிறார் ?
4. வெறும்பானை பொங்குமோ ?' எனக் கேட்டு ஆசிரியர் கூறும் கருத்து யாது ?
5. வயிற்றின் கொடுமையால் நாம் செய்வன யாவை ?
6. வஞ்சம் இலார் எய்தும் நலங்கள் யாவை ?

7. மன்றோரம் சொன்னார் மனை அடையும் கேடுகளை எழுதுக.
8. கண்புதைந்த மாந்தர் குடிவாழ்க்கை எத்தகையது ?
9. செல்வத்தின் இயல்பு யாது ? செல்வம் பெற்றவர் என்ன செய்யவேண்டும் ?
10. செல்வத்தின் சிறப்பினை விளக்குக.

(ஆ) பிரித்து எழுதுக:

இருந்தேங்கி, ஆற்றுப்பெருக்கு, கண்ணீர்மை, வெறும்பானை, மன்றோரம், சோறிடும், தண்ணீர், உண்ணீர்மை.

(இ) சேர்த்து எழுதுக:

நெடுமை+தூரம், ஆறு+பெருக்கு, ஊற்று+பெருக்கு, உலகு+ஊட்டும், பெண்+நீர்மை, தெள்+நீர், நெல்+கட்டு, கை+பொருள், ஈன்று+எடுத்த.

(2) நீதிவெண்பா

இன்சொல் பேசுதலின் பயன்

நாவின் நுனியில் நயம்இருக்கின் பூமாதும்
நாஇனிய நல்லோரும் நண்ணுவர்; — நாவின்நுனி
ஆங்க டினமாகில் அத்திருவும் சேராள்முன்
ஆங்கே வரும்மரணம் ஆம். 1

பிறந்த இடத்தில் பெருமை பெறாதவை

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்
கானவரி உகிரும் கற்றோரும் — மானே!
பிறந்தஇடத் தன்றிப் பிறிதொரு தேசத்தே
செறிந்தஇடத் தன்றோ சிறப்பு? 2

அறிவுடைய மைந்தர் பெருமை

பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே; — பொற்கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றோது? 3

கீழ்மக்களுடன் நட்புக் கொள்ளக் கூடாது.

நிந்தைஇலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே; — நிந்தைமிகு
தாலநிழல் கீழிருந்தான் றன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். 4

மூவகை ஈகையாளர்

உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே;
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே; — முத்தலரும்
ஆம்கமுகு போல்வார் அதமர்; அவர்களே
தேம்கதலி யும்போல்வார் தேர்ந்து. 5

அருஞ்சொற்பொருள்

1. நயம் - மென்மை (இங்கே இன்சொல்லைக் குறிக்கும்), பூமாது - தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி, நண்ணுவாள் - சேர்வாள், கடினம் ஆம் ஆகில் - வன்மையானால் (கொடுஞ்சொற்களைப் பேசினால்), திரு - இலக்குமி, மரணம் - சாவு.

2. ஆனை மருப்பு - யானைத் தந்தம், கானம் - காடு, கவரிமான் - மயிரடர்ந்த ஒருவகை மான், வரிஉகிர் - கோடுகளையுடைய புலியினது நகம், மானே - மான்போன்றவளே, செறிந்த இடம் - சேர்ந்த இடம், சிறப்பு - பெருமை.

3. பொற்பு அறிவு - சிறந்த அறிவு, புத்திரப்பேறு – பிள்ளைச் செல்வம், எய்தலின் - அடைவதைக் காட்டிலும், பயந்ததனால் - பெற்றெடுத்ததனால், பயன் ஏது - பயன் உண்டோ ? (இல்லை), கரிக்கன்று – யானைக் கன்று, அமையாதோ? - போதாதோ?, ஓது - கூறு.

4. நிந்தை - பழி, நிந்தைமிகு - இழிவுடைய, அவர் நிந்தை - கீழ்மக்களுக்குரிய பழி, தாலம்- பனைமரம், ஆன்தன் பால் - பசுவினுடைய பால், அருந்திடினும் - பருகினாலும்.

5. உத்தமர் - நற்குணங்கள் நிறைந்த மேலோர், ஈயும் இடத்து - கொடுக்கும்போது, மத்திமர்- இடைப்பட்டவர், தெங்கு - தென்னை, மானுவர் - ஒப்பாவார், முத்து அலரும் - முத்தைப்போல் மலரும், கமுகு - பாக்குமரம், அதமர் - கீழோர், தேம் கதலி - இனிய பழம் தரும் வாழை.

பயிற்சி

(அ) விடை எழுதுக :

1. இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகளையும், வன்சொல் பேசுவதால் விளையும் தீமைகளையும் எழுதுக.
2. பிறந்த இடத்தில் சிறப்புப் பெறாதவை யாவை ?
3. அறிவுடைய மைந்தரைப் பெறுதலின் சிறப்பை நீதிவெண்பா எவ்வாறு விளக்குகிறது ?
4. 'நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேர்தல் கூடாது'—ஏன் ? விளக்குக.
5. உத்தமர், மத்திமர், அதமர் ஆகியோர்தம் ஈகையின் இயல்புகள் எத்தகையவை ?

(ஆ) பிரித்து எழுதுக :

பொற்கொடி, முத்தலரும், ஆன்றன்பால், அருங்கவரி.

(ஆ) சேர்த்து எழுதுக :

நா+இனிய, பொற்பு+அறிவு, நிந்தை+இலா, தேம்+கதலி.

(3) நன்னெறி

இன்சொல்லும் வன்சொல்லும்

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க! — ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நல்நுதால், ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு? 1

கல்விச் செருக்கைக் கைவிடுக.

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி — விடலே;
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 2

உயர்ந்தோர் இயல்பு

தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் — தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல்? 3

வாழையடி வாழை

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ? — பைந்தொடீஇ,
நின்று பயன்உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 4

பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை.

ஆக்கும் அறிவால் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க; — நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. 5

—சிவப்பிரகாசர்

அருஞ்சொற்பொருள்

1. மாசு அற்ற - குற்றம் இல்லாத, வன்சொல் - கொடுஞ்சொல், ஏனையவர் - மனத்தில் குற்றம் உள்ளவர், பிறிது என்க - இன்சொல்லுக்கு வேறான வன்சொல் என்று அறிக, நுதால் - நெற்றியை உடையவளே, நல்லோன் - நற்குணங்களை உடைய சாக்கிய நாயனார், எறிசிலை - வீசிய கல், கருப்பு வில்லோன் - கரும்பை வில்லாக உடைய மன்மதன், மலரோ - வீசிய மலராகிய அம்போ? விருப்பு - விருப்பமானது.

2. கடலே அனையம் - கடலைப்போன்றவராவோம், அடல் ஏறு அனைய - ஆண்சிங்கம் போன்ற, செருக்கு - கர்வம், ஆழ்த்திவிடல் - உங்களை அமிழ்ந்திக் கொள்ளாதீர், முனிக்கு அரசு - முனிவர்களின் தலைவராகிய அகத்தியர், முகந்து - கையால் வாரி, முழங்கும் - ஒலிக்கும், பனிக்கடலும் - குளிர்ந்த கடல்நீரும்.

3. தலைமை - முதன்மை (உயர்வு) உயர்ந்தோர் - அறிவு ஒழுக்கங்களில் சிறந்த சான்றோர், தம்மை மதியார் - தம்மை உயர்ந்தவராக எண்ணிக்கொள்ளமாட்டார், அடைந்தோர் - சார்ந்தவர், இழியினும் - தாழ்ந்தவர்களாயினும், செல்வர் - சென்று, இடர்தீர்ப்பர் - துன்பத்தைப் போக்குவர், அல்கு கழி - சிறிய உப்பங்கழி.

4. எந்தை - எங்கள் தந்தை, நல்கூர்ந்தான் - வறியவன் ஆனான், இரப்பார்க்கு - யாசிப்பவர்க்கு, ஈந்து - கொடுத்து, பைந்தொடீஇ - பசுமையான வளையலை அணிந்தவளே (தொடி - வளையல்), நின்று - நிலைத்து நின்று, பயன் உதவி - பயனாகிய பழங்களைத் தந்து, நில்லா - அதனால் அழிந்த, அரம்பை - வாழை, கன்றும் கனி உதவும் - வாழைக் கன்றும் பின் வளர்ந்து பழங்களைத் தரும்.

5. ஆக்கும் - எல்லா நன்மைகளையும் உண்டாக்கும் (உயர்ந்தவராகச் செய்யும்), அறிவால் அல்லது - கல்வி அறிவால் அல்லாமல், மீ கொள் - மேன்மையாகக் கருதப்படும், வேண்டற்க - விரும்பா தொழிக, அரவின் - பாம்பினது, பருமணி - பெரிய நாக ரத்தினத்தை, நீக்குபவர் யார் - வெறுப்பவர் எவர்? (ஒருவரும் இலர்), கடு - நஞ்சு, கவரார் - விரும்பி ஏற்றுக்கொள்ளமாட்டார்.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. இன்சொல், வன்சொல் என்று கூறப்பெறுவன யாவை ?
2. 'கல்விச் செருக்குக் கூடாது'—ஏன் ?
3. உயர்ந்தோர் இயல்பு யாது ? அதற்கு எடுத்துக் காட்டுத் தருக.
4. 'அரம்பையின் கீழ்க்கன்றும் உதவும் கனி'—இதனால் உணர்த்தப்படுவது யாது ?
5. 'பிறப்பினால் உயர்வு இழிவு கொள்ளற்க'—ஏன் ?

(ஆ) பிரித்து எழுதுக:

மாசற்ற, இன்சொல், முனிக்கரசு, பைந்தொடீஇ, உயர்விழிவு.

(இ) சேர்த்து எழுதுக:

வன்மை+சொல், பனி+கடல், இரப்பார்க்கு+ஈந்து, பயன்+உதவி.

(4) அறப்பளீசுர சதகம்

செய்ய வேண்டுவன

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும் ;கற்ற
வழியிலே நிற்க வேண்டும் ;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டும் ;தேடி
வளரறம் செய்ய வேண்டும் ;
சீலம்உடை யோர்களைச் சேரவேண் டும் ;பிரிதல்
செய்யா திருக்க வேண்டும் ;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும் ;கொண்டு
தியாகம் கொடுக்க வேண்டும் ;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும் ;நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும் ;
நம்பன்இணை யடிபூசை பண்ணவேண் டும்;பண்ணி
னாலும்மிகு பத்தி வேண்டும் ;
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அனகன் எமதருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீசுர தேவனே.

—அம்பலவாணக் கவிராயர்

அருஞ்சொற்பொருள்

ஆலம் அமர் கண்டன் - நஞ்சு பொருந்திய கழுத்தையுடைய சிவன், பூதி - திருநீறு, முண்டன் - நெற்றியையுடையவன், அனகன் - குற்றம் இல்லாதவன், மதவேள் - 'மதவேள்' என்னும் பெயரை யுடைய வள்ளல், நினைதரு - துதிக்கின்ற, சதுரகிரி - சதுரகிரி என்னும் மலை (கிரி - மலை), அறப்பளீசுரன் - அறப்பள்ளி என்னும் கோயிலில் உள்ள சிவபெருமான், வாலிபம் - இளமை, வளை கடல் - உலகைச் சூழ்ந்திருக்கும் கடல், அறம் - உள்ளத்தில் குற்றமில்லாமல் கொடுத்தல், சீலம் - ஒழுக்கம், பிரிதல் - நீங்குதல், தியாகம் - கொடை, ஞாலம் மிசை - உலகத்தில், தருமம் நாட்டல் - அறநிலையங்களை அமைத்தல், நம்பன் - கடவுள், இணையடி - இரு திருவடிகள், பத்தி - அன்பு, அனுதினம் - நாள்தோறும்.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. கல்வி, செல்வம் பற்றி அறப்பளீசுர சதகம் கூறுவன யாவை ?
2. நட்புப்பற்றிக் கூறப்படுவது யாது ?
3. யாருக்குத் தியாகம் கொடுக்கவேண்டும் ?
4. தருமம் செய்தல், இறைவனடியைப் பூசனை செய்தல் – இவற்றுக்கு இன்றியமையாதவை யாவை ?
5. அறப்பளீசுர தேவனின் பெருமைகள் யாவை ?

(ஆ) பிரித்து எழுதுக:

செந்தமிழ், ஞாலமிசை, ஆலமமர், அறப்பளீசுரன்.

(ஆ) இயற்கை அழகு

(1) மதுரை நகர் வளம்

தேன்பெருகுஞ் சோலைத் தென்னன் வளநாடு;
கனியுதிருஞ் சோலைக் கனமதுரை நன்னாடு;
வாழைவடக் கீனும் வடமதுரைப் பட்டணமாம்;
சோலைகிழக் கீனும்; துய்யபலா மேற்கீனும்;
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்;
கட்டுக்கலம் காணும்; கதிர்உழக்கு நெல்காணும்;
அரிதாள் அறுத்துவர, மறுதாள் பயிராகும்;
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்;
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்என்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை.

—அல்லி அரசாணி மாலை

அருஞ்சொற்பொருள்

தென்னன் - பாண்டியன், கனி - பழம், கனமதுரை - பெருமை பொருந்திய மதுரை, ஈனும்-காய்க்கும், துய்ய - சிறந்த, கண் - (1) கரும்பில் உள்ள கணு (2) தேங்காயில் உள்ள கண், மடை - வாய்க்கால், கட்டு - நெல்கட்டு, அரிதாள் - நெல்லை அரிந்த தாள், ஐங்கலத்தேன்கூடு - ஐந்து கலம் அளவு தேன் உள்ள பெரிய தேன் கூடு, மாளாது - முடியாது, போரடித்தல் - பிணைவிடுதல், சூடடித்தல்.

பயிற்சி

(அ) விடை எழுதுக:

1. மதுரை வளநாட்டின் சோலைகளின் சிறப்பை எழுதுக.
2. தென்மதுரையின் வயல்வளப் பெருமையை வரைக.

(ஆ) பிரித்து எழுதுக:

வடக்கீனும், ஐங்கலம், செந்நெல், தென்மதுரை.

(2) மழைக்குறி

ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தோற்று தேகுறி; — மலை
யாளமின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுதே. 1

நேற்றும்இன்றும் கொம்புசுற்றிக்
காற்ற டிக்குதே; — கேணி
நீர்ப்படு சொறித்தவளை
கூப்பி டுகுதே. 2

சேற்றுநண்டு சேற்றில்வளை
ஏற்ற டைக்குதே; — மழை
தேடியொரு கோடிவானம்
பாடி ஆடுதே. 3

போற்றுதிரு மாலழகர்க்(கு)
ஏற்ற மாம்பண்ணைச் — சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக் கொள்வோமே! 4

—முக்கூடற்பள்ளு

அருஞ்சொற்பொருள்

வெள்ளம் - பெருகி ஓடும் நீர், தோற்றுதே - தோன்றுகிறதே, மலையாளம் - தமிழ் நாட்டுக்கு மேற்கில் உள்ள பகுதி, ஈழம் - இலங்கை, சூழ - ஒரு சேர, கொம்பு சுற்றி - கொம்பெல்லாம் சுழற்றி, நீர்ப்படும் - நீரில் வாழும், சேற்று நண்டு - சேற்றில் வாழும் நண்டு, ஏற்றடைக்குதே - உச்சியை அடைக்கிறது, பண்ணை - வயல் (மருத நிலம்).

பயிற்சி

விடை எழுதுக :

1. மழை வருவதற்குரிய அறிகுறிகள் யாவை ?
2. மழைக்குறி கண்டு பள்ளர் எவ்வாறு மகிழ்ந்தனர் ?

சொற்பட்டியல்

அ

அங்ஙனம்
அச்சாணி
அஞ்சான்
அடக்கம்
அடல்
அடிமைத்தளை
அடுத்தடுத்து
அடையாளம்
அண்டையில்
அணி
அதமர்
அதிகாரம்
அதிர்ச்சி
அந்தி
அந்திமல்லி
அநியாயம்
அப்பால்
அமர்
அமருங்கள்
அமிழ்த்து
அமைந்து
அரங்கம்
அரம்பை
அரவு
அரிதாள்
அருந்தவம்
அருமை
அல்கு
அலங்காரம்
அலரும்
அலறினான்
அவித்து
அளவிடுதல்
அற்புதம்
அற்ற
அறப்பளீசுரன
அறப்போராட்டம்
அறம்
அறிவியல்
அறிவீனம்
அறுவடை
அறைதல்
அன்றாட வாழ்வு
அன்னப்பறவை
அன்னையார்
அனகன்
அனுதினம்
அனைய

ஆ

ஆக்கும்
ஆக்ரா
ஆங்கே
ஆசியஜோதி
ஆடகம்
ஆடு இயல்
ஆணை
ஆதரித்தல்
ஆரம்
ஆரவாரிப்பர்
ஆராய்ச்சி
ஆலம்
ஆலயம்
ஆலை
ஆலோசனைகள்
ஆவல்
ஆவிவிளக்கு
ஆழ்த்திவிடல்
ஆழம்
ஆற்றல்
ஆன
ஆனந்தம்
ஆனை

இ

இங்ஙனம்
இசைந்து
இசைத்தட்டு
இசைத்து
இசைவு
இடப்புறம்
இடர்
இடார்
இடையூறு
இணையடி
இத்தாலி
இமயம்
இமை
இயங்கும்
இயம்புகிறது
இயலாது
இரசாயனம்
இரத்தினங்கள்
இரந்தும்
இரலை மான்
இராமாயணம்
இருவாட்சி
இருள்வாசி
இல்லாள்
இல்லான்
இலங்கை
இழிவு
இளநீர்
இளம்பருவம்
இறும்பூது
இறைத்தல்
இன்சொல்
இன்மொழி

ஈ

ஈகை
ஈசன்
ஈட்டினர்
ஈடுபடுதல்
ஈடுபடுவேன்
ஈந்து
ஈழம்
ஈன்று
ஈன்றெடுத்த
ஈனும்

உ

உகிர்
உட்புறம்
உடுப்பது
உண்ணீர்மை
உத்தமர்
உதிர்ந்தன
உபசரித்தல்
உபாயம்
உமர்கய்யாம்
உயர்வு
உரம்
உரியதாகும்
உருக்கி
உருட்டி
உருப்பெற்றது
உரைகல்
உரையேல்
உலகப் புகழ்
உலகு
உலர்த்தி
உலை
உலோகம்
உவமை
உழக்கு

உழவுத்தொழில்
உழுந்து
உழைப்பு
உறக்கம்
உறுதியாக
உறுப்பு

ஊ

ஊட்டம்
ஊர்வாய்
ஊரும்
ஊற்றுப்பெருக்கு
ஊறும்

எ

எஞ்சிய
எண்ணுவன
எண்பது
எதிர்காலம்
எதிர்கொள்வர்
எதிர்பாராத
எந்தை
எய்தல்
எரியும்
எரு
எருது
எழுத்தாணி
எழில்
எளிய
எறி
என்னே

ஏ

ஏகி
ஏங்கி
ஏய்த்து
ஏவலாளர்
ஏவா
ஏனம்
ஏற்றடைக்கும்
ஏற்றம்
ஏற்றமாம்
ஏற்றவர்
ஏறு
ஏனையவர்

ஐ

ஐங்கலம்
ஐயம்

ஒ

ஒருவகை
ஒலி
ஒளி
ஒன்றற்கொன்று

ஓ

ஓங்கிய
ஓசை
ஓடாது
ஓது
ஓரம்
ஓரளவு
ஓலைச்சுவடி
ஓவியக்கலை

க

கட்சி
கட்டணம்
கட்டமுது
கட்டுச்சோறு
கடந்து
கடமைமான்
கடல்
கடல்துறை
கடல் மங்கை
கடற்கரை
கடற்காற்று
கடிகாரம்
கடிகை
கடினம்
கடு
கடைப்பிடித்து
கண்ணாடி
கண்ணீர்மை
கணவர்
கணிக்க
கத்தூரி
கதலி
கதிர்
கம்பி
கம்பு
கமுகு
கயிறு
கரடுமுருடு
கரிக்கன்று
கரி இழை
கருணை
கரும்பு
கரைதல்
கரை புரண்டு
கல்லறை
கல்லான்
கல்லூரி
கல்விச்சாலை
கலம்
கலிலியோ
கலைக்கோயில்
கலைகள்
கலைச்சிறப்பு
கவராா்
கவரி
கவரிமான்
கவலை
கவிகை மாடம்
கவிமணி
கவின்
கழஞ்சு
கழற்றி
கழி
கழிவுநீர்
களிப்பு
களைப்பாறல்
கற்பகத்தரு
கற்பலகை
கற்பனை
கற்பித்தார்
கற்றோர்
கறவை
கன்று
கனி

கா

காச்மீர்
காஞ்சிபுரம்
காண்பவர்
காணும்
காத்தல்
காய்ச்சி
காரியம்
கால்கடுக்க
காவலன்

கி

கிட்டியது
கிணறு
கிருட்டினா
கிலுகிலுப்பை
கிளிச்சிறை

கீ

கீழ்த்திசை
கீழ்மண்
கீழை நாடு
கீற

கு

குட்டி
குட்டை
குடிசைத்தொழில்
குடிப்பிறந்தார்
குடிபுகும்
குடுவை
குணம்
குப்பைகூளம்
குமரி
குமிழ்
குருட்டுவிழி
குலம்
குளம்
குளம்பு
குளிரும்
குறள்
குறி
குறிக்கோள்
குறிப்பிடத்தக்கவை
குறுக்குப் பாலம்
குறுங்காடு
குறுநிலம்
குறை
குன்றாதது
குன்றிமணி
குஜராத்

கூ

கூட்டுப்பண்ணை
கூட்டுறவுச் சங்கம்
கூடு
கூடை
கூத்தாடும்
கூப்பிடுகுது
கூம்பல்
கூர்ந்து
கூர்மை
கூரை
கூழாங்கல்

கெ

கெஞ்சினான்

கே

கேட்போர்
கேரளம்
கேழ்வரகு

கை

கைம்மாறு
கைவிட்டு

கொ

கொங்குநாடு
கொடி
கொடுமை
கொடை
கொணர்தல்
கொம்பு
கொலல்
கொள்வம்

கோ

கோட்டம்
கோடி
கோடு
கோதுமை
கோயில்
கோரப்பல்
கோலாகலமாய்
கோளாறு

ஞா

ஞாலம்

ச

சங்கம்
சங்கிலி
சஞ்சலம்
சட்டக்கல்வி
சட்டைப்பை
சடுகுடு
சத்தியகீர்த்தி
சதுரகிரி
சதுரமானது
சப்பான்
சம்புகன்
சமணப் பெரியோர்
சமப்படுத்தல்
சரிகை
சலவைக்கல்

சா

சாது
சாந்துணை
சாம்பல்
சாமை
சார்பு
சாளரம்
சான்றோர்

சி

சிக்கிம்
சித்தம்
சித்தன்னவாசல்
சித்திரம்
சித்தித்தான்
சிநேகிதன்
சிலம்பம்
சிலைகள்
சிவந்த
சிற்பங்கள்
சிற்றன்னை
சிறப்பு
சிறுக
சிறுதேர்
சிறுமதி
சின்னஞ்சிறு
சினை

சீ

சீர்திருத்தி
சீரணி அரங்கம்
சீலம்

சு

சுட்டு
சுடர் விளக்கு
சுரங்கம்
சுரசுரப்பாக
சுரப்பி
சுவர்
சுற்றுலா

சூ

சூழ்ந்த
சூழ

செ

செங்கற்பட்டு
செங்குத்தான
செதுக்கப்பட்டுள்ளன
செந்தமிழ்
செந்நெல்

செப்பனிட
செம்பழுப்பு
செய்
செய்குளம்
செய்யாது
செயற்கைநலம்
செருக்கு
செல்லாது
செல்வம்
செழியன்
செறிந்த
செறிவில்லாமல்

சே

சேடன்
சேமிப்பு மின்கலம்
சேரச்சேர
சேரான்
சேவித்தும்
சேற்றில்

சொ

சொந்தம்
சொல்
சொறி

சோ

சோதனைச்சாலை
சோலை
சோறிடும்

ட

டங்ஸ்டன்

த

தக்கமுறையில்
தக்கோர்
தகடு
தங்கம்
தச்சு
தஞ்சாவூர்த் தட்டு
தட்டெழுத்து
தடாகம்
தடுக்கு
தண்டமிழ்ப் புலவர்
தணித்து
தணிந்து
தத்தம்
தம்பிரான்
தமக்கை
தமிழன்னை
தமையன்
தயை
தரம்
தருமம்
தலைசாய்ந்து
தலைசிறந்த
தலைமை
தலையலங்காரம்
தவழ்கின்றன
தவளை

தா

தாகம்
தாங்காவண்ணம்
தாமரை
தாமரையாள்
தாலம்
தாள்
தாழ்வாரம்

தி

திகழ்கிறேன்
திடுக்கிட்டாள்
திரட்டி
திரவியம்
திரிந்து
திரு
திருந்தினான்
திரும்ப
திருமாலழகர்
திருவள்ளுவர்
திரை
திளைக்கின்றன
திறமை
தின்பண்டம்
தினை

தீ

தீர்ப்பர்
தீரச்செயல்
தீவினை

து

துக்கம்
துஞ்சுவது
துப்புரவு
தும்பு
துய்ய
துயரம்
துவக்கு
துள்ளிக் குதித்தார்
துறந்தார்
துறைமுகம்

தூ

தூயநீர்
தூயவர்
தூற்றி

தெ

தெங்கு
தெய்வப்புலவர்
தெள்நீர்
தெளிவாக
தெற்கு
தெற்கு ஆசியா
தென்னன்

தே

தேங்காய்
தேசம்
தேடவேண்டும்
தேடு
தேம்
தேய்த்து
தேர்
தேர்ந்து
தேரும்
தேளூர்
தேவன்
தேவி
தேன்

தொ

தொகுத்து
தொங்கிய
தொடக்கப்பள்ளி
தொடி
தொண்டைநாடு
தொத்திக்கிடந்த
தொப்பி
தொலைக்காட்சி

தோ

தோகை
தோற்றுதே

ந

நட்பு
நடுநாடு
நடுப்பாகம்

நடுவர்
நண்டு
நண்ணுவர்
நண்பசல்
நம்பன்
நயம்
நல்
நல்கூர்ந்தார்
நல்லகுடி
நல்லறம்
நல்லாசிரியர்
நல்லாட்சி
நல்லோன்
நல்வரவு
நலிந்து
நவ்விமான்
நற்புதல்வன்
நறுக்கினான்
நன்செய்
நன்மரம்
நன்மை
நன்றி
நன்னாடு
நன்னீர்

நா

நா
நாட்டி
நாடி
நாடித்துடிப்பு
நாணயம்
நாழி
நாழிகை
நாழிகைக் கணக்கர்
நாழிகை வட்டில்
நாற்றங்கால்
நாற்று

நி

நிச்சயம்
நிதியம்
நிந்தை
நிந்தையுரை
நிலநலம்
நிலப்பகுதி
நிலம்
நிலா
நிலைக்காது
நிலைமை
நிழல்
நிறை
நினைந்து
நினைவுச்சின்னம்

நீ

நீணிலம்
நீர்
நீர் சுரந்தது
நீர்ப்படு
நீர்மை
நீர்வளம்
நீராடுதல்
நீளத்தாண்டுதல்
நீளம்

நு

நுகர்ந்து
நுங்கு
நுட்பம்
நுண்ணிய
நுதல்
நுனி

நெ

நெகிழ்ச்சி
நெடுந்தூரம்
நெல் கட்டு
நெல் மணி
நெற் களஞ்சியம்

நே

நேசிக்கும்
நேசித்தனர்
நேப்பாளம்

ப

பக்கத்துணை
பக்குவம்
பகுத்திருந்தனர்
பகை
பகை நெஞ்சிலும்
பச்சைப்பசேல்
பசியாறி
பசுமை கலந்த
பசை
பட்டணம்
பட்டினி
பட்டினியால்
படகுகள்
படரும்
படை
படைநகும்
படைத்தான்
பண்டம்
பண்டிதர்
பண்ணவேண்டும்
பண்ணினாலும்
பண்ணை
பணி
பணி புரிந்தனர்
பத்தாயிரம்
பத்தி
பதநீர்
பயந்த
பயன்
பயிராகும்
பயில
பரபரப்பு
பரிசு
பரிதாபம்
பரிந்துரைத்தல்
பரிவு
பருகும்
பருப்பு
பருமணி
பருவம்
பல்கலைக் கழகம்
பல்பொருள்
பல்லவராயர்
பலா
பழமை
பழித்தேன்
பழுதடைந்தன
பள்ளர்
பள்ளிப்பருவம்
பள்ளிவாசல்
பளபளப்பாக
பற்பல
பறிக்க
பறித்து
பன்றி
பனங்கற்கண்டு
பனங்காய்
பனங்கிழங்கு
பனஞ்சாறு
பனந்தோப்பு
பனை
பனைத் தொழிலாளர்
பனைவெட்டு
பனைவெல்லம்

பா

பாங்கன்
பாட்டி
பாட்டு
பாடம்
பாடல்
பாடி
பாடுங்குயில்

பாதரசம்
பாதாளமூலி
பாதி
பாதுகாத்து
பாய்
பாய்முடைதல்
பாயும்
பார்
பாராட்டுகிறேன்
பாலன்
பாவம்
பாவித்தும்
பாழ்
பாழின்
பாளை
பாறை

பி

பிடிப்பிடியாக
பிடுங்கி
பிணைத்து
பித்தளை
பிரித்தெடுத்தல்
பிரிதல்
பிளவு
பிற்பகல்
பிறவி
பிறிது
பிறை

பு

புக்கு
புகழ்
புகழ்ந்து
புகைவண்டி
புண்படும்
புத்திரர்
புதுக்கோட்டை
புதுச் சாதனை
புதுமைகள்
புதைந்த
புருவங்கள்
புல்வெளி
புலப்படவில்லை
புலம்பினான்
புலமை
புழக்கத்தில்
புழுதியாக்கி
புள்ளிமான்
புளிக்கவைத்தல்
புன்செய்

பூ

பூக்கும்
பூங்கா
பூசை
பூதி
பூமாது
பூரிக்கிறது
பூனை

பெ

பெட்டி
பெண் நீர்மை
பெரிது
பெருக்கு
பெருகின
பெருங்குணம்
பெருந்தவம்
பெருநகரங்கள்
பெரும்பாலானவர்
பெரும்பான்மை
பெருமளவு
பெருமான்

பே

பேசும்படம்
பேசும்பொறி
பேடு
பேணின்
பேயன்
பேறு

பை

பைசா நகரம்
பைந்தொடீஇ

பொ

பொதியும்
பொது அறிவு
பொதுமறை
பொந்து
பொய் பேசாமை
பொருட்படுத்தாமல்
பொருத்தப்பட்டுள்ளன
பொருத்தமானது
பொருந்துவன
பொருள்
பொழுதுபோக்கு
பொளிந்து
பொற்குவியல்
பொற்பு
பொறுப்புணர்ச்சி
பொன்தாது
பொன்னாடை
பொன்னிறம்
பொன்னுரை

போ

போகா
போமின்
போர்பந்தர்
போரடித்தான்
போலவர்
போலிப்பம்
போற்றும்

ம

மக்கள்
மகுடம்
மஞ்சனச்சாலை
மஞ்சாடி
மடு
மடை
மண்ணின்
மண்டபம்
மண்ணெண்ணெய்
மணல்
மணற் கடிகாரம்
மணற் பரப்பு
மணற்பாங்கு
மணிமாடம்
மத்திமர்
மதவேள்
மதி
மதிப்பெண்
மதியார்
மது
மயங்காதவர்
மரணம்
மருண்ட
மருத்துவச்சாலை
மருப்பு
மலரும் மாலையும்
மலை
மலையாளம்
மழை
மழைக்குறி
மழைத்துளி
மற்று
மறந்தார்
மறுக்கிறார்,
மறுதாள்
மறைதல்
மன்று
மன்னித்து
மனக்கோட்டை
மனநிறைவு
மனமார
மனை
மனைவியார்

மா

மாக்கல்
மாசு
மாடு
மாணவர்
மாதாகோயில்
மாந்தர்
மாநாடு
மாநிலத்திர்
மாமண்டபம்
மார்க்கம்
மாரி
மாவட்டம்
மாளாது
மாளிகை
மாற்றறிதல்
மாறிடும்
மாறுபட்ட
மான்
மானுவர்

மி

மிகுதி
மிகை
மின் ஆற்றல்
மின்தொடர்வண்டி
மின்விளக்கு
மின்னல்

மீ

மீக்கொள்
மீனவர்

மு

முகந்து
முச்சாண்
முண்டன்
முத்து
முதலியன
முதன்மை
மும்தாஜ்மகால்
முயல்வோம்
முலாம்
முழங்கும்
முழுநிலா
முளை
முற்பகல்
முறிந்துவிட்டது
முனி

மூ

மூட
மூடி
மூதூர்
மூதேவி
மூலப்பொருள்
மூவா
மூழ்கி

மெ

'மெரினா'
மெருகு
மெழுகுதல்

மே

மேடு
மேலைநாடு

மை

மைந்தர்

மொ

மொகலாயர்

மோ

மோகனம்

ய

யமுனை

யா

யாவும்

ரூ

ரூபாய்

வ

வகுத்து
வச்சிரம்
வசதி
வஞ்சம்
வடஅமெரிக்கா
வடமதுரை
வடிகட்டிய
வடியச்செய்தல்
வடிவு
வணிகன்
வயிற்றுப்புறம்
வரலாறு
வரவு
வரவேற்று
வரவை
வரி
வருகை
வருத்தம்
வரைபடம்
வரைதல்
வலப்புறம்
வழக்கறிஞர்
வழங்குவர்
வழிபடுகின்றனர்
வழியில்
வழிவகுத்துள்ளது
வழுவழுப்பாக
வள்ளல்
வள்ளன்மை
வளநாடு
வளமான
வளர்
வளர்அறம்
வளர்ச்சி
வளவன்
வளை
வளைகடல்
வளையம்
வளையாதது
வற்புறுத்தி
வற்புறுத்தினார்
வறியவன்
வறுமை
வன்சொல்

வா

வாக்குறுதி
வாடுகின்றனர்
வாணன்திட்டு
வாதிடுவர்
வாய்க்கால்
வாயில்
வாராத
வாரிவழங்கும்
வாரும்
வாலிபம்
வாழ்
வாழ்த்தி
வாழ்நாள்
வாழ்வள்
வாழையடிவாழை
வான்
வானம்பாடி
வானளாவிய
வானொலி

வி

விசிறி
விஞ்ஞானம்
விண்
வித்தை
விபத்து
வியப்பு
வியர்க்குரு

விருந்து
விருப்பம்
விரைவில்
வில்லோன்
விலக்கி
விழித்தான்
விளக்கி
விளக்கு
விளையும்
விற்பனை

வீ

வீறும்

வெ

வெண்கலம்
வெண்சுடர்
வெப்பம்
வெல்லம்
வெள் எருக்கு
வெள்ளம்
வெள்ளி
வெள்ளை
வெளிப்படுத்தல்
வெளிப்புறம்
வெறுங்கை
வெறும்பானை

வே

வேங்கடம்
வேண்டற்க
வேண்டாள்
வேதாளம்
வேய்தல்
வேர்
வேலி
வேலைப்பாடு
வேற்றார்
வேறு பல

வை

வைத்தியன்
வையகம்
வையம்

ஸ்

ஸ்விட்சர்லாந்து

தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனம்
சென்னை.

மேலட்டை
அச்சிட்டோர் :

பிரசாத் பிராசஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை - 600 026